...istered No. M. 2330

"SIDDHANTHAM"
Vol. 39—No. 12

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

...ர் 39 | பராபவ மார்கழி 1966 டிசம்பர் | இதழ்

உள்ளுறை பக்கம்

சைவப் பெருமக்கள் கடமை ...	317
திருச்சி மாவட்டத் தேவாரப் பதிக ஊர்கள் (20) ...	321
பிறர் பார்வையில் நம் சமயம் ...	326
மதிப்புரை ...	336

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
...தவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா 3 தனிப்பிரதி 25 கா.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 39 | பராபவ மார்கழி 1966 டிசம்பர் | இதழ் 12

சைவப் பெருமக்கள் கடமை

(ஆசிரியர்)

இம்மாதம் 30, 31 1967 ஜனவரி 1 ஆகிய தேதிகளில் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 61-ஆம் ஆண்டு விழாவும் சைவர் மகாநாடு முதலியனவும், தாயுமான செல்வனாக எம்பெருமான் எழுந்தருளியுள்ள திரிசிராப்பள்ளியில் நடைபெறுகின்றன. விவரங்களைத் தனியே காணலாம். இதற்கு முன், 1941 இல் இங்கு சமாஜ மகாநாடு ஞானியார் சுவாமிகள் தலைமையில் நடந்தது. மீண்டும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பின் இப்போது கூடுவது மகிழ்ச்சிக்குரியது. இந்த நிலையில் நமது கடமையைச் சற்றே நினைவு கூர்வது அவசியமாகும்.

இந்தியா சுதந்திரம் பெற்று இருபது ஆண்டுகள் ஆயின. நாம் நம்மை ஒரு ஜனநாயகக் குடியரசாக அமைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த இருபது ஆண்டுகளில் நாம் என்ன சாதித்திருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்த்தால், எந்த இந்தியனும் தலை குனியாமல் இருக்க முடியாது. இந்த ஆண்டில் நம் நாட்டில் எல்லா விபரீதங்களும் ஒருசேர நிகழ்ந்திருக்கின்றன. மழையில்லாது சாகுபடி பாதிக்கப்

பட்டு உணவுப் பஞ்சம் மிக்க துன்பம் விளைவித்திருக்கிறது. அதை அடுத்து, கனமழை பெய்து விளைந்த பயிரில் ஒரு பகுதி வெள்ளத்தில் நாசமாயிற்று. நாட்டில், முக்கியமாகத் தமிழ்நாட்டில், பல இடங்களில் பெரும்புயல் அடித்து, மிக உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் விளைவித்திருக்கிறது. இவை இயற்கையால் ஏற்பட்ட சோதனைகள்.

மக்களால் ஏற்பட்ட கொடுமையோ இன்னும் பல மடங்கு துயரமுடையது. மொழி வெறியும், இனவெறியும் கொண்ட மக்கள், தாங்கள் நாட்டை எவ்வளவு பாழ் படுத்துகிறோம் என்பதை உணராது, ரயில்வே நிலையங்கள், ரயில் பாதைகள், அரசாங்கத்தின் காரியாலயங்கள், நாட்டின் பொதுச் சொத்தான ரயில், பஸ் போன்றவற்றைத் தீக் கிரையாக்கினார்கள். மாணுக்கர் பேரால் தீயமக்கள் பள்ளி களை அழித்தார்கள். இப்படிப்பட்ட அரக்கச் செயல்கள் இன்னும் நடைபெறுகின்றன. பசுவதையை நிறுத்த வேண்டுமென்று சொல்லி, கிளர்ச்சிக்காரர்களும் அராஜகத் தாரும் ஒன்று சேர்ந்து கொலையும் கொள்ளையும் தீவைத் தலும் செய்திருக்கிறார்கள்.

இவை யாவும் நாம் வெட்கித் தலை குனிய வேண்டிய செய்திகள். நாகரிகம் படைத்த எந்தக் குடிமகனும் இவற்றை எண்ணி வெட்கிக் கண்ணீர் விடாமல் இருக்க முடியாது. இரண்டாவது உலகயுத்தத்தின் பின் முன்னமே சர்வாதிகார ஆட்சியில் ஒடுங்கிக்கிடந்த சீனாவானது, ஒற்றுமைப்பட்டு, குடியரசாக ஓங்கி, வளர்ந்து, வீறு கொண்டெழுந்து இன்று ஏக காலத்தில் அமெரிக்காவையும் ரஷ்யாவையும் எதிர்க்கத் துணிந்து நிற்கிறது. நம் எல்லை யில் உள்புகுந்து, நம் நாட்டின் பல பகுதிகளைக் கவர்ந்து கொண்டு, நமக்குப் பேராபத்தாக இருக்கிறது. அது செய்கிற அக்கிரமங்களை நாம் வன்மையாகக் கண்டித்த போதிலும், பத்து ஆண்டுகளில் உலகப் பேரரசுகளில் ஒன்றாக வளர்ந்து இருப்பதைக் கண்டு வியக்காமலிருக்க முடியாது.

அதே சமயத்தில், இருபது ஆண்டுகளில் இந்தியா அடைந்துள்ள நிலைமையை மேலே குறிப்பிட்டோம். இந்த நிலைமையில் சைவர் என்பவர் ஒவ்வொருவரும் தம்முடைய கடமையைச் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்விச் சாலைகளில் படிப்பவர்கள் நம்முடைய குழந்தைகளே. நம் குழந்தைகளைப் பெரியோரிடத்தில் மரியாதையுடையவராக, கல்வியில் கருத்துடையவராக, சமய ஒழுக்கத்தில் தலை சிறந்தவராக, தீமை செய்யாதவராக, தீமைக்குப் பணியாத வராக நாம் வளர்த்தால், பள்ளியில் இவ்வித வளர்ச்சி பெறாது வளர்ந்து வந்துள்ள பிள்ளைகளால் வரும் ஒழுங்கீனங்கள் குறையும். இன்று பள்ளியில் படிக்கும் சிறு மாணாக்கன் நாளை பதவியிலமர்ந்து நாட்டை நடத்து கின்றான். எனவே, இளம்பிள்ளை வாழ்க்கைதான் அவன் பள்ளி வாழ்க்கையை மட்டுமல்ல, நாட்டு வாழ்க்கை முழுமை யுமே ஒழுங்கு படுத்துகிறது.

இதை நாம் நன்குணர்கிறோம். ஆனால் உணர்ந்து நம் கடமையைச் செவ்வனே நிறைவேற்றுவதில் பாரா முகமாய் இருக்கிறோம். எதிர்கால இந்திய உலகமும், சைவ உலகமும் செம்மையாக இருக்க வேண்டுமானால், அது நம் பிள்ளைகளை எப்படி வளர்க்கிறோம் என்பதைப் பொறுத் திருக்கிறது. குடும்ப வாழ்க்கையில் சைவ மணம் கமழ வேண்டும். பெரியோரும், பிள்ளைகளும் தவறாமல் கோயிலுக்குப் போக வேண்டும். கோயில் அருகில் இல்லாதபோது, இல்லத்திலேயே இறை வழிபாடு செய்தல் வேண்டும். திருநீறு முறையாக அணிதல் வேண்டும். திருமுறைகளை நாள்தோறும் ஓத வேண்டும். இந்த மூவகைப் பயிற்சியும் ஒருவகை ஒழுங்கைத் தருவதோடு கூட, உள்ளத்தில் சிறந்த உறுதியையும் வலிமையையும் தருகிறது. இந்த உறுதியும் வலிமையும் சிறு பிள்ளையின் பள்ளி வாழ்க்கையில் அருந்துணை யாக நிற்கும். பள்ளியில் படிக்கும் சைவப் பிள்ளைகள் அனைவரும் இத்துணையைப் பெற்றிருக்கும் காலத்தில் பள்ளி

இந்த வலிமையுடையோர் வழியாக இயங்குமேயன்றி ஒழுக்கவீனர் வழியாக இயங்காது.

அறிவுடையவன் உலகம் போகிற வழியே நானும் போகிறேன் என்று கூறமாட்டான். உலகை எதிர்த்துச் சரியான வழியே நான் போவேன் என்று உறுதிபூண்டு நடப்பான். எல்லோரும் புகைப் பிடிக்கிறார்கள் என்றால், நம் பிள்ளைகள் புகைப் பிடிக்காமல் காப்பது நம் கடமை. எல்லோரும் புலால் கடையை நோக்கி நடக்கிறார்கள் என்றால், நம் பிள்ளைகள் சைவஉணவு கொள்வதே உடலுக்கு உறுதியானது என்ற வைராக்கிய உணர்வு பெறும்படி நாம் செய்ய வேண்டும். சினிமாவும் இவற்றுடன் சேர்க்கத் தக்கதே.

பிள்ளைகளுக்கு இவ்விதமான வைராக்கிய உணர்வு தருவதில் நாயன்மார்கள் வரலாறுகள் துணை செய்யும். அவ்வரலாறுகளில் பெரியோர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும். ஓநாயும் ஆட்டுக் குட்டியும் என்ற கதையை நம்புகின்ற குழந்தை, அப்பர் வாழ்க்கையையும், அப்பூதி வாழ்க்கையையும், கலயரையும், கண்ணப்பரையும் நம்பாமல் போகாது. மோகனதாஸ்கரம்சந்த் என்ற சிறு பையன் அரிச்சந்திரன் கதையையும், பிரகலாதன் கதையையும் கண்டு வாழ்க்கையை நெறிப்படுத்திக் கொண்டு, செயற்கரிய செய்தான் என்று நம் கண் முன் கண்டோம். பலர் இவ்வாறு செய்ய முடியும் என்று நாம் நம்பவேண்டும். நம்பிக்கை இன்மையே சீர்கேடு அனைத்துக்கும் வித்து.

சைவ மக்கள் இங்குக் கூறியவற்றுள் தங்கள் கருத்தைச் செலுத்துவார்களாக. நம்மைச் சூழ்ந்து இஸ்லாமும் கிறித்துவமும் என்ன வேகத்தில் வளர்கின்றன என்பதைக் காணுதவர் இருக்க முடியாது. யாரிடமும் நமக்குப் பகைமையில்லை. நம்சமயத்தை அரண்செய்து வளர்ப்பது நம் பொறுப்பு. சைவசமயம் அநாதி காலமாக உலகில் தோன்றி, வளர்ந்து விளங்குவது. பலகோடி மக்களுடைய வாழ்க்கையைப் பல்லாயிரமாண்டுகளாக நெறிப்படுத்தி வந்திருக்கிறது. அவ்வாறு இனியும் என்றும் நெறிப்படுத்த வேண்டுமென்பதே நம்முடைய ஆசை. திருவருள் துணை நிற்க.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர் தங்கள் சந்தாத் தொகை ரூபாய்மூன்று 31-12-66க்குள் அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். வி. பி. பியில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப் பெயர். 2. சந்தா எண். 3. தெளிவான முகவரி. 4. மாவட்டம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழ நாட்டில் உள்ள அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையினை அரசியலார் இசைவு பெற்றுத் தவறாது அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. சிவநேசன் அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி :—

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை—4.

திருச்சி மாவட்டத் தேவாரப் பதிக ஊர்கள் (20)

(தி. கி. நாராயணசாமி நாயுடு)

குறிப்புகள் : அ—அப்பர், ச—சம்பந்தர், சு—சுந்தரர், மூ—மூவர்

[ ] கோயில் பெயர். ( ) வழங்கும் பெயர். * திருமுறை எண், பதிக எண், பதிக முதல்—குறிப்பு பண். || திருவிராகம். £ கூடல் சதுக்கம்.

ஊர்கள் பெயர் முன் 'திரு' சேர்த்துப் படிக்கவும்.

1 அன்பில் [ஆலந்துறை] (ச—அ.)
*1/33 கணைநீடெரி— தக்கராகம்
5/80 வானஞ்சேர் —2

2 ஆனைக்கா (மூ)
2/23 மழையார்—இந்தளம்
||3/53 வானைக்காவில்— கௌசிகம்

|| 3/109 மண்ணது—
பழம் பஞ்சுரம்
5/31 கோணை
6/62 எத்தாயர்
6/63 முன்னுணை
7/75 மறைகள்—காந்தா
ரம் —7

3 ஈங்கோய் மலை (ச)
1/70 வானத்துயர்—
தக்கேசி —1

4 உறையூர் [மூக்கீச்சுரம்]
(ச)
2/120 சாந்தம்—செவ்
வழி—1

5 எறும்பியூர் (அ)
5/74 விரும்பி
6/91 பன்னிய —2

6 கடம்பந்துறை [குளித்
தலை] (அ)
5/18 முற்றிலா —1

7 கருவூர் [ஆன்-நிலை] (ச)
2/28 தொண்டெ—இந்
தளம் —1

8 கற்குடி (உய்யக்
கொண்டான்மலை) (மூ)
1/43 வடந்திகழ்—தக்க
ராகம்
6/60 மூத்தவனை
7/27 விடையாரும்—
நட்டராகம் —3

9 கோவந்தபுத்தூர்
[விசயமங்கை] (ச-அ.)
3/17 மருவமர்—காந்தார
பஞ்சமம்
5/71 குசையும் —2

10 சிராப்பள்ளி (ச—அ)
1/98 நன்றுடையானை—
குறிஞ்சி
5/85 மட்டுவார்குழல்—2

11 நெடுங்களம் (ச)
1/52 மறையுடையாய்—
பழந்தக்கராகம் —1

12 பராய்த்துறை (ச-அ)
1/135 நீறு சேர்வது—
மேகராகக்குறிஞ்சி
5/30 கரப்பர் —2

13 பழுவூர் (ச)
2/34 || முத்தனே-இந்
தளம் —1

14 பாச்சில் [ஆச்சிராமம்]
(திருவாசி) ச-சு
1/44 துணிவளர்—
தக்கராகம்
7/14 வைத்தனன் —2

15 பால்—துறை (ச)
1/56 காரார்—பழந்தக்க
ராகம் —1

16 பைஞ்ஞீலி (மூ)
3/14 ஆரிடம்—காந்தார
பஞ்சமம்
5/41 உடையர்
7/36 காருலா-கொல்லி—3

17 மழபாடி (மூ)
2/9 களையும்—இந்தளம்
3/28 காலையார்-கொல்லி
3/48 அங்கை-கௌசிகம்
6/39 நீறுஏறு
6/40 அலை-அடுத்த
7/24 பொன்னார்—நட்ட
ராகம் —6

18 மாந்துறை (ச)
2/110 செம்பொன்னூர்—
நட்டராகம் —1

19 வாட்போக்கி [ஐயர்மலை, ரத்னகிரி (அ)
5/86 காலபாசம்

20 வெஞ்சமாகூடல் (சு)
7/42 எறிக்குங்கதிர்—
கொல்லிக்கௌவாணம்-1

ஆக பதிகங்கள் 41

இவ்வூர்களில் உள்ள கல்வெட்டுக்களின் விபரத்திற்கு 'சித்தாந்தம்' தொகுதி 38 (1965) பக்கம் 345 பார்க்க.

இவற்றில் காவிரிக்குத் தென்கரை ஊர்கள்—8 அவை :

1 வாட்போக்கி (ஐயர்மலை, ரத்னகிரி)
2 கடம்பந்துறை (குளித்தலை)
3 பராய்த்துறை
4 கற்குடி (உய்யக் கொண்டான்மலை)
5 உறையூர் [மூக்கீச்சுரம்]
6 சிராப்பள்ளி
7 எறும்பியூர்
8 நெடுங்களம் என்பன.

காவிரிக்கு வடகரை ஊர்கள் 10 (9 முதல் 18) அவை :

9 ஈங்கோய்மலை
10 அன்பில் [ஆலந்துறை]
11 மாந்துறை
12 பைஞ்ஞீலி
13 பாச்சில் [ஆச்சிராமம்] (திருவாசி)
14 மழபாடி
15 பழுவூர்—கீழப்
16 கோவந்தபுத்தூர் [விசயமங்கை]

இவற்றில் 7 (10 முதல் 16) ஊர்கள் கொள்ளிட வடகரை ஊர்கள்

திரு அரங்கத் திடலில் 2 ஊர்கள். அவை :

17 பால்—துறை
18 ஆனைக்கா.

17—ம் 18—ம் காவிரிக்கும் அதன் கிளை ஆறு கொள்ளிடத்திற்கும் இடையில் ஆற்றிடைக்குறையில் உள்ளன.

கொங்குநாட்டு ஊர்கள்

19 கருவூர்—[ஆன்-நிலை]
20 வெஞ்சமாகூடல்

இவை 2—ம் இந்த மாவட்ட எல்லையில் உள்ளன.

ஆழ்வார்கள் பாடிச் சிறப்பித்தவை

1 அரங்கம்
2 வெள்ளறை (உய்யக் கொண்டார் பிறந்தது)
3 அன்பில்
4 உறையூர் (திருப்பாணாழ்வார் பிறந்தது)
5 கரம்பனூர் (உத்தமர் கோயில்,
6 திருமயம்

இவற்றில் அன்பிலும், உறையூரும் தேவாரப் பதிகம் பெற்ற ஊர்கள். உறையூர், காவிரித் தென்கரையில் உள்ளது. திருமயம் புதுக்கோட்டை வட்டத்தில் இருப்பது. திரு அரங்கம் காவிரிக்கு வடக்கிலும் கொள்ளிடத்தின் தெற்கிலும் உள்ளது. ஆனைக்கா பால்-துறை, திரு அரங்கத்துடன் ஆற்றிடைத் திட்டில் உள்ளவை. ஏனைய 3-ம் கொள்ளிட வடகரை ஊர்கள்.

1 மூவர் பதிகமும் பெற்றவை (4) :

1 ஆனைக்கா, 2 கற்குடி (உய்யக்கொண்டான்மலை), 3 பைஞ்ஞீலி, 4 மழபாடி.

2 சம்பந்தர் பதிகம் மட்டும் பெற்றவை (7) :

1 ஈங்கோய்மலை
2 உறையூர்
3 கருவூர்
4 நெடுங்களம்
5 பழுவூர் கீழப்
6 பால்-துறை
7 மாந்துறை.

3 அப்பர் பதிகம் மட்டும் பெற்றவை (3) :

1 எறும்பியூர், 2 கடம்பந்துறை (குளித்தலை)
3 வாள்-போக்கி (ஐயர் மலை).

4 அப்பரும் சம்பந்தரும் பாடிய பதிகங்கள் பெற்றவை (4) :

1 அன்பில், 2 கோவந்தபுத்தூர், 3 சிராப்பள்ளி, 4 பராய்த்துறை.

5 சுந்தரர் பதிகம் மட்டும் பெற்றது (1) :
வெஞ்சமாகூடல்.

6 சம்பந்தரும் சுந்தரரும் பாடிய பதிகங்கள் பெற்றது (1) :
பாச்சில்.

ஆக ஊர்கள் 20

திருமுறைப்படி வரும் பண், பதிக எண், ஊர் வருமாறு :

I. தக்கராகம் (3), 33 அன்பில், 43 கற்குடி, 44 பாச்சில்; பழந்தக்கராகம் (2) 52 நெடுங்களம், 56 பால்-துறை; தக்கேசி, 70 ஈங்கோய்மலை; குறிஞ்சி, 98 சிராப்பள்ளி; மேகராகக்குறிஞ்சி, 135 பராய்த்துறை. || 8

II. இந்தளம் (4) 9 மழபாடி, 23 ஆனைக்கா, 28 கருவூர், 34 பழுவூர்.

|| நட்டராகம் (1) 110 மாந்துறை
செவ்வழி (1) 120 உறையூர் 6

III. காந்தாரபஞ்சமம் (2) 14 பைஞ்ஞீலி, 17 கோவந்த புத்தூர்

£ கொல்லி (1) 28 மழபாடி
கௌசிகம் (2) 48 மழபாடி, 53 ஆனைக்கா 6
பழம் பஞ்சுரம் (1) 109 ஆனைக்கா

IV. இல்லை

V. குறுந்தொகை

18 கடம்பந்துறை
30 பராய்த்துறை
31 ஆனைக்கா
41 பைஞ்ஞீலி
71 கோவந்தபுத்தூர்
74 எறும்பியூர்
80 அன்பில்
85 சிராப்பள்ளி
86 வாள்போக்கி 9

VI. தாண்டகம்

39, 40 மழபாடி
60 கற்குடி
62, 63 ஆனைக்கா
91 எறும்பியூர்

VII * தக்கராகம் 14 பாச்சில் 6

|| நட்டராகம் (2) 24 மழபாடி, 27 கற்குடி
£ கொல்லி 36 பைஞ்ஞீலி
கொல்லிகௌவாணம் 42 வெஞ்சமாகூடல்
காந்தாரம் 74 ஆனைக்கா 6

தக்கராகம் 1, 7 நட்டராகம் 2, 7, கொல்லி 3, 7, திருமுறைகளில் வருவது காண்க.

வழிக்குறிப்புகள் :— திருச்சி மலைக் கோட்டைத் தெப்பக் குளத்திலிருந்து சிராப்பள்ளிமலை, உறையூர், கற்குடி (உய்யக் கொண்டான் மலை) வயலூர் : திருச்சி-தஞ்சை சாலை வழி எறும்பியூர் (6கல்), நெடுங்களம் : (துவாகுடி இறங்கி 2 கல்) திருச்சி-முசிரி-நாமக்கல் சாலை வழி பாச்சில் (7கல்) ஈங்கோய்மலை (முசிரிக்கு அடுத்த 2வது கல் : கொள்ளிடம் கடந்து லால்குடி சாலை வழி மாந்துறை, தவத்

துறை(லால்குடி)-அன்பில்; காவிரி கடந்து அரங்கம், ஆனைக்கா, பால்-துறை (திருவளர் சோலை பஸ்); காவிரி தென்கரை திருச்சி—கரூர் சாலை வழி பராய்த்துறை, கடம்பந்துறை (குளித்தலை 23 கல்) வாட்போக்கி (ஐயர் மலை, குளித்தலை—மணப்பாறை சாலையில் 5 கல்) கரூர், வெஞ்சமாகூடல் (கருவூர்-அரவக் குறிச்சி வழி 11 வது கல் ஓந்தாம்பட்டியிலிருந்து 3 கல்) : மழபாடி, பழுவூர், கோவந்தபுத்தூர்தொடர்ந்து தனித்தனியாகக் காணலாம். ஐயாற்றிலிருந்து மழபாடி பழுவூரும் புறம்பயத்திலிருந்து கோவந்த புத்தூரும் கொள்ளிடத்தைக் கடந்து காணத்தக்கவை. ஆறுயர் மங்கலவூர் லால்குடிக்கு அண்மையிலும், பிடவூர், திருப்பட்டூர், திருக்கயிலாயஞான வுலாவை சேரமான் பெருமாள் வெளியிட்டது. திருச்சி—பெரம்பலூர் வழியில் ஊட்டத்தூர் இறங்கியும் காணலாம். சோழ வரலாற்றில் சிறந்த கல்அணை, காமரசவல்லி சமயபுரம் மாரி அம்மன் காணத்தக்கவை, எல்லாவற்றிற்கும் பஸ் வசதிகள் உண்டு.

* * *

பிறர் பார்வையில் நம் சமயம்

ஆல்பர்ட் சுவிட்சர் (Albert Scheveitzer)

கொ. நீ. சிங்காரவேலு, M. A.,

(சென்ற இதழின் தொடர்ச்சி)

பௌத்தம் :—

புத்தர் தம் எண்பதாவது வயதில் சுமார் கி. மு. 485ல் உயிர் நீத்தார். அவருடைய அறவுரைகள் இந்தியாவின் வடகிழக்குப் பிரதேசத்தில் பேசிவந்த பாலி மொழியில் எழுதப்பட்டன. தம் சீடர்களைத் தாய்மொழியில்தான், தம் கொள்கைகளைப் பரப்பவேண்டுமென்று பணித்தார்.

புத்தர் ஒரு சமூக சீர்திருத்தக்காரர். அவர் கொள்கைகள் மார்டின் லூதர் அவர்களை ஞாபகப்படுத்துகின்றன.

புத்தர், உலக இன்பத்தைத் துய்த்தலே வாழ்க்கையின் குறிக்கோள் என்னும் போக்கையும் அதற்கு நேர்மாறாக உலகத்தை வெறுத்துத் தங்களை ஒறுத்தலையே குறிக்கோளாகக் கொள்ளும் போக்கையும் கண்டித்தார். அவர் உள்ளத் தூறவிற்கே மதிப்புக் கொடுத்தார். உள்ளம் பற்றற்றுத் தூய்மையாக இருந்தால் இயற்கையான தேவைகளை நிறைவு செய்வதில் தவறில்லை என்று கருதினார். அவர் தம் உடம்பைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கியபோது மெய்யறிவு பெறவில்லை; உணவு அருந்தியபின் தான் மெய்யறிவு பெற்றார்.

புத்தர் கொள்கைப்படி எவனொருவன் தூய்மையான மனம் உடையவனாக இருக்கிறானோ எவனொருவன் உலக முழுவதற்கும் கருணை சுரக்கும் இன்ப உணர்ச்சியுடையவனாக இருக்கிறானோ அவனே உலகப்பற்றை விட்டவனாவான். அவர் கொள்கைப்படி தியானத்தில் ஒழுக்கவியலும் அடங்கியுள்ளது.

புத்த மதம் இந்தியாவில் மறைந்தொழிந்தது. ஆனால் பழங்கால பௌத்தம் (ஹினாயனா) இலங்கையில் இருக்கிறது. பிற்கால பௌத்தம் (மஹாயனா) நேபால், சைனா, திபத், கொரியா, ஜப்பான் ஆகிய தேசங்களில் நிலவுகின்றது.

இந்தியாவிலிருந்து பௌத்தம் ஒழிந்ததற்குக் காரணம் இந்துக் கொள்கை பௌத்தக் கொள்கையைக் காட்டிலும் ஆழமும் அகலமும் உடையது. பௌத்தம் பிறப் பிறப்பாகிய சுழற்சியிலிருந்து விடுதலைபடைவதைப் பற்றி மாத்திரம் கூறுகிறது. ஆனால் இந்து மதமோ இக் கொள்கையோடு ஒரு பரம்பொருளுடன் இணைவதையும் கூறுகிறது.

பிற்காலத்துப் பிராமணியம் :—

பிரம்ம சூத்திரம் :—

பிற்காலத்துப் பிராமணியம் அல்லது வேதாந்தக் கொள்கைகள் பாதராயணர் எழுதிய பிரம்ம சூத்திரங்களில்

உருவம் பெற்றன. இவர் சுமார் கி. பி. 4ஆம் நூற்றாண்டில் இருந்தவர். சூத்திரம் என்றால் இழை என்பது பொருள். பின் விதி என்று பொருளாயிற்று. இந்நூலில் 555 சூத்திரங்கள் உள்ளன.

சாங்கிய, பௌத்த ஜைனக் கொள்கைகளை மறுக்கும் நோக்கத்தோடு உபநிஷத் கருத்துக்களைக் கையாள்கின்றது இந்நூல். ஆனால் இந்நூலால்கூட உபநிஷதத் கருத்துக்களுக்கு முன் பின் இணைவு (Consistency) தரமுடியாது.

சங்கரர் :—

சங்கரர் பிரம்ம சூத்திரத்தை முற்றிலும் பின்பற்றவில்லை. பல இடங்களில் தம் கொள்கைகளைப் பிரம்ம சூத்திரத்தில் ஏற்றுகிறார்.

பிற்காலத்துப் பௌத்தம் போல இவரும் ஐம்புலன்களால் அறியப்படும் உலகம் வெறும் கற்பனை உலகம் என்று நம்புகிறார். ஆனால் இடைவிடாது கற்பனை செய்வதால் உலகம் நடைமுறைக்கு உண்மைப் பொருளாகின்றது என்று கூறுகிறார்.

பிற்காலத்துப் பௌத்தம் போலவே சங்கரருக்கும் இரண்டு தரத்து உண்மைப் பொருள்கள் உண்டு. உண்மையை, மேலான உண்மைப்பொருள், கீழ்த்தரத்து உண்மைப் பொருள் என்று இருகூறாகப் பிரிக்கிறார். மனிதன், தானும் பிரமமும் வேற்றுமை அற்ற பொருள் என்பதை ஆராய்ச்சியால் அறிந்து அதுவேயாக யிருப்பது மேலான உண்மைப் பொருள். கீழ்த் தரத்து உண்மைப் பொருள் மனிதன் பிறந்திறந்து விடுதலை அடைவது. ஐம்புலன்களால் அறியப்படும் உலகை மெய்ப்பொருள் என்று நம்பி, பிரமத்தின் உண்மை நிலையை அறியாது அதைத் தெய்வமாகப் பாவித்துத் தொழுவது கீழ்த் தரத்து உண்மையாகும் என்கிறார். உபநிஷத்திலும் இவ்விரண்டு தரத்து உண்மை நிலைகள் வேறுபடுத்திக் கூறப்படுகிறன என்று சங்கரர் தவறாகக் கூறுகிறார்.

பிரமத்தைத் தெய்வமாகப் பாவித்துத் தொழுது பிறப்பிறப்பிலிருந்து விடுதலை பெற்றுப் பேரின்பம் அடைகிறவர்கள் கீழ்நிலை உண்மைப் பேற்றைத்தான் அடைகிறார்கள் என்றும், யுகாந்தர முடிவில் கீழ்நிலைப்பேறு, பிரமத்தோடு ஒன்றுபடுகின்றது என்றும் கூறுகிறார்.

சங்கரர் ஏன் இவ்வாறு இரண்டு உண்மை நிலைகளைக் கூறி இடர்ப்படுகிறார் என்றால், அவர் காலத்திலேயே மனிதனுக்கு வேறாய பரம்பொருள் ஒன்றுண்டு; அதை அன்பால், பக்தியால் அடையலாம் என்ற இந்துக் கொள்கை வலுத்துவிட்டது. ஆகையால் பிராமணியம் இக் கொள்கையைப் புறக்கணிப்பதற்கில்லை. பிராமணியம் இதை மறுத்தாகவேண்டும். அல்லது இதற்குத் தம் கொள்கைகளில் இடம் கொடுத்தாக வேண்டும். ஆகையால் இரண்டாவது வழியைத்தான் பின்பற்ற வேண்டியிருக்கிறது. இதனால்தான் சங்கரர் இறைவனைத் தொழுது பேரின்பநிலை அடைவதை இரண்டாந்தர நிலையென்று கூற நேர்ந்தது.

இறைவனுக்கு இடைவிடாது அன்பு செலுத்தி இறைவனை அடையும் கொள்கை பிராமணிய பிரம்மக் கொள்கையைக் காட்டிலும் உயர்ந்தது; செயல்முறைக்கு ஒத்தது; உயிர்த் துடிப்புடையது. இக் கொள்கையில் ஒழுக்கவியலுக்கு இடமுண்டு. காலப்போக்கில் இக்கொள்கை பிரம்மக் கொள்கையை வெல்லும் என்பதில் ஐயமில்லை.

சங்கரர் கொள்கைகளில் ஒழுக்கவியலுக்கு முக்கியத்துவம் இல்லை. பிறப்பிறப்பிலிருந்து விடுதலையடைவதற்கு ஞானம் மாத்திரம் போதாது. ஒழுக்கவியலும் தேவை என்ற கொள்கையை மறுக்கிறார். உலகம் மாயை என்ற கொள்கையில் ஒழுக்கவியல் இடம் பெற வழியில்லை.

பக்தி மார்க்கம்

சிவன், காளி ஆகிய கடவுள் கொள்கைகள் திராவிடக் கொள்கைகள். கருமை நிறக் கடவுளாகிய கிருஷ்ணனும்

திராவிடர்களிடத்திலிருந்து தொடங்கியிருக்கலாம். வேதத்தில் விஷ்ணுவிற்கு முக்கிய இடமில்லை. பிற்காலத்தில் விஷ்ணுவின் நிலை உயர்ந்தது.

பக்திக் கொள்கைக்குத் தாயகம் தென்னாடு என்று கூற இடமுண்டு. பிராமணியக் கொள்கைகளில் பக்திக்கும் இடம் தந்த சங்கரர் தென்னாட்டிலிருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பகவத் கீதை

இது கி.மு. மூன்றாம் நூற்றாண்டு நூலாக இருக்கலாம். முதன் முதலில் இது நூலாக எழுதப்பட்டுப் பின், மகாபாரதத்தில் நுழைக்கப்பட்டிருக்கலாம்.

உலகம் மாயை என்ற பிராமணியக் கொள்கையை இது ஒத்துக்கொள்கிறது. ஆனால் உலகத்திலிருந்து ஒதுங்கி வினை செய்யாமல் இருப்பதை ஆதரிக்கவில்லை. "மனிதன் வினையைச் செய்யாமல் விட்டுவிடுவதாலும், அதைச் செய்வதாலும், இவ்விரண்டு வகையாலும் இறைவனை அடையலாம்; ஆனால் இவ்விரண்டில் தன் கருமத்தைச் செய்யும் நெறிதான் சிறந்தது" என்று கிருஷ்ணன் கூறுகிறார்.

ஆனால் கிருஷ்ணன் கருமம் என்று கூறுவதெல்லாம் ஜாதியின் அடிப்படையில் வகுக்கப்பட்ட ஜாதிக் கருமத்தைத்தான். ஒருவன் தன் உள்ளுணர்வால் உந்தப்பட்டு தானே ஏற்றுக் கொண்ட பொறுப்பைப் பற்றிக் கண்ணன் கூறவில்லை. பகவத் கீதையைச் சரியாகப் புரிந்து கொள்ளுகிறவர்களுக்கு இந்தக் குறுகிய நோக்கம் தட்டுப்படாமல் இருக்காது.

பகவத் கீதையில்கூட அறச்செயலுக்கு முதன்மை கொடுக்கவில்லை. இறைவனிடத்து அன்பு செலுத்துவதே முதலும் முடிவுமாகும். இறைவனிடத்துச் செலுத்தும் அன்பு மக்களிடத்து அன்பாகச் செயற்படவில்லை. இந்நூல் ஆர்வத்தோடு மக்களிடத்தில் அன்பு காரியப்பட

வேண்டும் என்று தூண்டவில்லையாகையால், இந்நூல் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கவில்லை; புகையோடு கூடிய நெருப்பாகப் பயனற்றுப் போய்விடுகிறது.

இராமானுஜர்

இராமானுஜர் (1055-1137) தம் வேதாந்த சூத்திர பாடியத்தில், உபநிஷத்திலும், வேதாந்த சூத்திரத்திலும் பிராமணியக் கொள்கையான அகம் பிரமம் என்ற கொள்கைக்கு இடமில்லை என்றும், இந்தக் கொள்கையான பக்தி மார்க்கத்தில் தான் இடமுண்டு என்றும் கூறுகிறார்.

திருக்குறள்

இது கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம்.

பிராமணியம், பௌத்தம், பகவத் கீதை இவைகளைக் காட்டிலும் பலவகைகளில் குறள் முற்போக்குடையது. முற்குறித்த நூற்களில் மறு பிறப்பிலோ சுவர்க்கத்திலோ பலன் கிட்டும் என்ற அடிப்படையிலேயே ஒழுக்கவியல் வற்புறுத்தப் படுகிறது. ஒழுக்கவியல் பலன் கருதாது, தன் பொருட்டே வேண்டப்படுவது என்ற கொள்கை திருக்குறளில் ஒளிவிட்டு வீசுகிறது. பிற்குறித்த குறள்களைக் காண்க:—

"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று"
"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ வுலகு"

பகவத் கீதையில் கடமை, சாதி அடிப்படையில் வகுக்கப்பட்டது. குறளின்படி எல்லா நற்செயல்களும் கடமையின் பாற்படும். அவை யாவர்க்கும் பொது.

வள்ளுவர், உலகத்தில் ஆர்வத்தோடு வினை செய்தலில் இன்பம் காண்கிறார். இது போன்ற கருத்து இந்திய சிந்தனைகளில் இதற்கு முன் காண்பதரிது. பின்வரும் குறட்பாக்களைப் பார்க்க:—

" தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"
" இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
னொன்னார் விழையுஞ் சிறப்பு"

பௌத்தம், பகவத் கீதை இவைகளைப் போல் வள்ளுவரும் உலகப் பற்றற்ற வெறுப்புணர்ச்சியற்ற, மனத்தை விரும்புகின்றார். உலக நாகரிகத்தில் பிறந்த நல்ல கருத்துக் களையெல்லாம் குறள் தனதாக்கிக் கொண்டு மேலும் ஒரு படி செல்கின்றது, அது தான் உயிர்த்துடிப்புள்ள மக்கள் மீது காட்டும் அன்பு. பின் வரும் குறட்பாக்களை ஓர்க:—

" அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு"
" அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று"
" புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு"
" அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள"

வள்ளுவர் எளிய ஒழுக்கமுள்ள சமுதாயத்தை ஐயத்திற்கு இடமின்றி அழகுறச் சித்தரிக்கிறார். மனிதன் தனக்குத்தானே செய்து கொள்ள வேண்டிய கடமைகள், மற்றவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள், ஆகிய இன்னோரன்ன பலதரப்பட்ட கேள்விகளுக்கு வள்ளுவர் தரும் விடைகள் பெருந்தன்மை யுடையதாகவும், அறிவுக்குப் பொருத்தமாகவும் அமைந்துள்ளன. இவ்வளவு உயரிய ஞானம் செறிந்த அறவுரைகளை உலக இலக்கியங்கள் எங்கணும் பார்க்க முடியாது.

(ஜெர்மன் ஆசிரியர் கூறும் இவ்வாசகங்கள் தமிழன் உள்ளத்தைப் பூரிக்கச் செய்யும்)

இராமானந்தர் (கி.பி. 1400)

இவர் இராமானுஜர் கொள்கையைப் பின்பற்றுபவர். தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்குச் சென்று அங்கு பணியாற்றியவர். இவரால் தென்னாட்டுக் கொள்கைகள் வடநாட்டில் பரவின. இவர் வடமொழியில் வல்லவராயிருந்தும் வட நாட்டு மக்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காக ஹிந்தி மொழியில் தம் கருத்துக்களை வெளியிட்டார். இவருடைய சீடர்களில் பெண்களும், ஹரிஜனங்களும், முகம்மதியர்களும் உண்டு. அவர்களுக்கு வேத மந்திரங்களையும் உபதேசித்துள்ளார்.

இராமானந்தரின் முக்கிய சீடர் கபீர் ஆவார். (1440-1518) அவருடைய சீடர் நானக் (1469-1539) இவர்தான் சீக்கியர் சமுதாயத்தைத் தோற்றுவித்தார்.

தற்காலத்து இந்திய சிந்தனைகள்

ஆல்பர்ட் சுவிட்சர் தம் நூலின் இறுதியில் இந்தியாவின் தற்காலச் சிந்தனையாளர்களின் கருத்துக்களை ஆராய்ந்து, படிப்படியாக இந்தியச் சிந்தனையில் உலகத்தை அலட்சியப்படுத்தும் மனப்பான்மை குறைந்து, ஒழுக்கவியலுக்கும், மக்கள் தொண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் மனப்பான்மை மிகுத்திருந்தது என்று கூறுகிறார். அவர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட சிந்தனையாளர்கள், இராம் மோஹன்ராய், தாபேந்திரநாத் தாகூர், கேசப்சந்திர சென், தயாநந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணர், விவேகாநந்தர் இரபிந்தரநாத் தாகூர், மஹாத்மாகாந்தி, அரவிந்தர் ஆவர். இவ்வாசிரியர் இரபிந்தரநாத்தாகூர் சிந்தனையிற்றான் ஒழுக்கவியல் பூரண வெற்றி பெறுகிறது என்று கூறுகிறார்.

சுவிட்சர் அவர்கள் சைவ சமய ஆசாரியர்களைப் பற்றியோ சைவ சித்தாந்த நூல்களைப் பற்றியோ ஏதும் அறிந்திலர். அறிந்திருந்தால், திருக்குறள்

மரபில் வந்த சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் அவருக்கு மன நிறைவு தந்திருக்கும். சைவ சித்தாந்தத்தின் படி உலகம் உள்பொருளே; உலகம் மாயையன்று. அது வெறுக்கத்தக்க பொருளுமன்று. மனிதனின் முன்னேற்றத்திற்காகவே இறைவன் உலகத்தை மனிதனோடு தொடர்பு படுத்துகின்றான். உலகமும், பரம்பொருளும், இருளும், ஒளியும் போன்று முரண்பட்ட பொருள்களல்ல. சிறிய ஒளியும் பேரொளியும் போன்று ஒருசார் ஒரு தன்மைப்பட்ட பொருள் களே. இதுபோன்ற சித்தாந்தக் கருத்துக்கள் சுவிட்சர் அவர்களுக்குப் பிடித்திருக்கும்.

சுவிட்சர் அவர்களின் முக்கிய கருத்து இறைவனை மக்கள் தொண்டில் காண வேண்டும், செயற்படும் அன்பில் காணவேண்டும். இவ்வுலகத்தில், இல்வாழ்க்கையில், எல்லா உயிர்களிடத்திலும், காணவேண்டும் என்பதாகும். இக்கருத்து இப்போதுதான் இந்தியச் சிந்தனைகளில் மேலோங்குகிறது என்று அவர் கருதுகிறார்.

அவர் வள்ளலார் பாடல்களைப் படித்திருந்தால், இந்து சமயத்தின் உச்ச நிலையை அப் பாடல்கள் அடைந்திருக்கின்றன என்று கருதியிருப்பார். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடுகின்ற" கருணையுள்ளமும், 'ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செயல்வேண்டும்' என்ற அவர் முறையீடும் "எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர் போல், எண்ணியுள்ளே, ஒத்து, உரிமையுடையவராய், உவக்கின்றார் யாவர், அவருளந்தான், சுத்த, சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடமெனநான் தேர்ந்தேன், அந்த வித்தகர் தம் அடிக்கேவல் புரிந்திட என் சிந்தை மிக விழைந்ததாலோ" என்கிற அவர் வாக்குகளும், அவரைப் பரவசமடையச் செய்திருக்கும். வேதங்களில் வேரூன்றிய இந்திய சமயச் சிந்தனைகள் இராமலிங்கரில் பழுத்தன என்று அவர் கூறியிருப்பார்.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டிட டிரஸ்ட் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு

1966 ஆம் வருஷம் நவம்பர் மாதம் 20 ஆம் தேதி இராயபுரம் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் இல்லத்தில் சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டிட டிரஸ்ட் கூட்டம் நடைபெற்றது.

வந்திருந்தோர் : 1. திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார், 2. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, 3. திரு. ந. ரா. முருகவேள், 4. திரு. T. E சிவநேசன் செட்டியார். சிறப்பு அழைப்பின்மேல் வந்திருந்தவர்கள் : 1. திரு. G. M. முத்துசாமிப் பிள்ளை, 2 திரு. C. N. சிங்காரவேல் முதலியார், 3. திரு. மு நாராயணசாமி முதலியார், 4. திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார்.

கூட்டத்துக்குத் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

நிறைவேறிய தீர்மானங்கள் :

1. திரு. நல். முருகேசமுதலியார் அவர்களுடைய ராஜிநாமா (விலகல்) கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
2. திரு. நல். முருகேச முதலியார் அவர்களுக்குப் பதிலாகச் சமாஜச் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகிய திரு. N. T. கிருஷ்ணசாமி முதலியார் டிரஸ்ட் குழு அங்கத்தினராக நியமிக்கப் பெற்றார்.
3. சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டிட டிரஸ்ட் நிதியைத் தியாகராயநகர் இந்தியன் பாங்க் கிளையில் டிரஸ்ட் பேரில் கணக்கு வைக்கத் தீர்மானிக்கப் பெற்றது.
4. திரு. N T. கிருஷ்ணசாமி முதலியார் சமாஜக் கட்டிட வாடகை முதலியவற்றை வசூல் செய்து சில்லரைச் செலவுகளுக்காகப் பத்து ரூபாய் வைத்துக்கொண்டு, மீதியை அப்போதைக்கப்போது பாங்கில் செலுத்தித் தலைவரின் அனுமதியின்பேரில் செலவு செய்து, கணக்குகளை எழுதி மூன்று மாதங்களுக்கு ஒருமுறை டிரஸ்ட் கூட்டத்தைக் கூட்டி, அக்கூட்டத்தில் கணக்குகளை டிரஸ்டிகளின் அங்கீகாரத்துக்கு வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

5. தலைவர் விரும்பும்போது அவரிடம் கணக்குபளை அவ ரது பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

6. பாங்கில் பணம் வாங்கவும், செலுத்தவும் திரு. N. T. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பெற்றது.

7. டிரஸ்டின் கடிதப் போக்குவரத்தையும், கடிதக்கோப் புகளையும் திரு. நே. த. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களே அவர்கள் பொறுப்பில் வைத்துக்கொள் ளத் தீர்மானிக்கப்பட்டது.

8. இத்தீர்மானங்கள் இன்று முதலே அமுலுக்கு வர வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

9. இன்றுவரையிலுள்ள டிரஸ்ட் கணக்குகளைத் திரு. குமார் (Defence Dept) அவர்கள் தணிக்கை செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

(ஒப்பம்) A. சோமசுந்தரம்,
தலைவர்.

மதிப்புரை

" திருத்தணிகைப் பெருமான் குயிற்பத்து " என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் திரு. நா. ப. தணிகையரசு, இந்துமதபாடசாலை, வாலாஜாபாத், செங்கை மாவட்டம்.

இது பராபவ ஆண்டு கார்த்திகை 2ஆம் நாள் சஷ்டிப் பெருவிழாவில் வெளியிடப் பெற்றது. திருவாசகக் குயிற் பத்தை ஒட்டியே இக் குயிற்பத்தும் விளங்குகின்றது. இதிலிருந்து ஆசிரியரின் திருவாசக ஈடுபாடு, பக்திநெறி யைப் பரப்ப அவர் கொள்ளும் ஆரா அவா, சமய உண் மைகள் பலவற்றைக் காணலாம். யாவரும் பெற்றுப் படித்துப் பயன் பெறுவார்களாக. விலை குறிக்கப்பெற வில்லை. தபால் செலவு அனுப்பின் அனுப்பி வைப் பார்கள்.

(அம்பை)

"திரு நாராயணதாச சுவாமிகள் வரலாறு" என்னும் நூல் ஒன்று வரப்பெற்ரேம் இதனை எழுதியவர் தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் க. ஆறுமுகம் எம். ஏ., எம்'லிட்., பி. எச். டி. ஆவர். வெளியிடுவோர் திரு நாராயணதாச சுவாமிகள் தேவஸ்தானம், வீரபாண்டி, தென்ஞற்காடு மாவட்டம். 90 பக்கங்களும் அழகிய படங்கள் 5ம் கொண்டுள்ளது. விலை ரூ 1-50 ஆகும்.

நம் தமிழ்கத்தில் சமயப் பெரியார் பலர் தோன்றி இலை மறைகாய் போல் வாழ்ந்து மறைந்து விடுகின்றனர் அவர்கள் வாழ்க்கையில் ஆற்றிய அற்புதங்கள் பலவாயிருக்கலாம். அவற்றை யெல்லாம் அவ்வப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் நூல் வாயிலாய் எழுதி எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்துவது மிகவும் இன்றியமையாத கடமையாகும். "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று கொண்டு தெய்வ நம்பிக்கை குறைந்து வருமிக்காலத்து இத்தகைய பெரியோர்களின் வரலாறு தான் முன்னைப் பெரியோர்களின் வரலாற்றினையும் நன்கு படித்து இன்புற்றுப் பக்திநிலைக்கு ஈர்த்துச் செல்ல வழி காட்டுவதாய் அமையும் என்பது உறுதி.

திருநாராயணதாசர் என்னும் பெரியார் அரிசன வகுப்பில் தோன்றிய திருவுடையோராய் தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் திருமுதுகுன்றம் வருத்தாம்பிகை ஆகிய தெய்வங்களின் அருள் வாய்க்கப் பெற்று பல அற்புதங்களைச் செய்து நம்மவர் கண்முன்னே வாழ்ந்தவர். இந்நூல் அவர் பெருமை கூறும் சிறந்த வரலாறு ஆகும். எத்தகைய உலோகாயதவாதியும் இது போன்ற நூலைப் படித்தால் மனம் நெகிழ்ந்து தெய்வ நம்பிக்கை கொள்வான் என்பது உறுதி. இத்தகைய நூல்கள் இக்காலத்து அதிகமாக வெளிவர வேண்டும். காலங்கருதி நன்முறையில் இவ்வரலாற்றினை எழுதியுதவிய ஆசிரியரையும் வெளியிட்ட தேவத்தானத்தாரையும் பாராட்டுகிரேம். யாவரும் வாங்கிப் படித்துப் பயன் பெறுவார்களாக.

(அம்பை)

"சென்னிமலை முருகன் புலவராற்றுப் படை" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் வித்து வான் வே. ரா. தெய்வசிகாமணி. இது சென்னிமலைத்தல புராண வெளியீட்டுக் குழுவினரால் வெளியிடப் பெற் றது. விலை ரூ 0–75 ஆகும்.

இதன்கண் இவ்வாசிரியரால் எழுதப் பெற்ற நூலின் பொருட் சுருக்கமும் புலவராற்றுப் படை பற்றிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றும் நூலும் உள்ளன. 46 பக்கங்களில் 945 அடிகளுடன் நிலைமண்டில ஆசிரியப் பாவில் இந்நூல் சிறந்து மிளிர்கின்றது. பண்டையாசி ரியர் நெறியினின்றும் தவறாது தற்போதைய பெருமை களையும் கூறி இந்நூல் செல்லும் திறம் மெச்சத்தக்கது. தக்க குறிப்புரையையும் பல மேற்கோள்களுடன் இந் நூலாசிரியர் நன்முறையில் அடிக்குறிப்பாகச் சேர்த்திருப் பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

கலைக்கடல் கடந்தும் கலிக்கடல் கடக்கும்
வகையறி யாது மயங்கினை அந்தோ!

எனப் பரிசு பெற்றபுலவன் பரிசு பெறும் புலவனைப் பற்றிக் கூறும் பகுதி சிந்தித்தின்புறற்குரியதாம். இதனைப் போன்று நயங்கள் அமைந்த பகுதிகள் இந்நூலில் செறிந்து காணப் பெறுகின்றன. சுருங்கக் கூறின் இந் நூலினைப் படிப்போர் முருகனருள் வேட்டு அவனடியவர் ஆவது திண்ணம். அத்தகைய நிலையில் பத்தி நெறியை வளர்க்கும் பான்மையில் இவ்வாசிரியர் தக்கதிருத்தொண் டினைச் செய்துள்ளார். திருமுருகாற்றுப்படையை யடி யொற்றியே அதன் சிறப்புகள் யாவையும் விளங்கக் காலத்துக்கு ஏற்ற நிலையில் எளிமை நடையுடன் இந் நூலியற்றிய ஆசிரியரை எவ்வளவு போற்றினும் தகும். அன்பர்கள் யாவரும் வாங்கிப் படித்து,

யமராசன் கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம்·

என்னும் நன்னிலையை அடைவாராக. (அம்பை)

மதிப்புரை

"ஸ்ரீ பரார்த்த நித்திய பூஜாவிதி" (தமிழ் மொழி பெயர்ப்பு) என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இது அகோர சிவாச்சாரியார் அருளியது. தேவகோட்டை சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கத்தாரால் (இராம நாதபுரம் மாவட்டம்) வெளியிடப் பெற்றது. திரு. பொ. முத்தையபிள்ளை, சிவ ஸ்ரீ தத்புருஷ தேசிகர் ஆகிய வர்கள் பரிசோதித்து இதனை நன்முறையில் வெளியிட உதவி புரிந்துள்ளார்கள். நல்ல அச்சு; இரண்டாம் பதிப்பாக வெளியிடப் பெறுகிறது; டிம்மியளவில் 143 பக்கங்கள் கொண்டது; நல்ல கட்டடத்தோடு கூடியது. இந்நூலில் ஆசாரியர் கடமைகள், அவர் ஆலய வழிபாடு செய்ய வேண்டிய முறைமை முதலிய பல செயல் முறைகள் விளக்கப்பட்டுள சைவர்கள் யாவரும் நம் சமயச் சடங்குகள் பற்றி ஆகமங்கள் என்ன கூறுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாவா? அவ்வாறு தெரிந்து கொள்ள வாய்ப்பாக இந்நூல் விளங்குகின்றது. இச்சிவாகம சங்கத்தார் "முன் பல பெருமை வாய்ந்த நூல்களை வெளியிட்டனர். நல்ல சமய நூல் நிலையத்தைப் பெற்றுள்ளனர்" எனத் தக்கார் பலர் வாயிலாய்க் கேட்டின்புற்றோம். அதற்கு ஓர் எடுத்துக்காட்டு இந் நூல் வெளியீடு என்பதில் ஐயமில்லை. அன்பர்கள் வாங்கிச் சமயச் சடங்குகள் பற்றிய உண்மைகளைத் தெரிந்தின் புறுவார்களாக.

(அம்பை)

"தடைகளும் விடைகளும்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். தடைகள் கேட்டோர் மறைமலையடிகள் மன்றத்தினர், புன்செய்ப்புளியம்பட்டி, கோவை மாவட்டம். விடைகள் எழுதியவர் புலவர்மாமணி சித்தாந்த வித்தகர் முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள், மலேயா. அம்மன்றத்தினரே இந்நூலை வெளியிட்டுள்ள

னர். மிகச் சிறந்த பதிப்பு. இந்நூலில் எழுபது தடை களும் அவற்றிற்குரிய விடைகளுமுள்ளன. 90க்கு மேற் பட்ட பக்கங்களையுடையது. விலை ரூ 1–50.

தாகம் எழுவது மனித இயற்கை. அதைத் தீர்த்து உயிரை ஓம்புவது ஒவ்வொருவருடைய கடமையாகும். அதைப்போன்றே சமய உலகில் மக்களுக்கு ஐயங்கள் எழு வது இயற்கை அவற்றைத் தீர்ப்பது அறிஞர் கடமை யாகும். ஐயங்களைக் கேட்காத குற்றம் இளைஞர்களையும் போக்காத குற்றம் அறிஞர்களையும் சாரும். இவ்விரு குற்றம் இவ்விருசாராருக்கும் ஏற்படாவண்ணம் அக் குற்றங்களைப் போக்க எழுந்ததே இந்நூல். சமய சம் பந்தமாய பல அருமையான சிக்கலான வினக்கள் இதில் எழுப்பப்பட்டுள்ளன. அவற்றிற்கு அறிவுக்கும் விஞ்ஞா னத்திற்கும் பொருத்தமான சிறந்த பதில்களும் இந்நூலி லுள. யாவரும் வாங்கிப் படித்து தாங்களும் இன்புறுவ தோடு இளைஞருலகத்துக்கும் பயன்படச் செய்ய வேண்டு கிறேம். திருச்சி மாநாட்டில் இப்புத்தகம் விலைக்குக் கிடைக்கும். வேண்டுவோர் வாங்கிப் பயன் பெறுவார் களாக. (அம்பை)

மார்கழி மாத விசேட தினங்கள்

6	(21–12–66)	வாயிலார் நாயனர் விழா
12	(27–12–66)	சடைய நாயனர் விழா
,,	,,	திருவாதிரை விழா
18	(2–1–67)	இயற்பகை நாயனர் விழா
21	(5–1–67)	மானக்கஞ்சாற நாயனர் விழா
26	(10–1–67)	சாக்கிய நாயனர் விழா

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

60-ஆம் ஆண்டு நிறைவு விழா.

1-1-1966

சைவ மங்கையர் மாநாடு

தலைமையுரை

திருமதி. இராதாதியாகராசன்

சிவமயம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம்: 1905—பதிவு: 1915)

60-வது ஆண்டு அறிக்கை

சைவ சித்தாந்த மகா சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில் தவத்திரு. ஞானியாரடிகள் திருமடத்தில், விசுவாவசு ஆண்டு, ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (7 - 7 - 1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. இன்றுவரை இறைவன் திருவருளால் மேன்மைகொள் சைவ நீதி உலகெலாம் விளங்க வேண்டுமென்ற பெரு நோக்கத்துடன் தொண்டாற்றி வருகின்றது. இச்சமாஜம் 11 - 11 - 1915 தேதியில் சங்கங்கள் பதிவுச் சட்டப்படி எஸ். 6 / 1915 - 16 எண்ணுகைப் பதிவு செய்யப்பெற்றுள்ளது.

2. இவ்வாண்டின் சமாஜப் பணியாளர்கள்

தலைவர்: திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

துணைத் தலைவர்கள்: திரு. ராவ்சாகிப் நல். முருகேச முதலியார், பி.ஏ.
திரு. தி.கி. நாராயணசாமி நாயுடு, கடலூர்.

செயலாளர்: திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார், எம்.ஏ.

துணைச் செயலாளர்: திரு. மு. நாராயணசாமிமுதலியார்.

பொருட்காப்பாளர் : திரு. வி. ஆறுமுக முதலியார்.
பத்திராசிரியர் : திரு. மு. அருணாசலம், எம். ஏ.
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் திரு. அம்பை-இரா. சங்கரனார்.

செயற்குழுவினர்: திருவாளர்கள்-(1) அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., (2) ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., (3) ந. ரா. முருகவேள், எம். ஏ., எம்.ஓ.எல்., (4) பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ., (5) பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை, எம். ஏ., எல். டி., (6) ஜி. வடிவேலாயுதம், எம். ஏ., (7) நே. த. கிருஷ்ண சாமி, எம்.ஏ., பி.டி., (8) எஸ். இராமசாமி, (9) வித்துவான் - பி. சொ. சண்முகம்பிள்ளை, (10) வித்துவான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை, (11) எம். சந்திரசேகர முதலியார், (12) சி. வி. கிருஷ்ணமூர்த்தி.

3. சமாஜத்தின் 59-வது ஆண்டு நிறைவு விழா

மேற்படி விழாவும், சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும், 25-12-64, 26-12-64 ஆகிய இரண்டு நாட்கள் கோவைக்கடுத்த திருப்பேரூரில் தவத் திரு.சாந்தலிங்கஅடிகளார் தமிழ்க்கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றன. மேற்படி மாநாடுகளுக்கு முறையே திரு. க. அரங்கசாமி முதலியார், பி. ஏ. அவர்களும், திருமதி. காமாட்சி குமாரசாமி, எம். ஏ., அவர்களும், திருச்சி ஜி. வரதராசப்பிள்ளை, பி. ஏ. அவர்களும் தலைமை தாங்கினார்கள். இவ்விழாவைத் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், பி.ஏ., பி.எல். அவர்கள் திறந்துவைத்தார்கள். வித்துவான்-திரு. மறை. திருநாவுக்கரசு அவர்கள் கொடியேற்றினார்கள். திரு. நா. மகாலிங்கம், பி.எஸ்சி., எம். எல். ஏ. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இம்மாநாட்டில் இளைஞர் மாநாட்டோடு கருத்தரங்கு

என்னும் ஒரு புதிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. இவ்விழாவினையும் மாநாடுகளையும் நடத்திக்கொடுத்த திரு. நா. மகாலிங்கம், எம். எல். ஏ., தவத்திரு. இராம சாமி அடிகள், தவத்திரு. சுந்தரம் அடிகள் ஆகியோருக்கு சமாஜம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

4. வள்ளலார் விழா

31-1-65 மாலை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையில் திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ. அவர்கள் "இராமலிங்கர் நெறி" என்பது பற்றிப் பேசினார்கள். திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல். டி. அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

5. கண்ணப்ப நாயனார் திருநாள்

14-2-65 மாலை சிந்தாதிரிப்பேட்டையில், இளைஞர் ஒற்றுமை மன்றத்தின் ஆதரவோடு மேற்படி திருநாள் கொண்டாடப் பெற்றது. திரு. எம். கே. குமரவேல் செட்டியார் தலைமையில் சமாஜத்தலைவர் திரு. கோ. மு. முத்துசாமி பிள்ளை அவர்கள் "கண்ணப்பர்" என்ற பொருள் பற்றிப் பேசினார்கள்.

6. காரைக்காலம்மையார் திருநாள்

28-3-65 மாலை மயிலாப்பூர் ஸ்ரீவள்ளீஸ்வரர் தேவாலயத்தில் திருமதி காஞ்சனமாலை அம்மையார் அவர்கள் "காரைக்காலம்மையார்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள். திரு. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

7. ஜப்பானிய அறிஞர் வருகையும் ஆங்கிலக் கருத்தரங்கும்

டோகியோ பல்கலைக்கழக வடமொழிப்பேராசிரியர் எம். ஹரா என்ற ஜப்பானிய அறிஞர் வருகையை முன்

னிட்டு 11-4-65 மாலை இராயப்பேட்டை திரு. வி. க. மணி மண்டபத்தில் 'சைவ சித்தாந்தத் தத்துவம்' என்பது பற்றி ஆங்கிலத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. மாநிலக்கல்லூரி வடமொழிப்பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தம்பிள்ளை, எம்.ஏ., எல்.டி. அவர்கள் தலைமை தாங்கினார்கள். திரு. எம். ஹரா, டாக்டர் தேவசேனாபதி, எம்.ஏ., பிஎச்.டி., திரு. நல். முருகேச முதலியார், பி. ஏ. ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சமாஜத் தலைவர் வரவேற்புரையும், செயலாளர் நன்றியுரையும் நிகழ்த்தினார்கள்.

8. திருநாவுக்கரசர் குருபூஜை விழா

26-4-65 மாலை திருவான்மியூர் ஸ்ரீ மருந்தீஸ்வரர் ஆலயத்தில் சென்னை அரசாங்கத் துணைச் செயலாளர் திரு. கெ. சிதம்பரம், பி. எஸ்சி. அவர்கள் தலைமையில் திரு. வித்துவான் அம்பை இரா. சங்கரனார் அவர்கள் "திருநாவுக்கரசர் வரலாறு" என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்.

9. காலைக் கூட்டு வழிபாடு—ஆண்டு விழா

மலேயா திரு. கா. இராமநாதன் செட்டியார் துவக்கி வைத்த காலைக் கூட்டு வழிபாடு தினமும் திருமயிலைக் கபாலீஸ்வரர் ஆலயத்தில் நிகழ்ந்து வருகிறது. அதன் முதல் ஆண்டுவிழா 9-5-65ல் நடைபெற்றது. காலை ஸ்ரீ கபாலீச்சுரருக்குத் திருமுழுக்காட்டும் வழிபாடுகளும் நிகழ்ந்தன. திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களும், திரு. கயப்பாக்கம் - சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் வாழ்த்துரை கூறினர். வழிபாட்டில் தவறாது கலந்து கொண்ட 5 சிறுவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன.

10. ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார் - ஸ்ரீ சிவஞான சுவாமிகள் குருபூஜை விழா

16-5-65 மாலை இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜனசபையில் டாக்டர் வ. ஆ. தேவசேனபதி, எம். ஏ., பிஎச்.டி. அவர்கள் தலைமையில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், திரு. நல். முருகேச முதலியார் அவர்கள், திரு. கொ. நீ. சிங்காரவேலு முதலியார் அவர்கள் மேற்குறித்த பெரியார்களைப்பற்றிப் பேசினர்கள்.

11. ஸ்ரீ திருஞானசம்பந்தப் பெருமான் குருபூஜை விழா

18-5-65 மாலை திருவான்மியூர் ஆலயத்தில் வழக்கறிஞர் திரு. T. K. சுப்பிரமணியபிள்ளை, பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் வித்துவான் திரு. வை. குஞ்சிதபாதம்பிள்ளை அவர்கள் "திருஞான சம்பந்தர்" என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள்.

12. சேக்கிழார் விழா

6-6-65 மாலை, சூளை, சிதம்பரேசுவரர் கோவிலில் திரு. ச. நடேச முதலியார் அவர்கள் தலைமையில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் "சேக்கிழார் சிறப்பு" என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள்.

13. மாணிக்கவாசகர் திருநாள்

4-7-65 மாலை திருவல்லிக்கேணி அரசடிக் கற்பக விநாயகர் வசந்த மண்டபத்தில் மாகாணக் கல்லூரித் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் - திரு. எம். இராசாக்கண்ணு, எம். ஏ., பி. ஓ. எல்., எம். இ. எஸ். அவர்கள் தலைமையில் திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல். அவர்கள் "மாணிக்கவாசகர் மாண்பு" என்னும் பொருள் பற்றிப் பேசினர்கள்.

14. சுந்தரர் திருநாள்

8-8-65 மாலை ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயிலைச் சார்ந்த தேவார பாடசாலையில் திரு. கீ. இராமலிங்க முதலியார், எம். ஏ. அவர்கள் தலைமையில் பேராசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ., அவர்கள் "சுந்தரர் செந்தமிழ்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

15. திருத்தொண்டர் புராண விரிவுரைகள்

ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 6-30 மணிக்கு சென்னை லிங்கிச்செட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ மல்லிகேச் சுரப்பெருமான் திருக்கோயிலைச் சார்ந்த சபைக் கட்டடத் தில், சித்தாந்த வித்தகர் - கயப்பாக்கம்-திரு. சோமசுந் தரம் செட்டியார் அவர்கள் சமாஜ ஆதரவில் பெரிய புராண விரிவுரை நிகழ்த்துகிறார்கள். இவ்விரிவுரைகளை 12-9-65 மாலை உயர் நீதிமன்ற நீதிபதி மதிப்புக்குரிய திரு. ஆர். சதாசிவம், பி. ஏ., பி. எல். அவர்கள் துவக்கி வைத்தார்கள். இவை திரு. அ. சோமசுந்தரம் செட்டி யார், எம். ஏ. அவர்கள் பொருளுதவியில் நடைபெறு கின்றன.

16. ஒரு சிறப்புச் சொற்பொழிவு

24-9-65 மாலை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிர மணிய பக்தஜன சபையில் திரு.ச. சச்சிதானந்தம்பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் தவத்திரு ஐயா றடிகள் "நாவுக்கரசர் அளித்த நற்செல்வம்" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

17. அருள்நந்தி சிவாச்சாரியார் குருபூஜை விழாவும், கருத்தரங்கும்

மேற்படி விழாவை முன்னிட்டு 29-9-65 மாலை மயிலாப்பூர், ஸ்ரீகபாலீச்சுரர் கோயிலைச் சார்ந்த தேவார

பாடசாலையில் "வினை — சைவ சித்தாந்தத்தின்படி" என்னும் பொருள்பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. தத்துவப் பேராசிரியர் - டாக்டர் வ. ஆ. தேவசேனுபதி அவர்கள் தலைமையில், திருவாளர்கள் - இராவ்சாகிப் நல். முருகேச முதலியார், ந. ரா. முருகவேள், கொ. நீ. சிங்காரவேலு ஆகியோர் பேசினர். டாக்டர் பி. நடராஜன், டி.லிட்., எம்.எல்.ஏ. அவர்கள் பார்வையாளராக இருந்து தம் கருத்துக்களைத் தெரிவித்தார்கள்.

18. உள்ளொளி நாட்டக் கூட்டம் (அந்தர் யோகம்)

10-10-65 காலை முதல் மாலைவரை வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் உள்ளொளி நாட்டக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. இக்கூட்டத்தை முற்பகலில் திரு. கீ. இராமலிங்க முதலியார், எம்.ஏ. அவர்களும், பிற்பகலில் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி. அவர்களும் தலைமைதாங்கி நடத்தித் தந்தார்கள். இக்கூட்டம் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையார் ஆதரவில் நடைபெற்றது. சுமார் 50 அன்பர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அவர்களுக்குப் பாடசாலையார் உணவு, சிற்றுண்டிகள் வழங்கி உபசரித்தனர். அவர்களுக்கு சமாஜத்தின் நன்றி உரித்தாகுக.

19. மாங்காட்டில் கந்தர் சஷ்டி விழா

சென்னைக்கடுத்த மாங்காட்டில் ஸ்ரீ சிவசண்முகானந்த பக்தசன சபையின் ஆதரவில் கந்தர் சஷ்டியையொட்டி ஒரு சிறப்புக்கூட்டம் நடைபெற்றது. திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார் தலைமையில் திருவாளர்கள் கோ. மு. முத்துசாமி பிள்ளை, நல். முருகேச முதலியார், வித்துவான் அம்பை சங்கரனர், நே. த. கிருஷ்ணசாமி முதலியார், மா. ப. தியாகராஜன், வி. ஆறுமுக முதலியார், கொ. நீ. சிங்காரவேலு ஆகியோர்

முருகன் பெருமை" என்னும் பொருள் பற்றிப் பேசினர். குன்றத்தூர் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தலைவர் திரு. எம். வி. சோலையப்பன் அவர்கள் வரவேற்புரையும், வழக்கறிஞர் திரு. எம். ஆர். துரைசாமி ஐயர், பி.ஏ., பி.எல்., அவர்கள் நன்றியுரையும் நிகழ்த்தினர்கள்.

20. ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருநாள்

30-10-65 மாலை திருவல்லிக்கேணி, அரசடி கற்பக விநாயகர் வசந்த மண்டபத்தில் தவத்திரு அழகர் அடிகளார் அவர்கள் "மெய்கண்டார்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். இக்கூட்டம், சுவரொட்டிகள், ஒலிபெருக்கி முதலியன ஏற்பாடு செய்யப்பெற்று, சிறப்பாக நிகழ்ந்தது.

21. முதியோர் தேவார வகுப்பு

13-4-64 தொடங்கிய முதியோர் தேவார வகுப்பு, மயிலை ஸ்ரீ வெள்ளீஸ்வரர் கோவிலில் ஞாயிறு தோறும் காலை *9* மணிக்குச் சிறப்பாக நடந்து வருகிறது.

22. சமாஜத் தேர்வு

*1964*ஆம் ஆண்டு *5* பேர் சைவப் புலவர் தேர்விலும், *4* பேர் இளஞ் சைவப் புலவர் தேர்விலும் வெற்றி பெற்றனர். பரிசுத்திட்டத்தின்படி சைவப் புலவர் தேர்வில் முதல் வகுப்பில் வெற்றி பெற்ற திரு. முத்துக்குமாரசாமி திருஞானசம்பந்தம் பிள்ளை அவர்களுக்கு ரூ. *50/-* பரிசு வழங்கப்பெற்றது. *1965*ஆம் ஆண்டு *13* பேர்கள் சைவப் புலவர் தேர்விலும் *6* பேர்கள் இளஞ்சைவப் புலவர் தேர்விலும் கலந்துகொண்டனர். அவர்களில், முன்னையதில் *12* பேரும் பின்னையதில் *4* பேரும் தேர்வுபெற்றனர். திரு.

அ. பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல் வகுப்பில் தேர்வு பெற்றதால் அவருக்கு ரூ. 50/- இம்மாநாட்டில் பரிசாக வழங்க இருக்கிறது.

23. ஆங்கிலப் பத்திரிகை 'சைவ சித்தாந்தம்'

31-1-65 நடந்த செயற்குழுக் கூட்டத்தில் சமாஜத்தின் சார்பில் 'சைவ சித்தாந்தம்' என்னும் பெயரில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஆண்டிற்கு நான்கு இதழ்களாக வெளியிடுவதென்று தீர்மானிக்கப்பெற்றது. இப்பத்திரிகைக்கு ராவ்சாகிப் திரு. நல். முருகேச முதலியார், பி.ஏ. அவர்களை ஆசிரியராகவும் திரு. மு. அருணசலம், எம்.ஏ. அவர்களைத் துணை ஆசிரியராகவும், திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்களை வெளியீட்டாளராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

இத்தீர்மானங்கள் 25–4–65ல் நடந்தசமாஜப் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பெற்றன. மேலும் அக்கூட்டத்தில் ஆங்கிலப் பத்திரிகை நடத்துவது சம்பந்தமாக சமாஜ விதிகள் திருத்தப்பெற்றன.

ஆங்கிலப் பத்திரிகை 29–5–65, 14–10–65 தேதிகளில் தலைமை மாநகர் மேஜிஸ்ட்ரேட் முன்பு பதிவு செய்யப்பெற்றது.

24. திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் சமயக் கட்டளை

சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்கள், சமாஜத்திற்கு ரூ. 1000 நன்கொடையாக நல்கி அத்தொகையை மூலதனமாக வைத்து அதன் வட்டியைக் கொண்டு பின்காணும் குருபூஜைச்

சொற்பொழிவுகளைத் தக்க முறையில் நிகழ்த்த வேண்டுமென்று தெரிவித்துள்ளார்கள் :—

1. திருநீலகண்ட நாயனார் குருபூஜை
2. மங்கையர்க்கரசியார் "
3. ஸ்ரீ உமாபதி சிவாசாரியார் "
4. ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் "

இவற்றுள் ஒன்றும் மூன்றும் கபாலீச்சுரத்திலும்' இரண்டு மயிலையிலுள்ள வேறு எந்த சிவாலயத்திலும், நான்கு இராயப்பேட்டை ஸ்ரீபாலசுப்பிரமணிய பக்தஜன சபையிலும் நிகழ்த்த வேண்டுமென்று தெரிவித்துள்ளார்:

அவ்வாயிரம் ரூபாயை இராயப்பேட்டை பிரிவு இந்தியன்பாங்கில் 10-12-65 அன்று இரண்டாண்டுக்குத் தவணை வைப்பாக (செ. 022826) வைக்கப்பெற்றுள்ளது. சமாஜம் இப்பெரியாருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

25. புதிய உறுப்பினர் சேர்க்கை—

திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்களின் உதவி

வாலாசாபாத் மாசிலாமணி முதலியார் அவர்கள் ஒரே காலத்தில் சமாஜத்திற்கு ரூ. 300 வழங்கி 100 புது உறுப்பினர்களைச் சேர்த்தார்கள். அன்னாருக்கு சமாஜத்தின் நன்றி உரித்தாகுக.

26. பொதுக்குழு செயற்குழுக் கூட்டங்கள்

இவ்வாண்டில் பொது உறுப்பினர்கூட்டம் மூன்றும், செயற்குழுக் கூட்டம் பன்னிரெண்டும் நடைபெற்றன.

27. பொருள் நிலை

59-ஆவது ஆண்டு 1-12-64 முதல் 30-11-65 முடிய உள்ள வரவு செலவுக் கணக்குகளிலிருந்து எடுக்கப்

பட்ட தொகுப்பேடுகள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

சைவ சித்தாந்த மகா சமாஜக் கட்டட டிரஸ்ட் வரவு செலவுக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்ட தொகுப்பேடும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

28. விண்ணப்பம்

இவ்வாண்டு மேற்குறித்தபடி 16 சமயக் கூட்டங்களும் 1 அந்தர் யோகமும் சென்னையிலும், அதன் சுற்றுப்புறத்திலும் பல்வேறு இடங்களில் நிகழ்ந்தவை குறிப்பிடத்தக்கவை. இக்கூட்டங்களுக்கு வந்திருந்தவர்களின் எண்ணிக்கையும் திருப்திகரமாக யிருந்தது. இப்பணியை இன்னும் சிறந்த வகையில் நடத்துதற்குத் தடையாயிருப்பவை, சமாஜத்திற்கென ஒரு தனிமண்டபம் இல்லாததும், போதிய வருவாய் இல்லாததுமாகும். தற்போது சமாஜ அலுவலகம் வாடகைக் கெடுத்துள்ள சிறு அறைகளில் இருக்கிறது. இங்கு நூல் நிலையம் அமைப்பதற்கோ, கூட்டங்கள் கூடுவதற்கோ இடவசதியில்லை. சமாஜத்திற்கென திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களால் ரூ. 20,000 செலவில் வாங்கிக்கொடுத்த கட்டடம் மூன்று கடைகளாக அமைந்திருக்கின்றது. அவைகளை மாற்றி மேல்மாடியோடு கட்டவேண்டுமென்று செயற்குழு விரும்புகிறது. சமாஜக்கட்டட டிரஸ்ட் தலைவர் திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் இதற்கு இசைவு தந்துள்ளார். திரு. மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் கட்டட நிதிக்கென ரூ. 6000 வழங்க முன் வந்து ரூ. 4000 சமாஜத்திற்கு வழங்கியுள்ளார்கள். மீதி ரூ. 2000 எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் மேற்சொன்ன கட்டட அமைப்பிற்கு இத்தொகை ஐந்து மடங்காவது பெருகவேண்டும்.

சமாஜத்தின் தொண்டுகள் விரிவடைவதற்கு நிரந்தர உதவியாக யிருக்கக்கூடிய இந்நற்பணியைச் செல்வர்கள் செய்ய முன் வருவார்களாக!

நம் சமாஜ உறுப்பினர் எண்ணிக்கை தற்போது 970 (ஆயுள் உறுப்பினர் 111+பிறர் 859)ஆக உள்ளது. ஒவ்வொரு உறுப்பினருக்கும் சித்தாந்த இதழ் இலவசமாக அனுப்பப்பெறுகிறது. 60 ஆண்டுகள் தொண்டு புரிந்த சைவர்களின் ஒப்பற்ற நிறுவனமாகிய சமாஜத்திற்கு உறுப்பினர் எண்ணிக்கை இவ்வளவு குறைவாகயிருப்பது வருந்தத்தக்கது. சமாஜ அன்பர்கள் ஒவ்வொருவரும் இவ்வெண்ணிக்கையைப் பெருக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

சமாஜம் இப்போது ஆங்கில இதழ்நடத்துப் பெரும் பொறுப்பேற் றிருக்கிறது. சித்தாந்த சாத்திரத்தின் பெருமை தமிழ்நாட்டிற்குப் புறம்பேயுள்ள எல்லா நாடு களுக்கும் தெரியவேண்டும்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்ற பாரதியார் சொற்களைச் சித்தாந்த சாத்திர அள விலும் மெய்ப்பிக்கவேண்டும் என்ற உயரிய நோக்கத் தோடும், சைவப்பெருமக்கள் பூரண ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும் இவ்வாங்கிலப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கிறோம். சைவர் ஒவ்வொருவரும் இவ் விதழுக்குச் சந்தா செலுத்துவதோடு மற்றவர்களையும் சந்தாதாரர்களாக்கி சமாஜத்தை ஊக்குவிக்க வேண்டு கிறோம்.

29. நன்றி

இம் மகா சமாஜத்தைத் தோற்றுவிக்கக் காரணமா யிருந்த உயர்திரு. மறைமலையடிகளார், ஸ்ரீலஸ்ரீ ஞானி

யார் சுவாமிகள், திரு. ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளை ஆகியோருக்கு சமாஜம் வணக்கம் செலுத்தக் கடமைப் பட்டுள்ளது.

'சித்தாந்தம்' பத்திரிகைக்கும் இப்போது வெளியிடயிருக்கும் 'சைவசித்தாந்தம்' என்னும் ஆங்கிலப்பத்திரிகைக்கும், வைரவிழா மலருக்கும், கட்டுரைகள் எழுதியனுப்பிய அன்பர்களுக்கும், மற்றும் பலவிதத்தில்சமாஜப் பணிக்கு உதவி புரிந்துவரும் சைவப் பெரு மக்களுக்கும் சமாஜம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. சமாஜப் பணி சிறக்க, சைவம் தழைக்க அம்பலவாணர் அருள்புரிவாராக!

செயற்குழுவினர் அனுமதிப்படி

இங்ஙனம்

கொ. நீ. சிங்காரவேலு

மு. நாராயணசாமி

செயலாளர்கள்

சென்னை
1—12—'65

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம்

60-ஆம் ஆண்டு நிறைவு விழா.

சைவ மங்கையர் மாநாட்டுத் தலைமையுரை.

திருமதி. இராதாதியாகராசன்,

"கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

சிவநெறிச் செல்வியர்களே, அன்பர்களே,

அன்னம் பாலிக்கும் தில்லையில், பொன்னம்பலவன் அருள் நீழலில், சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாசத்தின் வைரவிழா நடைபெறுவது சைவப் பெருமக்கள் அனைவர்க்கும் மகிழ்ச்சி தருவதாகும். அவ்விழாவின் ஒரு கூறு ஆகிய சைவ மங்கையர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் பெருமையும் பொறுப்பும் எனக்கு எய்தியது, அக்கூத்தப் பெருமானுடைய தண்ணிய பேரருள் என்று எண்ணி, அதனை எய்துவித்த மகா சமாசத்தின் வைரவிழாக் குழுவினர்க்கு என் மனம் கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்ற பல்லாண்டுகளாகச் சமாச ஆண்டு விழாக்களில், சைவ மங்கையர்க்குத் தனி மாநாடு அமைத்து, அவர்கள் சைவசமயக் கருத்துக்களைத் தங்களிடையே அளவளாவி

இன்புறுமாறு செய்வது மரபாக இருந்துவருவதைச் சமாசத்தின் வரலாறு கூறுகிறது. இம் மாநாடுகளில், சைவவொழுக்கமும் தமிழ்ப் புலமையும் நிறைந்த நன்மங்கையர் பலர் தலைமை தாங்கியும், சமயக்கருத்து நிரம்பிய சொற்பொழிவுகளைச் செய்தும் அரும்பணி புரிந்துள்ளனர். அந்த மரபு வழுவாது, இவ்விழாவிலும், சைவ மங்கையர் மாநாடு கூட்டி, தகுதியும் சைவ நூற்புலமையும் சான்ற பெருமடந்தையரைச் சொற்பொழிவு செய்ய ஏற்பாடு செய்திருப்பது மிக்க மகிழ்ச்சி தருகிறது. மேலும், மங்கை பங்கனுதலால், சிவ பரம்பொருளின் அருள்நெறியான சித்தாந்த சைவ மாநாட்டில், மங்கையர் மாநாடு ஓர் அங்கமாகத் திகழ்வது பொருத்தமாகவும் இருக்கிறது.

இங்ஙனம், வரலாற்றுச் சிறப்பும் தகுதியும் ஒருங்கு வாய்ந்த மங்கையர் மாநாட்டில், வந்திருக்கும் சைவ மகளிராகிய உங்களைக் காணும் போது, சைவத்தின் மாண்பும் சைவ மங்கையரின் சமயப்பணியும் என் மனத்தில் தோற்றமளிக்கின்றன.

சைவம் என்னும் சொல், இப்போதுள்ள பழந்தமிழ் நூல்களில், மணிமேகலையில்தான், முதன் முதலாகச் ''சைவவாதி'' என்ற தொடரின்கண் இயைந்து தோன்றுகிறது. அதனுல், சைவம் என்பது அக்காப்பியக் காலத்தேயே மக்கள் வழக்கில் நிலவி யிருந்தமை புலனுகும். அதன்பின், திருமூலர் அருளிய திருமந்திரத்துள், பல இடங்களில் சைவம் என்ற சொல் பயிலுவதைக் காண்கின்ருேம். பின்தோன்றிய சைவத் திருமுறைகள், சிவபெருமானையே, ''சைவன்'' என்று குறிப்புதை அறிகின்ருேம். ஞானசம்பந்தர்,

"சீருறு தொண்டர் கொண்டடி போற்றச்
  செழுமலர் புனலொடு தூபம்
தாருறு கொன்றை தம்முடி வைத்த
  சைவனர் தங்கிடம், எங்கும்
ஊருறு பதிகள் உலகுடன் பொங்கி
  ஒலிபுனல் கொளஉடன் மிதந்த
காருறு செம்மை நன்மையால் மிக்க
  கழுமல நகர் எனலாமே"

என்றும், "அறிவிலாதவர் மொழி, தஞ்சம் என என்றும் உணராத அடியார் கருது சைவன் இடமாம்" (வேதிகுடி) என்றும்,

"வெங்கடுங் காட்டகத்து ஆடல்பேணி
  விரிபுன் சடைதாழத்
திங்கள் திருமுடிமேல் விளங்கத்
  திசையார் பலிதேர்வார்
சங்கொடு சாயல் எழில் கவர்ந்த
  சைவற்கு இடம்போலும்
பைங்கொடி முல்லை படர்புறவில்
  பரிதிந் நியமமே"

என்றும் வரும் திருப்பாட்டுக்களில், சிவனைச் சைவன் என்றே குறிக்கின்றார்; இவ்வழக்கு நெடிது தொடர்ந்திருந்தமையை மணிவாசகர், "ஐயா றதனில் சைவ னாகியும்" என்பதனால் அறிகின்றோம்.

அங்ஙனமாயின், சைவம் என்பதன் பொருள் யாது? திருமூலர், அதன் பொருளை,

"சைவம் சிவத்துடன் சம்பந்தமாவது;
சைவம் தனைஅறிந்தே சிவம் சாருதல்;
சைவம் சிவம்தன்னைச் சாராமல் நீவுதல்;
சைவம் சிவானந்தம் சாயுச் சியமே,"

என்று நான்கு வகையாக விளக்குகின்றார்.

முதலாவது, சிவத்துடன் சம்பந்தமாவது சைவம் என்பது. அதாவது, சிவத்துக்கும் உயிர்க்கும் உள்ள சம்பந்தத்தை அறிந்து மேற்கொள்வது. இத்தொடர்பை, மகன் - தந்தை முறை, ஆண்டான் - அடிமை முறை, நட்பு முறை, மாணவன் - ஆசிரியன் முறை என்று நால்வகையாகக் கூறுவர். இவற்றை, முறையே, சற்புத்ர மார்க்கம், தாச மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று சைவாசிரியர்கள் உரைப்பர்.

இந்நால்வகைத் தொடர்புகளில், ஞானசம்பந்தர், மகன்மை முறைமையில் (சற்புத்திர நெறியில்) சிவத்தோடு தொடர்பு கொண்டார். அதனை,

"தாயும் நீயே தந்தை நீயே
  சங்கரனே அடியேன்
ஆயின் நின்பால் அன்பு செய்வான்
  ஆதரிக்கின்றது உள்ளம்
ஆய மாய காயம் தன்னுள் ஐவர்நின்று
  ஒன்ற லொட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன்
  வலிவலம் மேயவனே"

என்றும்,

"மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்று எனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே"

என்றும் உரைக்கின்றார். தாயும் நீ தந்தையும் நீ என்பது பலருடைய பாட்டுக்களில் காணப்படுமாயினும், "திருந்திழை யவளொடும் பெற்று எனை ஆளுடைப் பெருந்தகை" என்பது ஞானசம்பந்தரது மகன்மை முறையைத் தெளியக் காட்டுகிறது. அவரே, இறைவன் தனக்குப் பாலூட்டிய குறிப்பை,

" போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதுஎனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்
பேதையா ளவளொடும் பெருந்தகை இருந்ததே "

என்று உரைப்பதனால், அவரது மகன்மைத் தொடர்பு நன்கு வலியுறுகிறது.

திருநாவுக்கரசர், சிவனைத் தனக்குத் தலைவனாகவும், தான் அவனுக்குத் தொண்டனாகவும் முறைமை கொண்டார். இதனைச் சிவஞானசித்தியார் " தாதமார்க்கம் " என்று குறிக்கிறது. நாவுக்கரசர் திருவதிகை இறைவன்பால் குறையிரந்து பாடுமிடத்து,

" முன்னம் அடியேன் அறியாமையினால்
முனிந்து என்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்;
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்;
தன்னை அடைந்தார் வினைதீர்ப்ப தன்றோ
தலையா யவர்தம் கடனாவதுதான்,
அன்ன நடையார் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே "

என்ற திருப்பாட்டில், தான் அடியனானதையும், சிவனைத் தலைவனாகக் கொண்டதையும், " பின்னை அடியேன் உமக்கு ஆளும்பட்டேன் " என்றும், " தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ தலையாயவர் தம் கடனாவது " என்றும் உரைப்பதால், அவரது ஆண்டான்—அடிமை முறை விளங்குகிறது.

அன்றியும், திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், திருவீழிமிழலையில், இறைவன் அருளால் படிக்காசு பெற்ற போது, ஞானசம்பந்தர் பெற்றது வாசி உடையதாகவும்,

நாவரசர் பெற்றது வாசி இல்லாததாகவும் இருந்தமைக்குக் காரணம் காட்ட வந்த சேக்கிழார்,

"ஈசர் மிழலை இறையவர்பால்
இமயப்பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம்
திருமாமகனார் ஆதலினால்,
காசு வாசியுடன் பெற்றார்;
கைத்தொண்டாகும் படிமையினால்
வாசி யில்லாக் காசுபடி
பெற்று வந்தார் வாகீசர்"

என்று உரைப்பதாலும், ஞானசம்பந்தர் மகன்மை முறையும், நாவுக்கரசர் தொண்டர் முறையும் மேற்கொண்டமை அறிகின்றோம்.

இனி, சுந்தரர், சிவன்பால் தோழமை கொண்டவர் என்பது நாடறிந்தது. அது "சகமார்க்கம்" ஆகும். அவர் திருவாரூரில் புற்றிடங்கொண்ட பெருமானை வழிபட்டிருக்கையில், "நம்மை உமக்குத் தோழமையாகத் தந்தோம்" என்றொரு வாக்கு வானில் எழுந்து ஒலிக்க, அன்று முதல் அவர் தம்பிரான் தோழர் எனப்படுவாராயினார். இச்செய்தியை, அவரது வரலாறு,

"வாழிய மாமறைப் புற்றிடங்கொள்
மன்னவன் ஆரருளால் ஓர்வாக்குத்
தோழமையாக உனக்கு நம்மைத்
தந்தனம், நாம் முன்புதொண்டு கொண்ட
வேள்வியில் அன்று நீ கொண்ட கோலம்
என்றும் புனைந்து நின் வேட்கை தீர
வாழிமண் மேல் விளையாடுவாய் என்று
ஆரூரர் கேட்க எழுந்த தன்றே"

என்றும், "அன்று முதல் அடியார்களெல்லாம் தம்பிரான்

தோழர் என்றே அறைந்தார்'' என்றும் கூறுகிறது. சுந்தரரும், தாம் பாடிய அருமைத் திருப்பதிகத்தில்,

''ஏழிசையாய், இசைப்பயனாய்,
  இன்னமுதாய், என்னுடைய
தோழனுமாய், யான்செய்யும்
  துரிசுகளுக்கு உடனாகி,
மாழையுண்கண் பரவையைத் தந்து
  ஆண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன்
  என் ஆரூர் இறைவனையே''

என்று பாடுங்கால், ''என்னுடைய தோழனுமாய்'' என்று எடுத்துமொழிவது, அவர் கொண்ட தோழமை முறையை வற்புறுத்துகின்றது.

மணிவாசகர்க்கும் சிவத்துக்கும் உள்ள தொடர்பு, மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் உள்ள தொடர்பாகும் என்பதை, அவரது வரலாறு காட்டுகிறது. அது ''சன்மார்க்க நெறி'' எனப்படுகிறது. அவரும் தாம் அருளிய திருவாசகத்தில்,

''அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரனாகி அருளிய பெருமையைச்
சிறுமை யென்று இகழாது''

என்றும், ''கோகழி யாண்ட குருமணி தன் தாள் வாழ்க'' என்றும், ''கூடல் இலங்கு குருமணி போற்றி'' என்றும்,

''சீவார்ந்து ஈமொய்த்து அழுக்கொடு திரியும்
  சிறுகுடில் இதுசிதையக்
கூவாய், கோவே, கூத்தா, காத்து ஆட்
  கொள்ளும் குருமணியே,
தேவா, தேவர்க் கரியானே சிவனே
  சிறிது என்முகம் நோக்கி
ஆவா என்ன ஆசைப்பட்டேன்
  கண்டாய் அம்மானே'' (ஆசை)

என்றும்,

"கொடு மாநரகத்து அழுந்தாமே
காத்து ஆட்கொள்ளும் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கால்
நன்றே எங்கள் நாயகமே" (ஆனந்தமாலை)

என்றும் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு, தந்தை, தலைவன், தோழன், ஆசிரியன் என்ற முறையில் சிவத்தோடு சம்பந்தமாவது பத்திநெறியாகும். இந்நெறிகளில் சிவனைத் தலைவனாகக் கொண்டு பத்தி பண்ணும் தாதமார்க்கம், சரியையாய்ச் சாலோக முத்தி பயக்கும் என்பர்; தந்தை நிலையில் வைத்துச் சிவத்தின்பால் அன்பு செய்து ஒழுகும் சற்புத்திர மார்க்கம், கிரியையாய்ச் சாமீபம் அளிக்கும் என்பர்; நண்பனாகக் கருதிப் பரவும் சகமார்க்கப் பத்தி நெறி யோகமாய்ச் சாரூப முத்தி தரும் என்றும், சன்மார்க்கநெறி ஞானவொழுக்கமாய்ச் சிவசாயுச்சியம் கொடுக்கும் என்றும் கூறுவர். இதனை,

"சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்ர மார்க்கம்
தாதமார்க்கம் என்றும் சங்கரனை அடையும்
நன்மார்க்கம் நாலவைதாம், ஞான யோக
நற்கிரியை சரியை என நவிற்றுவதும் செய்வர்
சன்மார்க்க முத்திகள் சாலோக்ய சாமீப்ய
சாரூப்ய சாயுச்யம் என்று சதுர்விதமாம்;
முன்மார்க்க ஞானத்தால் எய்தும் முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்"

என்று அருணந்தி சிவனார் கூறுகின்றார்.

இவ்வண்ணம், ஆன்மாவாகிய உயிர், சிவத்தோடு தந்தை தலைவன் முதலாகத் தொடர்பு கொண்டு பத்தி செய்து, பதமுத்தியும் பரமுத்தியும் எய்தும் என்று சிவாகமங்கள் முடிந்தது முடித்துக் கூறுவது பற்றி, எடுத்த எடுப்பிலேயே, திருமூலர் "சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது" என்று சொல்லுகின்றார்.

இனி, இப்பத்தி நெறியால் விளைவது ஞானமாகும். "ஞானத்தால் வீடு என்றே நான்மறைகள் புராணம் நல்ல ஆகமங்கள்" சொல்லும் எனச் சிவஞான சித்தியார் தெரிவிக்கிறது. ஞானநெறி, ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, ஆன்ம லாபம் என மூவகையாகும். அவற்றை,

"தேசுற மருவும் ஆன்ம தெரிசனம் ஆன்மசுத்தி
ஆசிலா ஆன்மலாபம் ஆக மூன்றாகும்; மூன்றும்
பாசம தகல ஞானம் பற்றல், தான் பணியை நீத்தல்,
ஏசில் நேயத் தழுந்தல் எனும் இவற்று அடங்குமன்றே"

என்று **உமாபதி சிவனார்** உரைக்கின்றார். அம்மூன்றனுள், ஆன்ம தரிசனம், "சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்" என்றும், ஆன்ம சுத்தி, "சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்" என்றும், ஆன்ம லாபம், "சைவம் சிவானந்தம் சாயுச்சியமே" என்றும் இத்திருமந்திரத்துள் அடங்கு கின்றன.

ஆன்மாவாகிய உயிர், தன்னை அறிந்து, தன்னை உடைய சிவத்தை அறிந்து அதனைச் சாருதல் சைவ நெறியாகும். தன்னை அறிந்த வழி, தன்னை உடைய சிவத்தை அறிவதும், அதனைச் சார்வதும் நிகழ்வதால், "சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்" என்று உரைக்கின்றார். "தம்மை உணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்" என்று **மெய்கண்டாரும்** விளம்புவர்.

உயிர் தன்னை அறியுமிடத்து, தான் அறிவுடைப் பொருள், தனக்கு உறுதுணையாய் நிற்கும் உடம்பும், மன முதலிய கருவி களும், உலகப் பொருள்களும் அறிவில்லாத சடப்பொருள் என்று கண்டு, அறிவுடைய தன்னோடு அறிவில்லாத உடம்பு முதலியவற்றைக் கூட்டி, உலகில் வாழச் செய்தது சிவம்

என்று அறிந்து கொள்ளுகிறது. அறிவுடைய பொருள், அறிவுடைய பொருளோடு கூடுமேயன்றி, அறிவில்லாத பொருளோடு கூடாது. அறிவில்லாத பொருள் அறிவுடைய உயிரைத் தானாக நாடி அடையாது. ஆகவே, இவ்விரண்டையும் ஒன்று கூட்டி வாழச்செய்வது, இரண்டு மல்லாத வேறாகிய சிவம் என்று உணர்வது, உயிர் தன்னை அறிவதால் உண்டாகும் பயனாகும்.

இங்ஙனம், உயிர், தன்னை அறியுமிடத்துக் காணப்படும் உடல், கருவி, உலகு என்பவற்றைச் சைவநூல்கள் **பாசம்** என்று வழங்கும். இவற்றின் பண்பு செயல் முதலியவற்றைக் காண்பதும், அவை அறிவில்லாத சடம் என அறிவதும், அவை அறிவுடைப் பொருளாகிய தன்னோடு ஒன்றல்ல என உணர்ந்து, அவற்றைத் தன்னோடு புணர்த்த திருவருளின் துணையாக அவற்றினின்றும் நீங்கல் வேண்டுமெனத் துணிவதும் எனத் தன்னை அறிதல் மூன்று கூறுபடும். இவற்றை முறையே தத்துவ ரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி என்பர். இதனை,

"மண்முதல் சிவமது ஈறாய் வடிவு காண்பதுவே ரூபம்
மண்முதல் சிவமது ஈறாய் மலம்சடம் என்றல் காட்சி
மண்முதல் சிவமது ஈறாய் வகையதில் தான் நில்லாது
கண்ணுதல் அருளால் நீங்கல் சுத்தியாய்க் கருத லாமே*"

என்று உண்மை நெறி விளக்கம் விரித்து உரைக்கின்றது,

---

*மண் முதலிய பூதம் ஐந்தும், தன்மாத்திரை ஐந்தும், கண் முதலிய அறிகருவி ஐந்தும், வாய் முதலிய செயற்கருவி ஐந்தும், மன முதலிய கரணம் நான்கும், கலை முதலிய வித்தியா தத்துவம் ஏழும், சுத்த வித்தை முதல் சிவம் ஈறாக நின்ற சுத்த தத்துவம் ஐந்தும் என்ற முப்பத்தாறும் அடங்க, "மண் முதல் சிவமது ஈறும்" என்று கூறுகின்றனர்.

இவ்வாறு, சடமாய், வேறாய், நீங்கத் தக்கனவாய் உள்ள உடல் கருவி முதலியவற்றின் தொடர்பு, உயிர்க்கு எங்ஙனம் உண்டாயிற்று எனின், அவற்றின் வேறாகிய உயிர், மலத்தால் பிணிப்புண்டு, அறியாமை இருளில் ஆழ்ந்து அல்லற்படுவது கண்டு, அருளே வடிவான சிவபரம்பொருள், இவ்வுடல் முதலியவற்றை மாயை என்ற அறிவில்லாத சடசத்தியிலிருந்து படைத்து உயிரோடு சேர்த்து உலகில் வாழச் செய்கிறது. இதனை,

"உணர்வு எழாச் செயிர் வலியினால் உறவினை இழந்து
தணவுறாத ஆணவத்தினைத் தலைப்படும் உயிர்கட்கு
அணவு தாய் என இரங்கி ஆரருளினால் பருவப்
புணர்வு தேர்ந்து உடல் கரணமும் புவனமும் பொருத்தும்"

என்று **கச்சியப்ப முனிவர்** காரணம் காட்டி உரைக்கின்றார். இதன்கண், ஆணவமாகிய மலத்தால் உளதாகும் அறியாமையை, இப்பாட்டில், "உணர்வு எழாச் செயிர்" என்றும், அதனால் மயங்கிச் செய்வகை அறியாது வருந்தும் உயிரினின்றும், அந்த ஆணவ மலம் நீங்குவதில்லை என்றற்குத் "தணவுறாத ஆணவம்" என்றும் குறிக்கின்றார். ஆணவத்தின் பிணிப்பிலிருந்து உயிரை நீக்குதற்காக, சிவபரம் பொருள், தன் பேரருளால் உடம்பும் உலகுமாகிய பொருள் களைப் படைத்து அளிக்கின்றது; அதனை, "அணவு தாய் என இரங்கி ஆர் அருளினால் பருவப் புணர்வு தேர்ந்து உடல் கரணமும் புவனமும் பொருத்தும்" என்று அறிவிக்கின்றார்.

இனி, அம்மலத்தின் பிணிப்பிலிருந்து உயிர் தானே விலகலாமே எனின், செம்பில் களிம்பு போல அம்மலம் கலந் திருக்கிறது; செம்பினால் களிம்பை நீக்க முடியாது; களிம்பும்

செம்பை விட்டு நீங்காது; அதுபோல, உயிரினால் மலத்தை நீக்க முடியாது; அம்மலமும் உயிரை விடுவதில்லை.

> "செம்புதான் களிம்பைப் பாற்று அறியாது;
> களிம்புதான் தீர்வதும் இல்லை;"

அதுபோல்,

> "வெம்பிய மலத்தை உயிர் விடல் அறியா;
> விடுவதும் மலம் தனக்கு இல்லை"

என்று விளக்கி, செம்பினை ஒரு மருந்திட்டுப் பொன்னாக்கும் புலவன் போல, சிவபரம்பொருள், மாயையென்ற மருந்து கொண்டு, உடலும் உலகுமாகிய பொருள்களைப் படைத்து உயிர்க்கு அளித்து அதனைப் பிணித்திருக்கும் மலத்தினை மாற்றுகின்றது; இதனை,

> "பைம்பொன் ஆக்குவதோர் மருந்தும்
> அம்மருந்தின் பாங்கறி புலவனும் உளரால்;"

அதுபோல,

> "நம்பிய மாயை உருவினைக் கொடுத்தே
> நாயகன் புகர்மலம் கழிக்கும்,"

என்று அம்முனிவர் கூறுகின்றார்.

ஆகவே, ஆணவமலப் பிணிப்பை நீக்குதற்கு, இறைவன் மாயையினின்றும் படைத்தளித்த உடம்பும், மனம் முதலிய கரணங்களும், உலகும், யாவும் தனக்குத் துணைக்கருவிகளே: உறுதிப்பொருள்கள் அல்ல என்று பகுத்துணர்ந்து நீங்குவது ஆன்மாவாகிய உயிர்க்கு முறை; அன்றி, அவற்றின்மேற் பற்றுக்கொண்டு அலமருவது முறையாகாது எனத் தேர்வது,

தன்னை அறியும் உயிர்க்கு முதற்படியாகும். இதனைத் **தத்துவசுத்தி** என்று சைவநூல் உரைக்கின்றது.

இவ்வாறு, (மண் முதலாகக் காட்டிய) பாசப் பொருள்களை அறிந்து, அவை தன்போல் உணர்வுடையன அல்ல என்று உணர்ந்து நீங்கும் உயிர், (தத்துவ சுத்தி பெறும் உயிர்), அவற்றைக் கொண்டு, செய்வன செய்து, பெறுவன பெற்றுப் பயன் நுகர்வதும், நுகருமிடத்து, அவற்றை இயக்கிப் பயன் கொள்ளும் முதல் தானே என உணர்வதும் **ஆன்மரூபம்.** அவ்வாறு உணருங்கால், உடம்பும் உலகுமாகிய பொருள்களின் துணையில்லையாயின் ஒன்றையும் உணரமுடியாத தனது சிறுமையை உயிர் அறியும். அறியுமிடத்துத் தன்பொருட்டு இவற்றைப் படைத்தளித்த சிவத்தின் திருவருளை அறிந்து அதனைவிடத் தனக்குப் புகல் வேறில்லை என்று தெளிவது **ஆன்மதரிசனம்.** அத்தெளிவால், எல்லாம் திருவருளின் செயலேயன்றித் தன்செயல் என ஒன்றும் இல்லை என்று அறிந்து அத்திருவருளைச் சாரும். இவ்வாறு, பாசப் பொருளைப் பயன்கொள்வது உயிராகிய தானேயன்றி ஏனைப்பாசமும் அன்று, பதியுமன்று என உணர்வதும், அதற்கேதுவாகிய திருவருளைத் தெளிவதும் செய்து, அத்திருவருளின் வழி நிற்கும் நிலை **ஆன்ம சுத்தி** யாகும். இதனை,

'' இன்னணம் பாசம் அகறலும், உறவும்
இகலுறு பகையும் நாடாது,
மன்னிய தானே முதல் என நிற்றல்
மாசுயிர்க்கு உரு; இதுகாறும்
அன்னியத் தழுங்கும் நினக்கு உயிர் அருள் என்று
அகற்ற அவ்வருளினன் முதல் என்று
உன்னுதல் காட்சி; உதுகொடு செயல்நேர்ந்து
ஒழிந்து அருளாய்விடல் சுத்தி ''

என்று கச்சியப்ப முனிவர் கூறுவர்.

இது, உயிர், தன்னையும் சிவத்தையும் அறியும் நெறியாகும். பாசப் பொருளாகிய உடம்பொடு கூடி உலகில் வாழுமிடத்து, இன்பம் தோன்றும் போது, அதன்பால் விருப்பும் உறவும் கொண்டு, துன்பம் எய்துங்கால், அதன்பால் வெறுப்பும் பகையும் கொள்வது உயிரின் செயற்பண்பாதலால், அதனை விடுத்து, உடம்பு உலகுகளிடத்தே நட்பும் பகையுமின்றி, அவற்றை இயக்கிப் பயன்கொள்ளும் முதல் தானே எனக் காண்பது உயிரின் உண்மை உருவம்; இது பற்றியே, இப்பாட்டு, "உறவும் இகலுறு பகையும் நாடாது மன்னிய தானே முதல் என நிற்றல் மாசுயிர்க்கு உரு" என்று கூறுகிறது. மலமாகிய மாசுடன் கூடியிருப்பதால் உயிர் இங்கே "மாசுயிர்" எனப்படுகிறது.

உயிர்க்கு, ஒருபால் பாசப் பொருளும், ஒருபால் பரம் பொருளின் திருவருளும் பற்றுக்கோடாதலால், பாசப் பொருளினின்றும் தான் வேறு என உணரும் போது, திருவருள் அதன் முன்னே நின்று பாசத்தின் நீங்குதற்குரிய அறிவுத்துணை புரியும்; அதனால் திருவருளே தனக்கு முதல் என்று உயிர் துணிவு கொள்ளும்; அந்நிலையே உயிர் தன்னை உள்ளவாறு காணும் காட்சி (தரிசனம்) ஆதலால் "இதுகாறும்; அன்னியத்து அழுங்கும் நினக்கு உயிர் அருள் என்று அகற்ற அவ்வருளினன் (அருளையுடையவன்) முதல் என்று உன்னுதல் காட்சி" என்று ஆசிரியர் அறிவிக்கின்றார்.

இவ்வாறு தனக்குத் திருவருளே முதல் என்று உணரும் உயிர், நினைப்பதற்கும் பேசுதற்கும் செயல் பல செய்தற்கும், கருவிகளான மனமும், வாயும், உடலும், திருவருளால் இயங்குவன என்று அறிந்து, தான் செய்வன அனைத்தும்

அத்திருவருளின் செயல் என்று ஒழிந்து, தன் செயல் அற்றிருக்கத் தலைப்படும் நிலை, செயலறுதி எனப்படும் **ஆன்ம சுத்தி**யாகும். அதனை உணர்த்தற்கே, "உதுகொடு செயல் நேர்ந்து ஒழிந்து அருளாய்விடல் சுத்தி" என்று இப்பாட்டுக் கூறுகிறது. திருவருளே எல்லாவற்றிற்கும் முதலாக இருப்பதை, ஆசிரியன்மார் எல்லார்க்கும் முன்னே கண்டு கூறிய காரைக்காலம்மையார்,

"அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானல் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு"

என உரைப்பது காணலாம்.

இந்த அருட்காட்சி, தன்னைப் பற்றி நின்ற பாசப் பொருள்களிலிருந்து தான் வேருய் நிற்கும் இயல்பைத் தெளிவுறுத்துவதால், உயிர், தன்னை மலத்தினின்றும் நீக்கி உய்தி பெறுவிக்கும் அத்திருவருட்கு முதல்வன் சிவனே எனத் தேர்ந்துணர்கிறது. பின்பு, அவனது திருவருள் ஞானச் சூழலையே சார்தற்கு விரும்புகிறது. உமாபதி சிவனரும் இக்கருத்தையே,

"தத்துவ மானவற்றின் தன்மைகள் உணருங்காலை
உய்த்தறிந் திட உதிப்பது ஒளிவளர் ஞானமாகும்;
அத்தன்மை அறியுமாறும் அகன்றிட, அதுவாய் ஆன்மாச்
சுத்தமாம்; சுத்த ஞானத்து ஒருமுதல் தோன்றும் அன்றே"

என்று சுருக்கமாகக் கூறுகின்ருர். இங்கே "ஒளிவளர் ஞானம்" என்றது, திருவருள் ஞானம். அந்த ஞானம் சிவத்தைக் காட்டுவதால், உயிர் பாசத்தினின்றும் நீங்கிச் சிவத்தைச் சார்ந்து சிவமாந் தன்மை எய்துகிறது; அதனல்

"அதுவாய் ஆன்மாச் சுத்தமாம்" என்று கூறுகிறார். ஒளிக்கு, விளக்கு முதலாவது போல, அருளுக்கு முதல் சிவமாவதால், திருவருள் புலனாகியவழிச் சிவம் தோன்றும் என அறிதல் வேண்டும். இதனால், உயிர் பாசக்கூட்டத்தினின்றும் நீங்கித் தனக்குப் பற்றுக்கோடாகிய திருவருளைச் சாருவது சிவநெறியாம் என்று விளங்கும். இது பற்றியே திருமூலர், "சைவம் தனை அறிந்தே சிவம் சாருதல்" என்று கூறுகின்றார்.

இனி, "சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்" என்ற திருமூலனார், சாரும் ஒழுக்க நெறியை விளக்கச் "சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்" என்று கூறுகின்றார். மலப்பிணிப்புற்று மாயையாகிய பாசக்கூட்டத்திற் கிடந்து திருவருளால் அம் மலமறைப்பினின்றும் நீங்கித் தூய்மையுறுவது உயிர்; சிவமோ தன்னியல்பில் தூய்மையும் செம்மையும் உடையது. அதனால், சிவமும் சிவச்சார்பு எய்திய உயிரும் ஒன்றென உரைப்பதற்கு இடமில்லை. மலத்தின் நீங்கித் தூய்மையும் சிவமாம் தன்மையும் எய்தினும், மலத்தால் பிணிப்புற்றிருந்த சிறுமை உயிரின்பால் இருப்பதால், சிவம் வேறென உணர்தலே முறை. அதனால், சிவத்தைச் சார விரும்பும் ஆன்மா, உலகியல் வாழ்விடைக் கண்ட பாசப்பொருள்களைச் சேர்ந்தவன் அல்ல நான் என உணர்ந்து நீங்கியது போல, சிவமும் நான் அல்ல என்ற கருத்துடன், சிவத்துக்குரிய அருளுணர்வில் ஒடுங்கித் தொண்டினைச் செய்து வழிபடவேண்டும். இதனை,

> "கண்டஇவை அல்லேன் நான் என்று அகன்று காணக்
> கழிபரமும் நான் அல்லேன் எனக் கருதிக் கசிந்த
> தொண்டினொடும்,

ஒழுக வேண்டும் என்று அருணந்தி சிவனார் கூறுகின்றார். பாசத்தொகுதிகட்கும் உயிர்த் தொகுதிகட்கும் வேறாய், மேலாய் நிற்கும் பரம்பொருளாதலால், அதனைத் தன்னோடு ஒப்பக் கருதுவது கூடாது என்றதற்குக் "கழிபரமும் அல்லேன் நான்" என்று கருதவேண்டும் என்று கூறுகிறார். இதனைத்தான் திருமூலர் "சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்" என்று குறிக்கின்றார். அது கருத்தாயின், சிவத்தொடு கூடிச் சிவானந்தம் பெறுதற்கு வழி யாது என்ற வினா எழும். இதற்கு விடை கூறும் **அருணந்தி சிவனார்,** மனம் கசிந்து தன்முனைப்பு இன்றிச் சிவத்தொண்டு புரிதல் வேண்டும் என்று அறிவுறுத்துவாராய், "கசிந்த தொண்டினொடு" என்று குறிக்கின்றார்.

இத்தொண்டினை இன்னது என விளக்க வந்த **சிவஞான யோகிகள்,** "தொண்டாவது சார்ந்ததன் வண்ணமாம் இயல்புடைய உயிர், கழிபரமும் நானல்லேன் எனக் கருதியவழி, முன்போல முனைத்தலின்றி, ஓங்குணர்வின் உள்ளடங்கி அதன் வழித்தாய் நிற்றல்" என்றும், "முனைத்து நின்று செய்யும் உலகத் தொண்டின் நீக்குதற்குக் கசிந்த தொண்டு என விசேடித்தார்" என்றும் கூறுகின்றார். எனவே, தன் முனைப்பு அற்றவிடத்து ஓங்கும் அருளுணர்வில் ஒடுங்கி அதன் வழி நிற்பது இங்கே குறிக்கப்படும் தொண்டு என்பதாயிற்று.

இவ்வாறு, "கழிபரமும் நானல்லேன்" என வேறாகக் காண்பது **சிவரூபம்** எனவும், தன்முனைப் பின்றித் திருவருள் எனச் செயலறுதல் **சிவதரிசனம்** எனவும், அத்திருவருளில் தோய்ந்து ஒடுங்குவதைச் **சிவயோகம்** எனவும் சிவநெறிச் செல்வர்கள் வகுத்துரைப்பர். அம்மூன்றையும்,

"மேதகும் அருளான் முதல் என நினைத்தல்,
விழுத்தகும் அருளினால் அதுசெய்
தீதறு தொழில்கள் செய்வல் என்று எண்ணும்
செயலறல், திகழ் அருள்மயமாய்ப்
போதமுற்று ஒடுங்கல் என முன்கிளந்து
போந்தவற்று அடங்கிய மூன்றும்
ஆதிதன் உருவம் தரிசனம் யோகம் ஆம்"

என்று **கச்சியப்ப முனிவர்** விளக்குகின்றார்.

சிவத்தின் வேறாய் நின்றாலன்றி, மேலே கூறிய சிவரூபமும் சிவதரிசனமும் பெறுதல் ஆகாமையால், அவ்வாறு நிற்பது சிவநெறியாம் என்றற்குச் "சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்" என்றார். எனவே, சிவத்தைச் சாராமல் அதன் திருவருளில் தோய்ந்து ஒடுங்கவேண்டும் என்பது முடிபாம். அதுவே, **சிவயோகம்** என்று சிவாகமம் கூறுகிறது. இதனை,

"எப்பொருள் வந்து உற்றிடினும் அப்பொருளைப் பார்த்து அங்கு
எய்தும் உயிர்தனைக் கண்டு, அவ்வுயிர்க்கு மேலாம்
ஒப்பில் அருள்கண்டு, சிவத்து உண்மை கண்டு,
உற்றதெல்லாம் அதனாலே பற்றி நோக்கித்
தப்பினைச் செய்வதும் அதுவே, நினைப்பும் அதுதானே,
தரும் உணர்வும் பொசிப்பும் அது தானே யாகும்,
எப்பொருளும் அசைவில்லை என அந்தப் பொருளோடு
இயைவதுவே சிவயோகம் எனும் இறைவன் மொழியே"

என **உண்மை நெறி விளக்கம்** விரித்துரைக்கிறது. இக்கருத்தையே,

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகனாகி இறைபணி நிற்க,
மல மாயை தன்னொடு வல்வினை யின்றே"

என்று **சிவஞானபோதம்** கூறுகிறது.

உயிர், தன்னையும் சிவத்தையும் அறியாது, உலகியலில் தோய்ந்திருக்கும் போதும் சிவம் அவ்வுயிரோடே இருக்கிறது. ஆனால், தன்முனைப்பு ஓங்கி நிற்பதால், உயிர்க்கு உடனிருக்கும் சிவத்தை உணர முடிவதில்லை. அந்த நிலையைச் **சிவஞான போதம்** " அவனே தானே ஆகிய நெறி " என்று குறிக்கிறது. திருவருள் ஞானம் பெற்று, சிவமே தன் செயல் யாவற்றிற்கும் முதல் என்று உணரும்போது, தன் செயலற்று, எல்லாம் சிவம் என்று அதனுள் ஒன்றி நிற்கவேண்டிய நல்லுணர்வு உயிர்க்கு எய்தும். எவ்வாறு ஒன்றுவது எனின், முன்பு தான் செய்த செயல் அனைத்திற்கும், சிவன் உடனிருப்பினும், தானே முதல் என நின்றதுபோல, சிவ வுணர்வு தோன்றியதும், தன்னை யிழந்து சிவமே முதல் என அதன் அருளில் ஒடுங்கவேண்டும்; இதையே, "ஏகனாகி இறைபணி நிற்க" என்று **மெய்கண்டார்** அறிவுறுத்துகின்றார்.

> " நம் செயலற்று இந்த நாம் அற்றபின் நாதன்
> தன் செயல் தானே என்று உந்தீபற "

என்று பெரியோரும் கூறுகின்றனர்.

இவ்வாறு ஏகனாகி நிற்பதால், உயிரைப் பற்றி நின்ற மலம், மாயை, வினை என்ற மூன்றின் தொடர்பும் உயிர்க்கு இல்லையாம் என்பதற்காக, "மல மாயை தன்னொடு வல்வினை இன்றே " எனச் **சிவஞானபோதம்** கூறிற்று. எனவே, சிவனருளில் ஒடுங்கிச் சிவத்தோடு இயைவதே உயிர் செய்தற்குரிய செயலாவது தெளிவாம்.

இவ்வண்ணம், திருவருளையும், அதற்கு முதலான சிவத்தையும் கண்டு, அதனுள் ஒடுங்குவதால் உயிர்களாகிய நாம் பெறும் பயன் யாது? சிவயோகத்தால் — சிவத்தைச் சாராது

அதன் அருளில் மூழ்குவதால் — விளைவது என்னை? என்ற ஐயம் இங்கே எழுகிறது. இதற்கு விடைகூறும் முறையில், உயிர் சிவானந்தப் பெரும் போகத்தை நுகரும் எனச் சான்றோர் கூறுவர். உணர்வு ஒத்த இருவர் கூடுமிடத்தே விளைவது இன்பம் என்பது யாவரும் அறிந்தது. இதையே **திருமூலர்**, "சைவம் சிவானந்தம் சாயுச்சியமே" என்று அருளுகின்றார். **அதனை அருணந்தி சிவனார்,**

"ஒன்று காமல் இரண்டா காமல்
ஒன்றும் இரண்டும் இன்று காமல்
தன்னது பெருமை தாக்கா னாயினும்
என்னது பெருமை எல்லாம் எய்தித்
தன்னை எனக்குத் தருவதை அன்றியும்
என்னையும் எனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனுள்
ஆரா இன்பம் அளித்தனன்"

என்று கூறுகின்றார். இக்கருத்தினைச் **சிவபோகம்** எனக் குறித்துக் **கச்சியப்ப முனிவர்** விளக்குகின்றார்.

"ஒன்றுறும் அதனால் ஒரு பொளாகாது,
இரண்டினால் வேறும் ஆகாது,
தொன்றுறும் நிலையே நிலையதாய்ச் சேர்ந்து
துன்னலும் துன்னுருமையும் அற்று
அன்றும் ஆணவத்தின் அழுந்தியாங்கு, அறிவாய்
அறிவினுள் அழுந்தி, ஆங்கு அறிவு
பொன்றியும் பொன்றாது அவசமாய் இன்பப்
புணரிவாய் மடுப்பது போகம்."

இங்கே, மலநீக்கம் பெற்றுத் தூய்மை எய்திய உயிர், சிவத்தோடு ஒன்றும் என்பதனால், அவ்வுயிரும் சிவமும், நீரும் நீரும் கலந்து ஒன்றுவது போல, ஒரு பொருளாய்விடும் என்பது கருத்தன்று; அன்றியும், உயிர் என்றும் சிவம் என்றும்

இரண்டாகக் கூறுவதால், ஒன்றினென்று வேறு எனவும் கருதப்படா; அதுபற்றியே, ''ஒன்றுறும் அதனுல் ஒரு பொருளாகாது, இரண்டினுல் வேறும் ஆகாது'' என்றூர். ஞாயிற்றின் ஒளியில் விளக்கொளிபோலச் சிவவொளியில் உயிராகிய அறிவொளி கலந்து, சேர்தலும் சேராமையும் இன்றி, **உடனுய் நிற்கும்** என்பது விளங்க, ''தொன்றுறும் நிலேயே நிலேயதாய்ச் சேர்ந்து துன்னலும் துன்னுருமையும் அற்று'' என்றூர். அன்று (கேவலத்தில்) உயிர் ஆணவமாகிய மலத்தோடு கலந்து அத்துவிதமாய் இருந்தது போல, இன்று மலம் நீங்கிய தூய நிலேயில், அறிவுமயமாய்ச் சிவத்தின் பேரருளில் தோய்ந்து கலத்தலும் கலவாமையும் இன்றி அத்துவிதமாய், (உடனுய்ச்) சிவபோகமாகிய இன்பத்தை நுகரும்; அதுபற்றியே, ''அன்றும் ஆணவத்தின் அழுந்தி யாங்கு அறிவாய் அறிவினுள் அழுந்தி ஆங்கு அறிவு, பொன்றியும் பொன்ருது அவசமாய் இன்பப் புணரிவாய் மடுப்பது'' என்று உரைக்கின்றூர்.

இவ்வுடன்நிலேயை விரிவாகத் தருக்க முறையில் ஆராய்ந்து காட்டுகிறூர் **அருணந்தி சிவனுர்.** ''உயிரும் அறிவாகிய சித்துப் பொருள்; சிவமும் அறிவாகிய சித்துப் பொருள்; இரண்டும் ஒன்றுதலில் குறையேது?'' என்ற வினுவை எழுப்பிக்கொண்டு, இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை விளக்க முற்பட்டு,

''சிவன் சீவன் என்றிரண்டும் சித்து ஒன்றும் என்னில்,
சிவன் அருட்சித்து இவன் அருளேச்சேரும் சித்து; அவன்தான்
பவம் கேடு புத்தி முத்தி பண்ணும் சித்து; அவற்றில்
படியும் சித்து, அறிவிக்கப்படுஞ் சித்தும் இவன்தான்,
அவன்தானே அறியும் சித்து, ஆதலினுல் இரண்டும்
அணேந்தாலும் ஒன்ருகாது அநந்நியமாய் இருக்கும்''

என்று கூறுகின்றார். உயிர் சிவமாம் தன்மை எய்திச் சிவத்தோடு கூடுமிடத்தும், அது சிவமேயாகி விடுவதில்லை என வற்புறுத்தி, உயிரின் நிலையை, "உம்பர்பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன், உயிர் தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்து" எனத் தெளிவுபடுத்துகின்றார்.

மேலும், உயிர், தூய்மையால் சிவமாந்தன்மை பெறினும், சிவத்தின் தூய்மையை நோக்க, மலத்தோடு கலந்திருந்த சிறுமை யுடையதாகையால், முடிவில் ஒன்றுதலின்றி உடனுதலைக் கண்டே, ஞானசம்பந்தரின் முத்திப் பேறு கூறுங்கால், "போத நிலை முடிந்தவழிப் புக்கு ஒன்றி உடனானார்" என்று சேக்கிழார் பெருமானும் தெரிவிக்கின்றார்.

அன்றியும், அறிவுடைய பொருள் இரண்டு கூடி ஒன்றுகுமாயின், அக்கூட்டத்தின் இன்பப்பயனை, அவற்றில் ஒன்றும் நுகர்தல் இல்லையாம்; உடனாகும்போதுதான் அக்கூட்டத்து இன்பத்தை நுகர முடியும். இதுபற்றியே, முத்தி நிலையில் திருநாவுக்கரசர் ஞானவடிவில் உடனாய் நின்று பெற்ற இன்ப நலத்தைச் சேக்கிழார், "நண்ணரிய சிவானந்த ஞான வடிவேயாகி, அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்ட அரசு அமர்ந்திருந்தார்" என்று கூறுகிறார். இங்கே, அவர், "அரசு ஒன்றினார்" என்னாதது குறிக்கத்தக்கது.

இவ்வாறு, சிவானந்த வடிவாகிச் சிவனடிக்கீழ் வாழும் சிவானந்த சாயுச்சியத்தைப் பெறுவது **சைவம்** என்கிறது திருமந்திரம். இப்போது அதனை நோக்குவோம்.

> "சைவம் சிவத்தோடு சம்பந்தமாவது;
> சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்;
> சைவம் சிவம்தன்னைச் சாராமல் நீவுதல்;
> சைவம் சிவானந்த சாயுச்சியமே"

இதன்கண், முதலிற் கூறப்படும் சிவ சம்பந்தம், சிவத்தைத் தந்தையாகவும், தலைவனாகவும், நண்பனாகவும், ஆசிரியனாகவும் உறவுகொண்டு வழிபடும் பத்திநெறி. பத்தியின் விளைவுஞானம். அதனால், உயிர் தன்னை யறிதலையும், சார்பாகிய சிவத்தை அறிதலையும், இரண்டாம் அடியில், "சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்" என்று கூறி, மூன்றாமடியில், சிவத்தின் வேறாய் நின்று அதன் திருவருளில் தோயும் சிவயோகத்தைச் "சைவம் சிவம் தன்னைச் சாராமல் நீவுதல்" என அறிவுறுத்தி, சைவ ஞானப் பயனாகிய சிவபோக நுகர்ச்சியைச் "சைவம் சிவானந்த சாயுச்சியமே" என்று நான்காமடியில் நிறுத்தியிருப்பதைப் பார்க்கலாம்.

இங்ஙனம், முதலிற் பத்தி நெறி காட்டிப் பின்பு ஞான நெறி அருளும் இறைவன் அருட்செயலை மணிவாசகப் பெருமான், ஒரு திருவாசகத்தில் அழகாகக் காட்டுகிறார்.

"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தம் மலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே"

இத் திருவாசகம் பலரும் நன்கு அறிந்ததாதலால், இதனை எடுத்துக் கொள்கிறேன். இதன்கண் முத்தி நெறி என்றது ஞான நெறி. முத்திக்கு ஞானமே வாயில்.

"ஞானத்தால் வீடு என்றே நான்மறைகள் புராணம்
நல்ல ஆகமங்கள் சொல்ல, அல்லவாம் என்னும்
ஊனத்தார் என் கடவார்"

என்று அருணந்தி சிவனார் கூறுவர்.

இப்பாட்டின் முதலடியில், மணிவாசகர், முத்தியாகிய ஞான நெறி அறியாமல், (அருள் நெறி யறியாமல்) உலகியல் வாழ்வுக்குரிய பொருள் நெறியில், பொன்னும் பொருளும் போகமுமே விழைந்து வருந்தும் மக்களோடு கூடி அவற்றைப் பெறுதற்கே முயன்று வருந்தினேன் என்பாராய், "முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேன்" என்று கூறு கின்றார். உலகியற் பொருள் வேண்டி முயல்கின்ற மக்களை "மூர்க்கர்" என்பது ஏன்? பொன்னும் பொருளும் ஆகிய உலகியற் பொருள்கள் ஓரிடத்தும் நிலையின்றி ஓடித் தமது நிலையாத் தன்மையைக் காட்டிய வழியும், அவற்றை விடாப்பிடியாய்த் தொடர்ந்து முயல்வதால், மக்களை மூர்க்கர் என்று குறிக்கின்றார். "மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா" என்பது பழமொழி. மேலும், அவர்கள் இயல்பிலேயே மூர்க்கர் அல்லர்; நிலைத்த வாழ்வும் நிலையான இன்பமும் தரும் முத்தி நெறியை அறியாமையால், உலகியற் பொருள் தரும் சில் வாழ்நாள் சிற்றின்பத்தையே பற்றி மூர்க்கராயினர் என்று தெரிவித்தற்கு, "முத்தி நெறி அறியாத மூர்க்கர்" என்று அவர்களது உண்மை நிலையை உரைக்கின்றார்.

பொருள்மேல் உள்ள பற்றினை மாற்றிப் பரம்பொருள் பால் பற்றுக்கொள்ளச் செய்வது, அன்பு கொள்ளச் செய்வது, பத்தி. பத்தி என்ற வடசொல்லுக்கு நேரிய தமிழ்ச்சொல் அன்பு. இறைவன்பால் கொள்ளுகின்ற அன்பு ஞானத்தை நல்குவது. அது பற்றியே, ஞானசம்பந்தர் பாடிய திருப் பாசுரத்துக்கு உரைகண்ட சேக்கிழார், "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்று கூறுகின்றார்.

இங்ஙனம், மூர்க்கரொடு முயலும் எனக்கு இறைவன், முதற்கண் ஞானத்துக்கு வாயிலாவது பற்றி, பத்தி நெறியை அறிவுறுத்தினன் என்பாராய், ''பத்தி நெறி அறிவித்து'' என்று கூறுகின்றார். ''அடியேனை ஆண்டுகொண்டு, பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி'' என்றும், ''சித்தமே புகுந்து எம்மை ஆட்கொண்டு, தீவினை கெடுத்து, உய்யலாம் பத்தி தந்து, தன் பொற்கழற்கணே பன்மலர் கொய்து சாத்தலும், முத்தி தந்து இந்த மூவுலகுக்கும் அப்புறத்து எமை வைத்திடும்'' என்றும் கூறுவதால், பத்தி நெறியே இறைவன் முதற்கண் அருளுவது காணலாம். காரண காரிய முறையில் அறிவித்தாலன்றி, பத்தியும் மக்கள் மனத்தில் நிலைபெறாது என்றற்குப் ''பத்தி நெறி **அறிவித்து**'' என்றார். பத்தி செய்தற்குரிய நெறியறியாது தாம் இருந்ததை, ''உன்னை வந்திப்பதோர் நெறியறியேன், நின்னையே அறியேன், நின்னையே அறியும் அறிவறியேன், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே'' என்று சொல்லி, பின்பு இறைவன் அறிவருளிய செய்தியை,

> '' அறிவிலாத எனைப்புகுந்து ஆண்டுகொண்டு அறிவதை அருளி
> மேல்நெறியெலாம் புலமாக்கிய எந்தை ''

என்று **மாணிக்கவாசகரே** உரைக்கின்றார். இவ்வாறே திருநாவுக்கரசர்க்கு இறைவன் அறிவு நல்கினன் என்பதை,

> '' பன்னிய செந்தமிழ் அறியேன் கவியேன் மாட்டேன்
> எண்ணோடு பண்ணிறைந்த கலைகளாய
> தன்னையும் தன்திறத் தறியாப் பொறியிலேனைத்
> தன்திறமும் அறிவித்து நெறியும் காட்டி ''
> (எறும்பியூர்)

ஆட்கொண்டான் என்றும்,

"இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவம் கெடுத்து ஏழையேனை உய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போல்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை"

என்றும் கூறுகின்றார். இவற்றால், இறைவன் பத்தி நெறி நல்கிப் பின் முத்திக்குரிய நெறியை — ஞான நெறியை — உணர்த்துவன் என்று அறியலாம். இது பற்றியே ஞான சம்பந்தரும், "பத்தி மலர்தூவ, முத்தியாகுமே" என்று சுருக்கமாக உரைக்கின்றார்.

இங்ஙனம், பத்தி நெறி அறிந்து ஒழுகுமிடத்துப் பழவினைத் தொடர்பு போந்து அறிவை மயக்குவதுண்டு. "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும் தன், உண்மை யறிவே மிகும்" என்று திருவள்ளுவரும் கூறுவர். வினையால் அறியாமை விளையும்; ஆதலால் வினைதீர்தற்கு ஞானத்தை நாடவேண்டும் என்ற கருத்துப்பட,

"வினையால் அசத்து விளைதலால் ஞானம்
வினைதீரின் அன்றி விளையாவாம் • வினைதீர
ஞானத்தை நாடித் தொழுவே அதுநிகழும்;
ஆனத்தால் அன்பின் தொழு"

எனச் சிவஞானபோதம் செப்புகிறது.

ஞானம் பெறுதற்குத் தடையாவது, உயிரைப் பற்றி யிருக்கும் ஆணவமாகிய மலத் தொடர்பு; அதனை,

"தூய நினைவைத் தூமொழியைத்
தூய தொழிலைத் தோற்றுது
தீய நினைவைத் தீமொழியைத்
தீய தொழிலைத் தவத் தோற்றும்
ஆய தனி ஆணவப் பகை"

என்று அறிஞர் உரைப்பர். அது, தன் தொழிலைச் செய்தற்கு மனவெல்லையின்கண் உள்ள சித்தத்தைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ளும்;இறைவன் திருவருளில் தோய்ந்து செயற்படுதற்கும் அச் சித்தமே கருவியாகும். ஆதலால், சித்தத்தைப் பற்றி நிற்கும் மலத்தைச் சிவபரம்பொருள் ஞானம் அருளிப் போக்குவது பற்றி, "பழவினைகள் பாறும்வண்ணம் சித்தமலம் அறுவித்து" என்று கூறுகிறார். மலப்பிணிப்பு நீங்கியவழி, அதனைச் சார்ந்து நிற்கும் பழவினைக்கு இடமில்லாது ஒழிதலால், பழவினைகள் பாறும்வண்ணம்" என்று இயம்புகிறார். சிவஞானத்தால், சித்தம், மலம் முதலிய பாசக் கலப்பினின்றும் நீங்கிச் சிவகரணமாவதால், தான் சிவமாம் தன்மை எய்தத் தன்னைச் சிவன் ஆட்கொண்டுவிட்டான் என்று அறிவிப்பதற்காக, "சிவமாக்கி எனை ஆண்ட அத்தன்" என்று மகிழ்ந்து, இப்பேறு பிறர்க்கு எய்துவது அரிது என வியந்து, "அத்தன் எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே" என்று பாடுகின்றார். இப்பாட்டால், முதற்கண் பத்தி நெறியும், பின்னர் முத்தியாகிய ஞான நெறியும் சைவச்செந்நெறி யாவது நன்கு தெளியலாம். இவ்வாறே திருமுறைகளில் பத்தியையும் ஞானத்தையும் காரண காரிய நெறியில் காட்டுவது சமய குரவர்களின் இயல்பு. இத் திருவாசகத்திற் போலத் தேவாரத்தில் திருஞானசம்பந்தர்,

> "பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்
> பாலே போகாமே காவாப் பகையறு வகை நினையா
> முத்திக்கே விக்கத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்
> மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒரு நெறியாய்ச்
> சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
> சேர்வார் தாமே தானாகச் செயும் அவன் உறையுமிடம்"

என்று பாடுவர்.

இவ்வாறு பத்தியால், மக்கள் உள்ளத்தைச் சிவனது திருவடிக்கண் செலுத்தி, ஞானத்தால் திருவருளில் தோய்ந்து இன்பம் பெறுவிக்கும் நன்னெறியாகிய சைவம், வரலாற்றுக் கால முதற்கொண்டு சேக்கிழார் காலம் வரை, முறையாக வழிவழியே இயங்கி வந்தது. நாடு முழுதும், ஊர்தோறும், பெருங்கோயில்கள் தோன்றி மக்களிடையே சைவ வுணர்வும் ஒழுக்கமும் தழைக்கச் செய்தன. திருமுறை ஆசிரியர்களும், வேற்றுச் சமயங்களால் மக்கள் மனம் கெடாவண்ணம், ஊர் ஊராய்ச் சென்று, சிவ பத்தியும் சிவ ஞானமும் நிறைந்த இசைப்பாட்டு ஓதும் திருப்பணி செய்து, சைவ வாழ்வு பெருகிப் பரவி நிலவும் சிறப்பை உண்டு பண்ணினர்.

பின்னர், மெய்கண்டார், அருணந்திசிவனூர் முதலிய ஆசிரியன்மார் தோன்றி, ஞான நெறியைத் தனிப்பட வாங்கி நூல்கள் செய்தனர். ஆயினும், அரசியலிலும் பொது வாழ்விலும் சமய நெறியிலும் தோன்றிய மாறுதல்களால், மக்களிடையே சைவ வுணர்வு சுருங்கத் தலைப்பட்டது. அது கண்ட சைவாசிரியர்களில் ஒருவரான **அருணந்திசிவனூர்,**

"சித்தாந்தத்தே சிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
 செனனம் ஒன்றிலே சீவன் முத்தராக
வைத்து ஆண்டு, மலம் கழுவி, ஞானவாரி
 மடுத்து, ஆனந்தம் பொழிந்து, வரும் பிறப்பை அறுத்து,
முத்தாந்தப் பாதமலர்க்கீழ் வைப்பன் என்று
 மொழிந்திடவும், உலகர் எலாம் மூர்க்கராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
 பெருங்குழியில் வீழ்ந்திடுவர், இது என்ன பிராந்தி"

என்று சொல்லி வருந்தினர்.

எனினும், நிலைமை தெளிவு பெறவில்லை. சில நூற்றாண்டு கழித்து அவர்கட்குப் பின்னே தோன்றிய குமரகுருபரர் காலத்திலும் சிவஞானச் செந்நெறி குன்றியே இருந்தது; சிலரே இதன் வழிநின்றனர். அதனால், அவர்,

" ஓரும் வேதாந்தம் என்ற உச்சியிற் பழுத்த
சாரம் கொண்ட சைவ சித்தாந்தத்
தேனமுது அருந்தினர் சிலரே "

என்று குறைபட்டனர்.

இவ்வாறு சைவம் சுருங்குதற்குக் காரணம் யாது என எண்ணிய சான்றோர், செல்வரிடத்துப் பொருள் மையலும் வறியவர்பால் சிறுமையுணர்வும் தோன்றிச் சிவநெறியின் வளர்ச்சிக்குத் தீது செய்துவிட்டன என்று நினைந்து,

" வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமை தப்பித்
தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அரிது; சால உயர்சிவ ஞானத்தாலே
போழ் இளமதியினானைப் போற்றுவார் அருள்பெற்றாரே "

என்று சித்தியார் கூறியதையே தாமும் மொழிந்தனர்.

நிலத்தில் மேடு பள்ளம் போல, மக்களிடையே செல்வ வறுமைகள் தோன்றுகின்றன; கடல்நீர் தனக்குள் மேடு பள்ளம் இருப்பினும், தனது நிறைவால் சமநிலை தோற்றுவிப்பது போலத் திருவருள் உணர்வு பெருகிய வழிச் சமநிலை தோன்றும்; அதற்கு மக்களிடையே சிவஞானம் நிறைதல் வேண்டும் என வற்புறுத்துவாராய், சான்றோர்,

" தம்மை யுணர்ந்து தமையுடைய தன் உணர்வார்
எம்மை உடைமை எமை இகழார் "

என்று ஒருமையுணர்வுக்கு வழிகாட்டி, அந்தச் சமநிலை ஞானம் இல்லாமையால், மக்கள் தம்மிற் சிதைந்து விடுகின்றனர்;

" — தம்மை
உணரார் உணரார்; உடங்கு இயைந்து தம்மிற்"

புணரார் என்று மொழிந்தனர்.

ஆனால், சைவத்தின் வரலாறு வேறு காரணம் காட்டுகிறது. ஞானசம்பந்தர் முதலிய சமய குரவர் தோன்றுதற்கு முன்னே தோன்றிப், பத்தியையும் ஞானத்தையும் வாழ்ந்து காட்டிய காரைக்காற் புனிதவதியாரும், சமயத்தின் பொருட்டுத் தவம் மேற்கொண்ட திலகவதியாரும், மங்கையர்க்கரசியும் போன்ற பெண்மணிகள் தோன்றி நல்லாதரவு நல்கும் பேறு, பிற் காலத்தில் சைவத்திற்கு இல்லாது போயிற்று.

மாங்கனி நிகழ்ச்சியால், கணவன் "நற்பெரும் தெய்வம்" என்று நினைந்து தம்மைவிட்டு நீங்கிய போது, காரைக்கால் அம்மையார், சிவநெறியில் ஊன்றி நின்று, தமது மேனி யழகைத் துறந்து எலும்பும் தோலுமாகிய பேய் வடிவு கொண்டு,

" இடர்களை யாரேனும் எமக்கு இரங்கா ரேனும்
படரும் நெறிபணியா ரேனும் - சுடர்உருவில்
என்பறாக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என்நெஞ்சு எமக்கு"

என்ற உறுதியுடன் சிவநெறிக்கு ஆக்கம் செய்தார்.

ஞானசம்பந்தரைப் பெற்ற பகவதியார், சைவம் வளர்த்தற்கென்றே தவம் இருந்து, அத்தவப் பயனாய்ப் பெற்ற சம்பந்தர்க்குத் தாய்ப்பாலைத் தரும் போதே "பரமன் தாள்

பாவும் அன்பே திருமுலை சுரந்து அமுது செய்தருளுவித்தார்'' என்று சேக்கிழார் கூறுவர். அதன் பயனாக, ஞானசம்பந்தர், பால்மணம் மாறாத முன்பே,

'' சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்,
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில்''

என்று சான்றோர் புகழுமாறு, ஞானம் பெற்று, '' நாளும் இன்னிசையால்'' சிவம் பெருக்கினார்.

பாண்டிநாட்டு அரசியாகிய மங்கையர்க்கரசி, தனது நாட்டில், சைவ வுணர்வும் சைவ வொழுக்கமும் தடுமாறிச் சிறுமையுறுவதுகண்டு, மனம் பொறாது, திருஞானசம்பந்தரை மதுரைக்கு வருவித்து, நெறிமாறி யிருந்த தன் கணவனைச் சைவனாக்கி மேன்மையுற்றார். அரசு எவ்வழிக் குடிகள் அவ்வழி என்பதற்கு ஒப்ப நாட்டவரும் சைவராயினர். அதனால், அவரை,

'' மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி''

என்று பாராட்டி,

'' செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன் திருநீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமா தேவி
பணிசெயப் பாரிடை நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தம்
தண் எருக்கம் மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவாய் ஆவதும் இதுவே''

என்று ஞானசம்பந்தர் புகழ்ந்து பாடும் நலத்தால் உயர்ந்தார்,

திலகவதியார் திருநாவுக்கரசரின் உடன்பிறந்த தமக்கை. இளமையிலே பெற்றோரையும், பின்பு தம்மை மணக்க இருந்த கலிப்பகையையும் இழந்தமையால், துயர் மிகுந்து, "தம்பியார் உளராகவேண்டுமென வைத்த" தயாவினால் உயிர்தாங்கி அருள் நெறியில் நின்றார். ஆயினும், சிறிது காலத்தில் தம்பியார் வேற்றுச் சமயம் புகுந்து தம்மைக் கைவிட்டுச் சென்றாராக, திலகவதியார், அத்துன்ப நிலையிலும் திருவதிகை அடைந்து, தமது தம்பி மீண்டும் சிவநெறிக்கே உரியராய்த் திருத்தொண்டு புரியவேண்டுமெனச் சிவபரம்பொருளைப் பரவினார்.

"தூண்டுதவ விளக்கனையார் சுடரொளியைத் தொழுது, என்னை
ஆண்டருளும் நீராகில் அடியேன்பின் வந்தவனை
ஈண்டு வினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தருள
வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தனரால்"

என்று அவர் வரலாறு கூறுகிறது.

இப்பெருமாட்டிகளின் பின், சைவவுலகில் பெண்ணியலார் தோன்றிப் பெருமை பெற்றதாக வரலாறு இல்லை. மக்கட் பெருக்கத்தால் மாண்புற்று விளங்கும் பிற சமயங்களின் வளர்ச்சியில், மடந்தையர் பலர் ஈடுபட்டுப் புகழ் மேம்பட்டதை அச்சமயங்களின் வரலாறுகள் விளம்புகின்றன. இடைக் காலத்தில், அரசியல் விடுதலைப் போரில் பெண்டிர் பலர் மிக்க ஆர்வத்துடன் செம்மையாகப் பணி செய்து சிறப்பெய்தி இருக்கின்றனர். இதனை நோக்கும்போது, அரசியலிற் போலச் சமய ஞானத்துறையில் மகளிர்க்கு வாய்ப்பும் வசதியும் கிடைக்கவில்லை என்றுதான் நாம் எண்ணத் தோன்றுகிறது. வேத வேதாந்தங்கள் நிலவிய காலத்தில் மைத்திரேயி முதலியு

மகளிர் சமய ஞானத்துறையில் தக்க புலமை கொண்டு விளங்கினர் என வரலாறு கூறுவதால், மகளிர் சமய ஞானக் கல்விக்கு ஏற்புடையர் என்பதும் நன்கு தெரிகிறது.

கல்லாய் உருமாறிக் கிடந்த அகலிகை, இராமன் கால் துகள்பட்டதும் முன்பு போல் பெண்ணுருக் கொண்டு நின்றதைக் கூற வந்த கம்பர்,

> " கண்ட கல்மிசைக்
>   காகுத்தன் கழல் துகள் கதுவ
> உண்ட பேதமை மயக்கற
>   வேறுபட் டுருவம்
> கொண்டு மெய்யுணர் பவன்கழல்
>   கூடிய தொப்பப்
> பண்டை வண்ண மாய்
>   நின்றனள் மாமுனி பணிப்பான் "

என்று கூறுகின்றார். அகலிகையின் உரு மாற்றத்துக்கு, அறியாமையின் நீங்கி உணர்வு ஒழுக்கம் வேறுபட்டு மெய் யுணர்வால் இறைவன் திருவடி அடையும் ஆன்ம நிகழ்ச்சியைக் கம்பர் உவமமாகக் கூறுவது நமது கருத்தைப் பணி கொள்ளு கிறது. ஞானம் பெறுவது ஆடவர்க்கே உரிமை யென்று கருதும் கருத்து கம்பர்க்கு உடன்பாடன்று; "மாந்தர்க்கும் மடந்தைமார்க்கும் மனம் என்பது ஒன்றேயன்றோ" என்பது அவரது கொள்கை; அது பற்றியே, பெண்மகள் மாற்றத்துக்கு ஞானப்பொருளை உவமம் காட்டுகிறார். இதனால், ஞானாசிரியன் அருளுரை பெற்று அறியாமை நீங்கிப் பத்தியும் ஞானமும் கொண்டு பெண்களும் மேன்மை பெறலாம் என்பது தெளிவாம்.

இன்று, மக்களிடையே சமய வுணர்வும் ஒழுக்கமும் குறைந்திருப்பது கண்கூடு. ஒரு சமயத்தின்பாலும் ஒதுங்காது

பொது நிலை புரியும் அரசின் துணை பெற்றே கல்வி நிலையம் பலவும் இயங்குதலால், அவற்றிற் பயிலும் சிறுவர்க்குச் சமயக்கல்வி நல்குவது இயலாதாகிறது. பொது மேடைகளும் பொது நிலையங்களும் அரசியல் பொருளியல் பேச்சுக்களுக்கே பேரிடமாகப் பிறங்குகின்றன, கோயில்கள் காலந்தோறும் நடக்கும் வழிபாட்டிலேயே கருத்தைச் செலுத்துகின்றன. புராணச் செய்திகளை எடுத்துக் காட்டும் திரைப்படக் காட்சிகள் மக்கட்குப் பொழுதுபோக்காக அமைகின்றனவேயன்றிப் பத்தியும் அதனை வலியுறுத்தும் ஞானமும் நல்குவனவாக இல்லை. இதனால், மக்களிடையே நம் சைவவுணர்வு ஒழுக்கங்களைப் பரப்புதற்கு ஏற்ற வாய்ப்புக் கிடைப்பது அருமையாகிறது.

இனி, இதற்கு ஏற்ற இடம் குடும்பமே என்பது விளங்கும். குடும்ப வாழ்விலிருந்தே நாம் முன்பு கண்ட சைவப் பெருமங்கையர் சமயப்பணி புரிந்தனர். ஒவ்வொரு குடும்பத்தையும் முற்பட நின்று நடத்துவோர் மகளிராக இருப்பதால், மகளிர்க்கே சமயவுணர்வு நல்கும் பொறுப்பும் எய்துகிறது.

இந்நாளில் மகளிர் பலர் கல்வியறிவுடையராய் இருப்பதால், தம்முடைய மக்கட்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பு அவர்கட்கு வந்திருக்கிறது. கல்வி கற்பிக்கும்போது கடவுள் வழிபாட்டிலும் சிறுவர்கள் ஈடுபடுமாறு செய்தால் பத்தி நெறி தானே உண்டாகும். அவர்கட்கு அறிவு வளர வளரப் பத்தி பண்ணுதற்குரிய காரணத்தைத் தெரிவிக்கலாம். காரணம் தெரியாமல் செய்யும் பத்தி மூட பத்தியாய்ப் பிற்காலத்தே மறைந்து போகும். சிவத்துக்கும் உயிர்களுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பையும் அத்தொடர்புண்டான காரணத்தையும் விளக்கினால் பத்தி பண்ணவேண்டிய இன்றியமையாமை எளிதில் விளங்கி விடும். அதன் பயனாக இளைஞர்

உள்ளத்தில் பத்தியும் ஒழுக்கமும் திண்ணமாக அமைந்து விடும்.

இத்துறையில் நமது இந்தியப் பேரரசின் தலைவர் திரு. **இராதாகிருட்டிணன் அவர்கள்** நல்லதொரு கருத்தைத் தெரிவித்துள்ளார். சமய வுண்மைகளை எளிமைப்படுத்திச் சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் சிறு நூல்கள் எழுதி வெளியிடவேண்டும் என்று அவர் கூறுகின்றார். அவ்வாறு செய்தால் அவற்றைத் தாய்மார்கள் படித்துத் தம்முடைய மக்களுக்குக் கற்பிப்பது எளிதாகும். தாய் தந்தையர் சமய வுணர்வும் ஒழுக்கமும் உடையவர்களானால், மக்கள் அவர்களைப் பின்பற்றுவார்கள், அவர்கள் சமயத்தைப் பற்றிக் கேட்கும் வினாக்களுக்குக் காரணகாரிய முறையில் தெளிவான விடையளிக்க முடியும். ஆகையால், சமய வுண்மைகளைத் தாய்மார்களும் இளமகளிரும் முதலில் கற்றுக் கொள்ள வழி செய்ய வேண்டும்.

இன்று, இம்மாநாட்டில் சமய வுணர்வு நிறைந்து தகவுடைய புலமை மிகுந்த சைவ மங்கையர் பலர் வந்துள்ளனர். அவர்களுடைய அறிவுரை நான் இதுகாறும் கூறிய கருத்துக்குப் பெருந்துணையாகும். ஆகவே, சைவம் பற்றியும, சைவமங்கையர் மாண்பு பற்றியும், அவர்கள் இனிச் செய்தற்குரிய பணி பற்றியும் என் உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை இங்கே உரைப்பதற்கு வாய்ப்பளித்த சமாச வைரவிழாக் குழுவினர்க்கு என் நன்றியை மறுபடியும் தெரிவித்துச் சைவப் புலமைத் தையல் நல்லாரைத் தாம் மேற்கொண்ட பொருள் பற்றிச் சொற்பொழிவு செய்யுமாறு அழைக்கின்றேன்.

வாழ்க சைவமங்கையர்! வளர்க சைவம்!!

சித்தாந்தம் 1966. அனுபந்தம்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சென்னைச் சைவசித்தாந்த மகாசமாஜ

மணிவிழா

31—12—65, 1—1—66, 2—1—66ஆம் நாட்களில்

சிதம்பரம்

இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில்

நிகழ்ந்தபோது, வரவேற்புக்குழுத்தலைவர்

திரு. R. கனகசபை M. P. அவர்கள்

கூறிய

வரவேற்பு நல்லுரை.

'செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே'

சைவப் பெருமக்களே, தாய்மார்களே, இளைஞர்களே,

சிவ ராசதானி எனப் போற்றப்பெறும் இத் தில்லையம்பதியிலே சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 60-ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்கெனத் தமிழ் நாட்டின் பல்வேறிடங்களிலிருந்தும் இலங்கை மலேசியா ஆகிய புறநாடுகளிலிருந்தும் இங்கு வந்துள்ள சைவப் பெருமக்களாகிய அனைவரையும் வருக! வருக! என உளமுவந்து அழைக்கின்றேன்.

நமது சைவசமயம், மிகவும் பழமை வாய்ந்தது; உலகத்தார் பலரும் உவந்து ஏற்றுக்கொள்ளும் கருத்துவளர்ச்சியினை உடையது; மக்கள் தங்களைக் குறித்தும் தாங்கள் வாழும் உலகத்தைக் குறித்தும் உலகினை உள்ளும் புறமும் கலந்துநின்று இயக்கும் பரம்பொருளாகிய கடவுளைக் குறித்தும் நூலறிவாலும் வாழ்க்கை அநுபவங்களாலும் தெளிய உணர்ந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது; கடவுள், உயிர், உலகம் என்னும் இம் மூன்றும் என்றும் நிலையாக உள்ள பொருள் எனக் கொண்டு, இவ்வுலக மக்கள் நிலையான இன்பத்தினை இப்பிறவியிலேயே அடைதற்குறியவழியினை வகுத்துக் காட்டுவது. சரித்திர காலத்திற்கு முன் தொடங்கி நம் நாட்டில் குமரி முதல் இமயம் வரை பரவிய பழம் பெருஞ் சமயம் நம் சைவ சமயமே என்பதனை அறிஞர் பலரும் நன்கறிவார்கள். சைவ சமயம் நம் பாரத நாட்டில் மட்டுமல்லாமல் உலக நாடுகள் பலவற்றிலும் ஒரு காலத்திற் பரவியிருந்த

தென்பது அந் நாடுகளில் கிடைக்கும் சிவலிங்கத் திருவுருவங்களால் அறியப்படும். எல்லா நாடுகளிலும் பொதுமுறையிற் பரவிய சைவம், நம் தென்னாட்டில் சைவ சித்தாந்த சமயம் எனச் சிறப்பு முறையில் நிலை பெற்றுள்ளது.

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றியுள்ளார்.

சாதி மத வேறுபாடின்றி இந் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் சரிநிகர் சமானமாக வாழும் நெறிமுறைகளை அரசியல் அடிப்படையில் அமைத்துக்கொண்ட நாடு, நம் பாரதநாடு. உலக மக்கள் அனைவரையும் ஒருகுலத்தாராக மதித்து, அவரவர்கள் மேற்கொண்டுள்ள சமய வழிபாட்டு முறைகள் அனைத்தையும் ஒப்பக்கருதும் பொது நோக்கு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே நம் தமிழ் நாட்டில் நிலை பெற்று வந்துள்ளது. இவ்வுண்மை சங்க இலக்கியங்களைக் கற்றவர்களுக்கு நன்ருகத் தெரிந்ததே. மக்கள் எல்லோரையும் ஒரு குலத்தாராக மதித்து அவர்களால் பலவுருவங்களில் வைத்து வழிபடப்பெறும் கடவுள் ஒன்றே எனவுணர்ந்து வழிபடும் முறையினை நமது சைவசமயப் பெரியோர்கள் நெடுங் காலத்திற்கு முன்னரே அறிவுறுத்தியுள்ளார்கள்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'

எனவரும் திருமூலர் திருமந்திரம் இவ்வுண்மையை விளக்குதல் காணலாம்.

பலதிறப்பட்ட மக்களது அறிவு நிலைகளுக்குத் தக்கவாறு உலகில் வழங்கும் எல்லாச் சமயங்களையும் மெய்ப்பொருளை அடைதற்குரிய வழியின் படிகளாகக் கொண்டு அவையெல்லாவற்றுக்கும் மேலாகச் சமயங்கடந்த சமரச நிலையில் விளங்குவது சைவசமயம் எனப்பெரியோர் கூறுவர். சைவ சமயத்தின் தத்துவக் கொள்கையானது, இக்கால அறிவியல் ஆராய்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் முறையில் அமைந்துள்ளது; மக்கள் எல்லோரும் செல்வர், வறியவர் என்னும் வேறுபாடுகளை மறந்து சிவபரம்பொருளுக்குத் தாம் என்றும் அன்பினால் அடியவர்களே என்னும் தெளிவு பெற்றுச் சமுதாய வாழ்வில் எல்லோரும் சமமே எனக்கருதி ஒன்றுபட்டு வாழ்வதற்கு ஊக்கமளிக்கும் முறையில் அமைந்தது நம் சமயம். இது பற்றியே 'சைவ சமயமே சமயம்' என்றும், 'முத்தி தரும் தெய்வ சபையைக் காண்பதற்குச் சேர வாரும் செகத்தீரே' என்றும் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றார் தாயுமானார்.

நமது தமிழ் வேந்தர்கள் காலத்தில் உயர் நிலையில் விளங்கிய சைவசமயமானது, நம் நாடு உரிமையிழந்து அரசியலில் அடிமையுற்றநிலையில் சைவக் குடும்பத்திற் பிறந்தவர்கள் தம் சமயவுண்மைகளை உணர்ந்து அதன்படி ஒழுகாமையாலும் ஒருசிலர் வேற்றுச் சமயங்களைத் தழுவினமையாலும், ஒரு சிலர் தம் முன்னோர்களது தெய்வக் கொள்கையினை உள்ளவாறு உணரும் வாய்ப்பின்றி இகழ்ந்தமையாலும் தன் பெருமை

குன்றித் தளர்வதாயிற்று. இந்நிலையில் நம் சைவ சித்தாந்த சமயத்தின் உயர்ந்த தத்துவ உண்மைகளையும் சிவ வழிபாட்டின் சிறப்பினையும் தமிழ் மக்கள் அனைவரும் நன்குணர்ந்து பயன்கொள்ளுதல் வேண்டும் என்ற நன்னோக்கத்தால் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள் முதலிய பெரியோர்களால் இன்றைக்கு அறுபதாண்டுகளுக்கு முன்னே தோற்றுவிக்கப் பெற்றது, இச் சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் என்பதனை இங்குள்ளோர் பலரும் தெரிந்திருப்பார்கள்.

சைவசமயத்தினை நாடெங்கும் பரவச் செய்தலையே தனது குறிக்கோளாகக்கொண்டுள்ள இச்சமாஜம், ஆண்டுதோறும் சிறந்த முறையில் விழா நடத்துவதுடன், சித்தாந்தம் என்ற மாதப் பத்திரிகை வாயிலாகவும் சமயவுண்மைகளைப் பலரும் அறியச் செய்து வருகிறது. பன்னிரு திருமுறை நூல்களையும் சைவ சித்தாந்த சாத்திரவுரைகளையும், திருப்புகழ், சங்க இலக்கியம், சீவக சிந்தாமணி போன்ற தமிழ் நூல்களையும் யாவரும் எளிதில் வாங்கிப் பயிலும்படி முதன்முதலாக அடக்க விலைக்கு வெளியிட்டுப் பரப்பிய பெருமை, இச் சமாஜத்திற்குரிய தனிச் சிறப்பாகும். இம் மணிவிழாவிலே சமாஜத்தின் சார்பில் 'சைவ சித்தாந்தம்' என்ற ஆங்கிலப் பத்திரிகை, அற நிலைய ஆணையர் திரு. S. சாரங்கபாணி முதலியார் அவர்களால் வெளியிடப்பெறுவது அறிந்து மிகவும் மகிழ்கின்றேன். நம் முன்னோர்கள் விளக்கியுள்ள

சைவ சித்தாந்த உண்மைகள், ஆங்கிலத்தில் வெளிவந்தால்தான் நம் சமயத்தின் தனிச் சிறப்பினை உலகிலுள்ள அறிஞர்கள் உள்ளவாறு அறிந்துகொள்ளும் வாய்ப்பு உண்டாகும்.

சைவ சித்தாந்த சமாஜம் இவ்வாறு அறுப தாண்டுகளாகச் சைவ சமய வளர்ச்சிக்கு ஆக்க மாகும் பணிகளைச் செய்து வந்துளது. ஆயினும் இப்பணிகளைத் தொடர்ந்து திறம்பெறச் செய்தற் குரிய நிதி வசதியோ, நிறைந்த உறுப்பினர்களது எண்ணிக்கையோ இதற்கு அமையாதது ஒரு பெருங் குறையாகவேயுள்ளது. சைவ அன்பர்கள் பலரும் பெருந்திரளாக இச் சமாஜத்தின் உறுப் பினர்களாகச்சேர்ந்து இதன் தொண்டுகள் இனிது நிகழப் போதிய ஆதரவு அளிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

சைவ சித்தாந்த சமாஜத்தின் மணிவிழா, சைவர்களால் கோயில் எனப் போற்றப்பெறும் பெருமை வாய்ந்த சிதம்பரத்திலே நிகழ்வது மிகவும் பொருத்தமாகும். இச் சமாஜத்தின் பொன் விழா பத்தாண்டுகளுக்கு முன்னே இங்கு இளமை யாக்கினர் திருக்கோயிலில் சிறப்பாக நடை பெற்றது இங்குள்ள பலர்க்கும் நினைவிருக்கும். அப்பொழுது பொன்விழாவைத் தமது சொந்தப் பொறுப்பில் நடத்திய பெரியவர்கள் இருவராவர். ஒருவர், நம் அன்புக்குரிய திருவாளர் செ. இரத்தின சாமிச் செட்டியார் அவர்கள். மற்றொருவர் என் தந்தையார் ஆடூர் இரத்தினசபாபதி பிள்ளையவர் கள் என்பது இங்குள்ள பலரும் அறிந்த செய்தி யாகும்.

நமது பாரதநாடு இருபுறத்திலும் பகைவரது தாக்குதலை எதிர்த்து நின்று எதிர்கால முன்னேற்றிற்கு இன்றிமையாத திட்டங்களை நிறைவேற்றும் பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் நம் நாட்டு மக்கள் புறத்தேதங்கிய பகைவரது படைத் தாக்குதலுக்குச் சிறிதும் மனங்கலங்காது தங்கள் வாழ்க்கை வசதிகளை ஓரளவு குறைத்துக்கொண்டு தமக்குரிய கடமைகளை விழிப்பாக இருந்து நிறைவேற்றவேண்டிய நெருக்கடியானகாலம் இது. இத்தகைய நெருக்கடி நிலைமையேற்பட்ட காலத்தும் மக்கள் மனதிலே எதற்கும் கலங்காத தெளிவுநிலை ஏற்பட வேண்டுமானுல் அவர்கள் உறுதியான தெய்வ நம்பிக்கையுடையவர்களாக இருத்தல் அவசியம். இத்தகைய தெய்வ நம்பிக்கையை வளர்க்குமுகமாக 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதும் இல்லை' என்னும் திண்மையான வுள்ளத்துடன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக வாழும் வாழ்க்கை முறையினை நிலைபெறச் செய்வதில் நம் சமாஜம் போன்ற சங்கங்களின் தொண்டு நாட்டுக்கு மிகவும் தேவைப்படுவதாகும்.

நமது வேண்டுகோட்கிணங்கி இம் மணிவிழாவிலே அன்புடன் வந்து கலந்து கொள்பவர்கள், நாடறிந்த பெரியவர்கள். பாரத நாட்டிற் பல இடங்களிலும் கடல் கடந்த இலங்கை மலேயா முதலிய வெளிநாடுகளிலும் சென்று செந்தமிழும் சிவநெறியும் பரப்பிவரும் அருள்மொழியரசு திருமுருக கிருபானந்தவாரியாரவர்கள் இவ்விழாவில் சைவர் மகாநாட்டின் தலைவராக இசைந்து

இங்கு வந்துள்ளமை, நம் எல்லோர்க்கும் மகிழ்ச்சி யளிக்கும் நிகழ்ச்சியாகும். தாய்மொழி வளர்ச்சி யிலும் சமயவுண்மைகளையுணர்ந்து கொள்வதிலும் பேரார்வமுடையவரும் தமிழ்நாட்டுச்சட்டமன்றத் தலைவரும் ஆகிய உயர்திரு. செல்லபாண்டியன் பி. ஏ., பி. எல். அவர்கள், மாநாட்டைத் திறந்து வைப்பதற்கு இசைந்து இங்குவந்திருப்பதுநமக்குப் பெருமையளிப்பதாகும். தமிழிலும் சமயத்திலும் ஈடுபாடுடைய நம் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு. T. V. வாசுதேவன் ஐ. ஏ. எஸ். அவர்கள் இம்மாநாட்டில் கொடி யேற்றிவைக்க இசைந்துள்ளார்கள். மதுரை மீனாட்சி ஆலை உரிமையாளரும் தியாகராச கல்லூரியை மதுரையில் நிறுவிக் கல்விப் பணி புரிபவரும் தமிழிலும் சைவத்திலும் பேரார்வமுடை யவரும் ஆகிய உயர்திரு. கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார் திருமதி. இராதா தியாகராசன் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டுத் தலைவராக இசைந்து இங்கு வந்திருப்பது சைவ மங்கையர் எல்லோர்க்கும் ஊக்கமும் உவகையும் அளிப்பதாகும். சென்னை மாநிலக்கல்லூரி வடமொழிப்பேராசிரியர் உயர்திரு பெ. திருஞானசம்பந்தம் பிள்ளை எம். ஏ. அவர்கள் நம் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர் கள் அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் சைவப் புலவர் மாநாட்டிற்கும் தலைவராக வந் திருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. சென்னையில் ஆங்கில மருத்துவத் துறையிற் புகழ் பெற்று விளங்குபவரும் தில்லையம்பலப்பெருமான்

திருவடியில் அளவில்லாத பேரன்புடையவரும் ஆகிய திருவாளர் டாக்டர் இரத்தினவேல் சுப்பிர மணியம் அவர்கள் சைவ மங்கையர் மாநாட்டின் தொடக்க உரை நிகழ்த்த அன்புகூர்ந்து இசைந் துள்ளார்கள். இறைவன் ஐந்தொழில் ஆடல்புரியும் திருத்தலமாகிய இத் தில்லையம்பதியிலே நிகழும் மணிவிழாவிற் கலந்துகொண்டு சிறந்த பொரு ளுரைகளை வழங்குவதற்கெனத் தமிழ் நாட்டில் தலைசிறந்த புலவர் பெருமக்களும் பேரறிஞர்களும் நமது வேண்டுகோட்கிணங்கி இங்கு வந்திருப்பது மணிவிழாவுக்குப் பொலிவுதரும் நிகழ்ச்சியாகும்.

இவ்விழாவிலே கலந்து கொண்டு சைவ சித்தாந்த சமயத்தின் நுண்பொருள்களைக் கேட்டு மகிழும் விருப்புடன் தமிழ் நாட்டிற் பல மாவட்டங் களிலிருந்தும் இலங்கையிலிருந்தும் மலேயாவி லிருந்தும் சைவப்பெருமக்கள் பலர் இங்கு வந்திருப்பது எங்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ்வாறு நம் சமாஜத்தின் மணிவிழா சிறப்பாகநிகழத் திருவருள் புரிந்தருளும் நடராசப் பெருமானை வணங்கி, இங்குத் திரளாக வந்துள்ள சைவப் பெருமக்களாகிய உங்கள் எல்லோரையும் வருக வருக என உவகையுடன் வரவேற்று வரவேற்புக்குழுவின் சார்பில் எனது அன்புகலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

வைர விழா, சிதம்பரம்

சைவ இளைஞர் சைவப் புலவர் மாநாட்டுத் தலைமை உரை

(2 — 1 — 66)

பே. திருஞானசம்பந்தன், எம்.ஏ., எல்.டி.,
(வடமொழிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை)

மெய்யன்பர்களே ! வணக்கம்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் மணிவிழாவின் அணியாய் நடைபெறும் சைவ இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்ளும் பேற்றினை அளித்த சமாஜத்தினருக்கு எனது உளங்கனிந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். தவத்திரு ஞானியார் சுவாமிகளின் மாணுக்கராக இருந்த சைவ சீலரான எனது தந்தையின் தவப்பயனுகவே நான் உங்கள் முன்னிலையில் சில சொற்கள் கூறும் வாய்ப்பினைப் பெற்றிருப்பதாகக் கருதுகிறேன்.

சைவநெறி, இயல்பாகத் தோன்றி மெய்யறிவு பெற்ற பெருமக்கள் காட்டிய வழியில் நிலவுவது. அதைத் தோற்றுவித்த பெருமகன் இவன் என்று சுட்டப்படுவதில்லை. தோன்றிய இடமோ காலமோ வரையறுத்தற்கில்லை. நமது சமயம் வேதாகமங்களையும் தமிழ் சாத்திர

தோத்திர நூல்களையும் அடிப்படையாகக் கொள்வதோடமையாது அறிவாராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட சிறப்பு வாய்ந்தது. அதன் தொன்மையையும் பெருமையையும் நம் நாட்டு நல்லறிஞர்களேயன்றிப் பிற நாட்டவரும் போற்றியிருத்தல்நோக்கத்தக்கது.சர் ஜான் மார்ஷல், புனிதர் கௌடீ முதலானோர் சைவமே இன்றும் நின்று நிலவும் சமயங்களில் மிகப் பழமையானது என்று கூறிச்சென்றனர். வேறெந்த இந்திய சமயத்தைக் காட்டிலும் உயிர்களிடத்து இறைவன் காட்டுகின்ற பெருங் கருணை சைவ சமயத்திலேதான் காணப்படுகிறது எனப் புனிதர் மக்னிகால் கூறியுள்ளார். இத்தகைய சைவம் மொஹஞ்சதரோ காலம் முதல் நம் நாட்டுப் பல்வேறு பகுதிகளிலும் சிற்சில மாறுதல்களுடன் வழங்கிவந்திருக்கிறது.

ருக் வேதத்தில் ருத்ரன் எனவும், யஜுர்வேதத்தில் பசுபதி, சர்வன், பவன், சம்பு, சங்கரன், சிவன் எனவும் நம் பெருமான் அழைக்கப்படுகிறான். அதர்வவேதத்தில் மகாதேவன், ஈசானன் என்றும் சுட்டப்படுகிறான். சுவேதாசுவதரோபநிடதம் 'இறைவன் அனைத்துயிரிடத்தும் தங்கியிருக்கின்றான்' எனவும், 'பாலிற்படு நெய் போல் உலகெங்கிலும் நீக்கமற நிறைந்திருக்கும் அவனை அறிந்தால் எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுவோம்' என்றும் கூறுகிறது. 'க்ருதாத் பரம் மண்டமிவாதி சூக்ஷ்மம் ஞாத்வா சிவம் சர்வபூதேஷு கூடம், விச்வஸ்யைகம் பரிவேஷ்டிதாரம் தேவம் முச்யதே சர்வபாசை:' (4-16).

மகா பாரதத்தில் அர்ஜுனன் துர்க்கையையும் சிவனையும் வழிபடுவதான வரலாற்றையும், பாசுபத சைவத்தைப் பற்றிய குறிப்பையும் காண்கிறோம். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பதஞ்சலி முனிவர்

'சிவபாகவதர்' என்றழைக்கப்படும் பக்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த குஷான மன்னனான வேமா காட்பைசஸ் தன்னை மாஹேசுவரன் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகிறான். அவன் வெளியிட்டுள்ள நாணயங்களில் நந்தி உருவமும் திரிசூலம் தாங்கிய சிவனுருவமும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த வராஹமிஹிரர் திருநீறணிந்த அந்தணர்கள் விக்ரஹப் ப்ரதிஷ்டை செய்யத்தக்கவர்கள் என்று குறிப்பிடுகிறார். ஏழாம் நூற்றாண்டில் ஹர்ஷவர்த்தனர் காலத்தில் வாழ்ந்த ஹ்யூன் சாங் என்ற சீனயாத்திரிகரும், பாணபட்டன் என்ற வடமொழிப்புலவரும் பாசுபதர்களைப் பற்றிப் பல விடங்களில் எழுதியிருக்கிறார்கள். காளிதாசன், பாரவி போன்ற கவிஞர்கள் சிவபரத்துவத்தைப் பலவிடங்களில் பரக்கக் கூறியிருக்கிறார்கள். மகாராஷ்டிரத்தில் உள்ள நாசிக்கில் கபாலேசுவரர் வழிபாட்டிற்கென ஒருகிராமம் மான்யமாக விடப்பட்டது ஏழாம் நூற்றாண்டு சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ளது. காஞ்சியில் ஏழாம் நூற்றாண்டில் அரசு செலுத்திய மகேந்திரவிக்கிரமவர்மன் என்ற பல்லவ வேந்தன், தான் இயற்றிய மத்தவிலாஸ பிரஹஸனம் என்ற நாடகத்தில் காபாலிகரைப் பற்றிக் குறிப்பிடுகிறான். ராஜசிம்மபல்லவன் சைவசித்தாந்தத்தில் தேர்ந்தவன் என்பது அவன் கட்டிய கோயிலில் உள்ள கல்வெட்டின் வாயிலாக அறியக்கிடக்கிறது. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆதிசங்கரர் தமது பிரம்மசூத்திர பாஷ்யத்தில் சிவன் நிமித்த காரணன் என்ற கொள்கையுடைய சைவரைக் குறிப்பிடுகின்றார். காஷ்மீரத்தில் ஒன்பதாம் நூற்றாண்டு தொடங்கி ஆதிசங்கரர் செய்த அத்வைதப் பிரசாரத்தால் சைவத்தில் அத்வைத நிழல் படாக் தொடங்கிவிட்டது. தென்னாட்டிலும் சில சைவ

வாதிகளிடையே இதை நாம் காணலாம். ஸ்ரீகண்டர், அப்பைய தீக்ஷிதர் போன்ருருடைய நூல்கள் இதற்குச் சான்று.விரிவஞ்சி இப்பட்டியலை நிறுத்திக்கொள்கிறேன். தொன்று தொட்டு நேபாளம் முதல் கன்யாகுமரி வரையில்—ஏன்—அதற்கும் அப்பால் ஈழத்திலும் சைவம் ஏதோ ஒரு வகையில் இருந்து வந்திருக்கிறது என்பது தேற்றம். ஏழாம் நூற்ருண்டு முதல் தமிழகத்தில் சமயாசாரியர்கள் ஆற்றிய அரும்பணியின் பயனுக செம்மையுற்ற சைவம் தழைத்தோங்கியதை நாம் அறிவோம்ஆதலின் அதுபற்றி எதுவும் கூறத் தேவையில்லை.

வேதங்களும் சிவாகமங்களும் சைவத் திருமுறைகளும் சாத்திரங்களும் சித்தாந்த நெறிக்குப் பிரமாணமாக விருப்பவை. தமிழர் சமயமாகிற சித்தாந்த நெறிக்கு வடமொழியில் ஆக்கப்பட்ட வேதாகமங்கள் எங்ஙனம் பிரமாணமாகவியலும் என்ற மயக்கம் சிலருக்கு ஏற்படக்கூடும். இதுபற்றி ஒரு சிறிது சிந்தித்தல் நலம். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வடநாட்டில் வசித்து வந்து ஆரிய மக்களும் திராவிடமக்களும் மொழி, இனம், நாகரிகம் என்று பல்லாற்ருனும் கலந்துவிட்டனர். சொல், கருத்து, செயல்முறை ஆகிய பலதுறைகளிலும் இரு குழுவினரும் கொண்டும் கொடுத்தும் வாழ்ந்துவந்தனர். எனினும் வேதாகமங்களும் பிற சாத்திரங்களும் பெருமளவில் வடமொழியிலே இருப்பது கொண்டு இவையெல்லாம் ஆரியருக்கே உரியவை என்று மயங்குவோர் உண்டு. வடமொழியிலே எண்ணிறந்த சாத்திர நூல்கள் இருப்பதற்குக் காரணம் நாட்டின் அவ்வப்பகுதியிலுள்ள அறிஞர் பெருமக்கள் நாடு முழுவதிலும் தங்கள் கொள்கைகள் பரவவேண்டும் என்றெண்ணி வடமொழியிலே நூல்களை எழுதினர், பரப்பினர், போற்றினர். ஆகவேதான் நாடெங்கிலும் அத்வைதத்தைப் பரப்ப எண்ணிய

தென்னாட்டவரான ஆதிசங்கரர் வடமொழியில் சூத்திர பாஷ்யம் முதலான நூல்களை எழுதி நாடெங்கிலும் அதைப் பரப்பமுடிந்தது. தமிழகத்திலே பக்திநெறியைப் பரப்பக் கருதிய நமது சமயகுரவர்கள் தமிழிலே பாக்கள் யாத்தனர். வடமொழியில் ஆகமங்கள் எழுதப்பட்ட காரணத்தினால்தான் சைவம் நேபாளத்திலும் காஷ்மீரத்திலும் குஜராத்திலும் தமிழகத்திலும் இன்னும் பலவிடங்களிலும் பரவியிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே நம் சமயத்திற்கேற்ற கருத்துக்கள் எந்த மொழியில் இருந்தபோதிலும் அனைத்துமே நமக்கு உரியவை. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'. வடமொழியை ஆரியரோடு மட்டும் பிணைப்பதோ தமிழ்மொழியை திராவிட இனத்தவரோடு மட்டும் பிணைப்பதோ பொருந்தாது. மொழி ஒரு கருவி. அதை யாவரும் பயன்படுத்தலாம். ஆகவேதான் வேதம் பொது ஆகமம் சிறப்பு என்ற மரபு நம் முன்னோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'வேதமொ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்' என்றார் திருமூலர்.

நம் சமயத்தின் முதல்வன் சிவபெருமான். அவன் முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம் பொருளாகவும், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனாகவும் உள்ளவன். ஆகவே அவனைச் சார்ந்த சமயமும் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெருஞ் சோதியாக விளங்கி பாச விருளை நீக்கி நம்மை எல்லாம் அவன் திருவடியைச் சேர்ப்பிக்கும் பெருமையது என்பது குறிப்பு. அந்த சிவமே அன்பு என்று கண்டார் திருமூலர். இதையே 'அயரா அன்பு' என்று சிவஞானபோதம் கூறும். 'இறைவனைப்பற்றி இடையறாது முறுகி வளரும் அன்பின் முதிர்ச்சியிலே அச்சிவம் விளங்கும்' என்று பொருள் கூறுவர்

அறிஞர். மாணிக்கவாசகர் போன்றவர்கள் இறைவனிடத்து இடையருது அன்பைப் பெருக்கி வந்தார்கள். சிவமாம் தன்மையைப் பெற்ருர்கள். இதனை 'ஆடகச் சீர்மணிக் குன்றே! இடையரு அன்புனக்கு என் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம் உடையானே' என்ற மாணிக்கவாசகத்தில் காணலாம். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் தங்கியிருப்பவன் ஆதலால் அவை அனைத்திடத்தும் அன்பு செலுத்துவதே மேலான அறம். இவ்வன்பு செயலில் வெளிப்படவேண்டும். 'நடமாடக் கோயில் நம்பர்க் கொன்றீயில் படமாடக் கோயில் பகவற்கதாமே' என்ருர் திருமூலரும். இது இன்று சமூக சேவை என்று சொல்லப்படுவதற்கும் மேலான ஒரு நிலை. நம் தலைவனை சிவபெருமானே ஒரு பெரும் தொண்டன் என்பதை நாவுக்கரசர் 'தொண்டலால் துணையுமில்லை' என்ற சொற்களில் சுட்டியிருக்கிருர். நஞ்சுண்டு அமைந்த நாகரிகக் கடவுள் நம் பெருமான். பேராற்றல் படைத்த அவன் உலகம் உய்யும் பொருட்டுச் செயற்கரும் அச் செயலைச் செய்தான். நாமும் அத்தகைய சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சராய் அவர் காட்டிச் சென்ற செந்நெறியில் நம் சிற்றறிவிற்கும் சிறு ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் பணிசெய்து கிடப்போமாக.

இன்றைய உலகில் பலநாட்டவரும் ஒன்று சேர வேண்டும் என்று எண்ணுகின்ற காலத்தில் நமது சமயத்திலே நாம் கொண்டுள்ள பற்றும் விரிந்த ஒன்ருக இருத்தல் வேண்டும். விரிவிலா அறிவினர் வேருெரு சமயம் செய்து எரிவினுற் சொன்ஞரேனும் அன்பால் அனைவரையும் பிணைத்தல் வேண்டும். தென்னுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன் அன்ருே? சமய நெறிகளும் சடங்குகளும் நம்மை நாம் செம்மைப் படுத்திக் கொள்வதற்கு வகுக்கப்பட்டனவேயன்றி இந்நெறிகளும் சடங்

குகளும் நம்மை ஒரு குறுகிய கட்டுக்குள் அகப்படுத்திக் கொள்வதற்கல்ல. அவரவர் நிலைக்கும் பக்குவத்திற்கும் ஏற்ப இவற்றை அமைத்துக் கொள்ளுதல் இன்றியமை யாதது. இதற்கு அடிப்படையாக சாத்திர தோத்திர நூல்களை நன்காராய்ந்து தெளிவு பெறுதல் வேண்டும். கற்றதனால் ஆயபயன் என்கொல்? என்ற வினாவிற்கு இன்று கல்வித்திட்டம் வகுக்கின்றவர்கள் மறுமொழி கூற இயலாத நிலையில் இருக்கின்றார்கள். இந்நிலை மாற இளைஞர்களும் பெரும்பொறுப்பு ஏற்கவேண்டும்.

தில்லையிலே குழுமியிருக்கின்ற நாம் இங்கு வீற்றிருக் கும் பெருமானை நினைவு கூர்தல் பொருந்தும். சைவத்திரு வுருவங்களிலே கலையழகும்,கற்பனைத் திறனும், தத்துவக் குறிப்பும் ஒருங்கே அமையப்பெற்ற ஒன்றுதான்நடராஜப் பெருமான் திருவுருவம். சித்தமும் செல்லாச் சேட்சியன் திருச்சிற்றம்பலத்தில் குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் கொண்டிலங்கும் கூத்தப் பெருமானைக் காட்சிதருகின்றார். 'என்று வந்தாய்?' என் னும் திருக்குறிப்பை எம்பெருமானிடத்தில் காண்கிறோம். மாணிக்கவாசகர் போன்ற பக்தர்களையும் ஆனந்த குமார சாமி போன்ற கலாரசிகர்களையும் ஸர். ராதாகிருஷ்ணன் போன்ற தத்துவ மேதைகளையும் இத்திருவுருவம் ஈர்த் திருக்கிறதென்றால் அதன் சிறப்பை நாம் அதிகம் கூறத் தேவையில்லை. 'பூதங்களைந்தாகிப் புலனாகிப் பொருளா கிப் பேதங்களனைத்துமாய் பேதமிலாப் பெருமையனை கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை' அன்று மாணிக்கவாசகர் கண்டார்.

வேதங்க ளாடமிகு ஆகம மாடக்
கீதங்க ளாடக் கிளர்அண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம்முழு தாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தே'

என்றவாறு ஒய்வற்ற ஒருபேரியக்கத்தை, அருளாற்றலை அதில் நாம் காண்கிறோம். அவ்வியக்கத்தினூடே ஓர் அமைதியையும் காண்கின்றோம். இப்பேரண்டத்தில் அணுக்கள் போன்ற நாமும் இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துவதுபோல் அமைந்திருக்கிறது அத்திருவுருவம்.

பதஞ்சலியும் வியாக்கிரபாதரும், சமயாசாரியர்களும் உமாபதி சிவமும், திருநீலகண்டரும், திருநாளைப் போவாரும், ஞானப்பிரகாசரும், ஆறுமுக நாவலரும் இன்னும் பல சைவப் பெரியார்களும் இத்தலத்திற்குப் பெருமைதேடித் தந்திருக்கிறார்கள்.

'அனைத்துலகும் தொழும் தில்லையின்' எல்லையிலே எல்லை காக்கும் தில்லைக் காளியைக் காண்கின்றோம். சிவனும் சக்தியும் அறிவும் ஆற்றலும் அரண் செய்கின்றன இத்தலத்தை.

கீழெல்லையில் அடியேனை எட்டாண்டுகள் இருத்தி ஆளாக்கிய அண்ணாமலை நகர் அன்று வேட்கள நன்னகர் என்று ஞானசம்பந்தரால் போற்றப்பட்டுள்ளது. அந்நகருக்கு அப்பர் பெருமான் சென்றிருக்கிறார். அவர் பாடலுடன் எனது சிற்றுரையை முடிக்கிறேன்.

நன்றும் நாடொறும் நம்வினை போயறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

முருகன் அச்சகம், சென்னை-14

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

61-ஆம் ஆண்டு விழா

—: ★ :—

அழைப்பும் அறிவிப்பும்

++++++++++++++++++++++++

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

நன்று உடையானை, தீயது இலானை, நரை வெள் ஏறு
ஒன்று உடையானை, உமைஒரு பாகம் உடையானை,
சென்று அடையாத திருஉடையானை, சிராப்பள்ளிக்
குன்று உடையானை, கூற, என் உள்ளம் குளிரும்மே.

—சம்பந்தர் தேவாரம் (1-98-1)

அன்புடையீர் !

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் 61-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பொதுக் கூட்டமும், அதன் அங்கமாகச் சைவர், சைவ இளைஞர் மாநாடுகளும், 30, 31-12-66, 1-1-67 ஆகிய வெள்ளி, சனி,

ஞாயிற்றுக்கிழமைகளில், **திருச்சிராப்பள்ளி, மேல் அரண்சாலை, தேவர் மன்றத்தில்** பின்னுள்ள நிகழ்ச்சி முறைப்படி நிகழும்.

காஞ்சீபுரம் - தொண்டை மண்டலம் ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம் குருமகா சந்நிதானம் **தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்** சைவர் மாநாட்டிற்கும், இராம நாதபுரம் - **திரு. காசிநாத துரை, எம். பி. அவர்கள்** சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

சித்தாந்த சைவம் பற்றி அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள்.

அன்பர்கள் அனைவரும் அங்கத்தினரும் வந்து கேட்டு, விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தினர்கள் வருகை புரிக.

இங்ஙனம் :

சமாஜத்தினர் :

தலைவர் :

கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ.ஏ.எஸ். (ஓய்வு).

உப தலைவர்கள் :

ராவ்பகதூர் - க. அரங்கசாமி முதலியார்

ராவ்சாயிப் - நல். முருகேச முதலியார்

செயலாளர் :

தி. கி. நாராயணசாமி நாயுடு.

துணைச் செயலாளர் :

மு. நாராயணசாமி முதலியார்

வரவேற்புக் குழுவினர், திருச்சி :

தலைவர் :

திருக்குறள்வேள் - ஜி. வரதராஜப் பிள்ளை, பி. ஏ.

துணைத் தலைவர்கள் :

ஆ. பொன்னுசாமி பிள்ளை, கி. ஆ. பெ. விசுவநாதம்

கூட்டு அமைச்சர்கள் :

சோ. கிருஷ்ணன், தி. சு. சிவப்ரகாசம்

பொருளாளர் :

லெ. அரு. அருணாசலம் பிள்ளை

உறுப்பினர்கள் :

ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார்
ஏ. பி. ஜி. முருகேசன் செட்டியார்
டி. எம். முத்துசாமி பிள்ளை
பெ. குப்புசாமி பிள்ளை
எஸ். கே. கே. மாணிக்கம் செட்டியார்
அ. இராமநாதன் செட்டியார்
மா. சொக்கையன்
ம. ரெங்கசாமி பிள்ளை

ந. ச. கு. கணபதியா பிள்ளை

தி. சு. பட்டுச்சாமி ஓதுவார்

தே. துரைராசப் பிள்ளை

சா. பெரியசாமி

ஆ. சுப்பராயலு செட்டியார்

அ. வே. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

என். சுப்பிரமணியன் செட்டியார், எம். எல். ஏ.

கே. இராஜகோபால் பிள்ளை, எம். சி.

ஆர். ஜெயதேவன்

எம். ஏ. அருணசல முதலியார்

எச். தாண்டவராய பிள்ளை

சிவகுருநாத பிள்ளை

வீ. உலகநாதன்

ஆத. நாச்சியப்பச் செட்டியார்

எல். ஏ. பரமன் செட்டியார்

ஆ. வி. க. ஆவிச்சி செட்டியார்

மு. சுப்பிரமணியன் செட்டியார்

வரவேற்புக் குழுவினர் அலுவலகம் :

எண் 33, புதுத்தெரு சந்து,
ஆண்டார் தெரு, திருச்சி - 2

சமாஜ அலுவலகம் :

எண் 12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

நிகழ்ச்சி நிரல்

(30 – 12 – 66) வெள்ளிக்கிழமை

காலை 7 மணி : மலைக்கோயில் தாயுமானர் திருமுன் வழிபாடு.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவர் மாநாடு**

இறை வணக்கம். சமாஜக் கொடியேற்றம்.

வரவேற்பு உரை :

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை, பி. ஏ., திருச்சி.

சமாஜ ஆண்டு அறிக்கை :

சமாஜச் செயலாளர்.

மாநாட்டுத் திறப்பு உரை :

தருமை ஆதீனம் தவத்திரு. வித்துவான் - **சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள்.**

நூல் வெளியீடு :

தவத்திரு. மீனாட்சிசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இயற்றிய "இறைஞான போதம்" - *திரு. ஜி. வரதராஜப் பிள்ளை எழுதிய பத வுரையுடன்.*

காஞ்சீபுரம் - திரு. க. வச்சிரவேல் முதலியார் எழுதிய "திரு உந்தியார் உரை."

உரை நவில்வோர் :

திரு. திவான்பகதூர் - தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., திருச்சி.

தலைமைப் பேருரை :

தவத்திரு. ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மாலை 4 முதல் 8 மணி வரை - **சைவர் மாநாடு**

இறை வணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. திரு. தத்புருஷ தேசிகர், தேவக்கோட்டை
—**சைவர் யார்?**

2. திரு. மு. அருணசலம், எம்.ஏ., திருச்சிற்றம்பலம்
—**சம்பந்தர் திரு உள்ளம்**

3. திரு. கீ. இராமலிங்க முதலியார், எம்.ஏ., சென்னை —**சுந்தரர் செந்தமிழ்**

4. திரு. வித்துவான் - ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை —**ஞான உரை**

5. திரு. இசைப் புலவர் - ப. சுந்தரேசம் பிள்ளை, கும்பகோணம்—**செம்பாலை** (திருத்தாண்டகம்)

(31 – 12 – 66) சனிக்கிழமை

உறுப்பினர் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவிப்பு

காலை 9 முதல் 1 மணி வரை சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம். கூடுமிடம் மௌன மடம். உறுப்பினர்கள் மட்டும் தவறாது வருக.

1. 1966-ஆம் ஆண்டு அறிக்கையும் கணக்கும் அங்கீகரித்தல்.
2. 1967-ஆம் ஆண்டுக்கு ஆலுவலர் தேர்தல்.
3. சமாஜக் கட்டட அபிவிருத்தி.
4. தீர்மானங்கள்.

மாலை 4 முதல் 8 மணி வரை - **சைவர் மாநாடு**

இறை வணக்கம், தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. திரு. இராதாகிருஷ்ணன், எம். ஏ., திருச்சி
   —**பெரிய புராணத்தில் மனை வாழ்க்கை**

2. திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், எம். ஏ., தாம்பரம்
   — **அப்பர் தேவாரத்தில் இலக்கியச் சுவை**

3. திரு. வித்துவான் - க. வெள்ளைவாரணனார், அண்ணாமலைநகர்
   —**திருமுறைகளும் சித்தாந்தக் கருத்துக்களும்**

4. திரு. வித்துவான் - அ. நடேச முதலியார், அண்ணாமலைநகர்
   —**சாத்திரமும் தமிழும்**

5. திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி., காஞ்சீபுரம்
   —**திரு உந்தியார்**

(1 – 1 – 67) ஞாயிற்றுக்கிழமை

காலை 9 மணி முதல் 1 மணி வரை

திருமுறை இசை அரங்கு

தத்துவக் கருத்தரங்கு - பொருள் : " திருவெம்பாவை "

(**குறிப்பு** :—அரங்கில் பங்கு கொள்ள விரும்புவர்கள் செயலரிடம் பெயர் கொடுக்கவும்.)

மாலை 4 முதல் 7 மணி வரை - **சைவ இளைஞர் மாநாடு**

இறை வணக்கம்.

தலைமை உரை :

திரு. **காசிநாத துரை**, எம். பி.

சொற்பொழிவுகள் :

1. திரு. இலஞ்சி. அ. இ. முத்துக்குமாரசாமி, திருச்சி
   —**அப்பர் அருள்வாக்கு**

2. திரு. வித்துவான் - கு. சுந்தரமூர்த்தி, திருப்பனந்தாள் —சாத்திரங்களின் சுவைநலம்

3. திரு. ஆதி. முருகவேள், எம். ஏ., திருச்சி —அருட்பயன்

4. திரு. ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்., சென்னை —நந்தி உரைத்தருளும் ஞான நூல்

5. திரு. வித்துவான்-அருணைவடிவேல் முதலியார், தருமபுரம் —சிவப்பிரகாசத்தில் திருமுறைக் கருத்துக்கள்

6. திரு. ஜான் கிரேஸ் (Connecticut, U. S. A.) —Human Will in Saiva Siddhanta

இரவு 7 முதல் 8 மணி வரை

தலைவர் முடிவுரை.

செயலாளர், வரவேற்பாளர் நன்றி உரை. வாழ்த்து.

குறிப்பு:—(1) மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும். சமாஜ உறுப்பினர் கட்டணம், ஆங்கில முத்திங்கள் இதழ் கட்டணம் மாநாட்டில் செலுத்தலாம். (2) தீர்மானங்களை அனுப்பும் அங்கத்தினர் சமாஜச் செயலாளர் பேருக்கு சமாஜ முகவரிக்கு 25-12-66 தேதிக்குள் அனுப்புக. (3) உறைவிடம் தேவையுள்ள சமாஜ உறுப்பினர்கள் 25-12-66 தேதிக்குள், வரவேற்புக் குழுச் செயலாளர், திரு. சொ. கிருஷ்ணன், 33, புதுத்தெரு சந்து, ஆண்டார் தெரு, திருச்சி - 2 என்ற முகவரிக்கு எழுதுக. (4) உறுப்பினர்கள் மட்டும் தங்க, மலையில் மௌன மடத்தில் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ளது. (5) மாநாட்டுச் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கான வசதி மாத்திரம் உறுப்பினர் அல்லாதவர்களுக்கு உண்டு.

முருகன் அச்சகம், சென்னை - 14

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

சைவத் தேர்வு வினாக்கள் - 1966

—: ★ :—

சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—1. ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் உட்பிரிவை விடுக.

2. எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

3. விடைகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இருக்கவேண்டும்.

1\. அ. மொழிமரபில் கூறப்படும் எழுத்திலக்கணங்கள் யாவை? அவற்றை அங்குக் கூறக் காரணமென்ன ?

ஆ. "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்"
"ஈரியல் மருங்கினும் இசைமை தோன்றும்"
—இவற்றின் பொருளைத் தெளிவு படுத்துக.

இ. எழுத்துகளின் பொதுப் பிறப்பு யாது?

ஈ. பின்வரும் தொடர்களுக்குப் புணர்ச்சி விதி கூறுக:

1. மணிக்கு. 2. தமது.
3. ஆன்கோடு. 4. ஆடிக்கு.
5. அவற்றுக்கோடு.

உ. மூன்றும் வேற்றுமைத் திரிபுகள் யாவை?

ஊ. சுட்டுப் பெயர்களுக்கு எத்துணை இடத்து விதிகள் கூறப்படுகின்றன? காரணமென்னை?

எ. திங்கட் பெயரும், நாட்பெயரும் எவ்வீறுகளில் வைத்தோதப் படுகின்றன? ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு சான்று தருக.

2. அ. "செப்பும் வினவும் வழாஅல் ஓம்பல்"—இவ்வொரு தொடரைக் கொண்டு சேனவரையர் அமைக்கும் வழுவமைதிகள் யாவை?

ஆ. இயற்கைப் பொருள், செயற்கைப் பொருள்—இவை மொழிகளில் பயிலுந் திறத்தைச் சான்று கொண்டு விளக்குக.

இ. "எடுத்த மொழியினஞ் செப்பலு முரித்தே" —இதன் பொருளைத் தடைவிடைகளான் விளக்குக.

ஈ. கிளவியாக்கத்தை யடுத்து வேற்றுமை யியலை வைத்தமைக்குச் சேனவரையர் கூறும் விளக்கம் யாது?

உ. முதற்பெயர், சினைப்பெயர்—இவை ஒரு தொடர்க்கண்ணே வருங்காலத்து எவ்வாறு உருபேற்கும்?

ஊ. பன்மைக்கே யன்றி ஒருமைக்கும் உரியவாய் வருவனவற்றைப் பன்மைப் பெயரென்று தொல் காப்பியர் கூறுவது பொருந்துமாற்றை ஆராய்க.

எ. இடையியல் முதற் சூத்திரத்திற்குச் சேனு வரையர் கூறும் இரு உரைகளையும் எடுத்துக் காட்டி விளக்குக.

3. அ. அறுவகைப் பெயரும் அறுவகைப் பொழுதும் ஐந்திணைக்கும் உரியவாதல் யாங்ஙனம்?

ஆ. பண்டைத் தமிழர் ஒழுகலாறுகக் கரந்தைத் திணையில் கூறப்படுவன யாவை?

இ. "சிறந்துழி ஐயஞ் சிறந்த தென்ப
இழிந்துழி இழிவே சுட்ட லான"
—இச்சூத்திரத்துக்கு இளம்பூரணர் கூறும் உரை யாது?

ஈ. கற்புக் காலத்துத் தலைவிக்குரிய கூற்று நிகழும் இடங்களுள் ஆறனைக் குறிப்பிட்டு விளக்குக.

உ. பெண்டிர்க்கே உரிய இயல்புகள் யாவை?

ஊ. இறைச்சிப் பொருளுக்கும் உள்ளுறை உவமத் துக்கும் ஒவ்வோர் எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

எ. இளிவரல், மருட்கை, வெகுளி—இவை மூன்றும் எவை பற்றித் தோன்றும்?

4. அ. உருவம் எதனுல் உணரப்படும்? அதன் வகை களைக் கூறி விளக்குக.

ஆ. அநுமானம் எத்துணை வகைப்படும்? அவற்றுள் ஒன்றனை விளக்குக.

இ. செயற்கை எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

இலக்கியம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—1. ஒவ்வொரு வினாவிலும் ஒவ்வோர் உட்பிரிவை விட்டு விடுக.

2. எல்லா உட்பிரிவுகளுக்கும் மதிப்பெண் சமம்.

I 1. திருநாவுக்கரசர் "பொன்னார்ந்த திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்" என்று கூறிய செய்தி யாது? எங்குக் கூறினார்?

2. "கால நிலைமையாலுங்கள் கருத்தில் வாட்ட முறீர்" இடஞ்சுட்டி விளக்குக.

3. நாவுக்கரசர் புராணத்தில் குறிப்பிடும் சமணர்கள் வழக்கங்கள் நான்கினைக் கூறுக.

4. சேக்கிழார் திருநாவுக்கரசரைப் புகழுமிடங்கள் இரண்டு கூறி விளக்குக.

II 1. சம்பந்தர் தேவாரத்திலிருந்து பதிபசுபாச உண்மையை நிறுவவல்ல தேவாரங்கள் வகைக் கொன்று சான்று தருக.

2. "திருஞானசம்பந்தரும் சமூகத் தொண்டும்" என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

3. சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவளுண் மெலிவே.

— இச்செய்யுளில் காணும் நயங்களை விளக்குக.

4. சம்பந்தரின் முற்காலத்து வாழ்ந்த அடியார் களையும் சம காலத்து வாழ்ந்த அடியார்களை யும் குறிப்பிடுக.

III 1. "பணியுமாம் என்றும் பெருமை" எனும் பண்பு திருவாசகத்தில் எவ்வாறு காணப்பெறுகிறது? விளக்குக.

2. திருவாசகத்தின் இறுதிப் பதிகம் யாது? அதில் ஏதாவது ஒரு செய்யுளை எழுதி அதன் கருத்தினையும் வரைக.

3. எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந் தவை யாவை? எப்படி என விளக்குக.

4. "தந்த துன்றன்னை" என்ற திருவாசகச் செய் யுளை எழுதி அதன் நயங்களை விளக்கி வரைக.

IV 1. திருவிசைப்பா ஆசிரியர்கள் யாவர்? அவர் களுள் ஒருவரைப் பற்றிச் சிறு குறிப்புத் தருக.

2. திருவிசைப்பாவில் பிற திருமுறைகளுள் இல்லாச் சிறப்பியல்புகளாகக் காணப்பெறு வன மூன்றினை வரைக.

3. இறைவனின் திருவுருவச் சிறப்பினைத் திரு விசைப்பா எவ்வாறு போற்றிப் புகழ்கிறது?

சாத்திரம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சிவஞான போத முதற் சூத்திரத்தினை எழுதி அதற்குப் பதவுரையும், இலக்கணக் குறிப்புக்களும் தந்து, அதிகரணப் பாகுபாடும் குறிக்க.

2. சிவஞான போதத்தில் வரும் உவமைகள் ஏதேனும் இரண்டினைச் சுட்டி, அவற்றை விவரிக்க.

3. சிவஞான போத வெண்பாக்கள் இரண்டினை எழுதி, அவற்றிற்குப் பொழிப்புரையும், இலக்கணக் குறிப்புக்களும் வரைக.

4, சிவஞான சித்தியாரின் கவிதைச் சுவையினை வலியுறுத்த இரண்டு செய்யுட்களை எடுத்துக் காட்டுக.

5. அருள்நந்தி சிவாசாரியார் உவமைகள் கூறுவதில் வல்லவர் என்பதற்கு ஏதேனும் ஓர் உதாரணம் தருக.

6. அருள்நந்தி சிவாசாரியார் தேவாரத் திருமுறைகளில் மிக்க ஈடுபாடு வாய்ந்தவர் என்பதனை நிறுவுக.

7. உமாபதி சிவம் சைவ சித்தாந்தத்தின் சிறப்பினை எங்ஙனம் விளக்குகின்றார் ?

8. சிவப்பிரகாசத்தில் வரும் "மாயை மாமாயை" எனவரும் செய்யுளின் பொருளைத் தெளிவுறுத்துக.

9. 'நிமித்த காரண பரிணாம வாதம்' என்னும் கொள்கையினைச் சுருக்கி வரைக.

10. சிவஞான சுவாமிகளின் அரும்பெரும் உரைத் திறனை யுணர்த்தச் சில குறிப்புக்கள் எழுதுக.

உரைநடை

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சைவ சித்தாந்தத்தின் உயர்ந்த கொள்கைகளை ஆசிரியர் மறைமலையடிகள் எவ்வாறு விளக்குகிறார்?

2. சிவஞான சித்தியார் பற்றித் திரு.ந.சிவகுருநாத பிள்ளையவர்கள் கூறும் முடிந்த ஆய்வு யாது? விளக்குக.

3. ஏதாவது ஒரு குறள் எழுதி அது சைவ சித்தாந்தத்தை எவ்வாறு விளக்கிச் செல்கிறது என்பதை விரிவாக ஆய்ந்து எழுதுக.

4. சிவஞான முனிவர் உரைநடை நூல்களிலிருந்து அவர் பல்கலைப் புலமை தெற்றெனப் புலப்படுமாற்றினை விளக்குக.

5. இயற்பகை நாயனார் அல்லது குங்கிலியக் கலைய நாயனார் பற்றி நாவலர் பெருமான் குறிப்பிடும் சிறப்புக் களை எழுதுக.

இளஞ் சைவப் புலவர் தேர்வு

இலக்கணம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

குறிப்பு :—எல்லா விஞக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சிறப்புப் பாயிரமாவது யாது? அதன் இலக்கணத்தைத் தெளிவாக விளக்குக.

2. குற்றியலிகரம் என்பது என்ன? அது எதனல் முப்பத்தேழாயின.

3. செய்யுள் விகாரங்கள் எவை? உதாரணத்தோடு விளக்குக.

4. தெரிநிலை வினைமுற்று விகுதிகள் எவை? விளக்குக.

5. உயிர் முன் உயிர் புணர்ந்து வரும் சூத்திரத்தினை விளக்குக.

6. திசைச் சொல்லாவன யாவை? விளக்குக.

7. ஆவிரம் வேர், செம்பொனன்று, மகத்துக்கை— இவற்றுள் இரண்டினுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

8. தொகாநிலைத் தொடர் மொழிகள் என்பவை எவை? அவற்றின் வகையினை விளக்குக.

9. பொருள்கோள் எத்தனை வகைப்படும்? அவற்றுள் ஒன்றினுக்கு உதாரணந் தருக.

10. பெருங்காப்பிய இலக்கணங்கள் யாவை?

11. வைதருப்ப நெறிக்குரிய இயல்புகளை விளக்குக.

12. தீவகவணி அல்லது வேற்றுப்பொருள் வைப்பணியின் உட்பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினுக்கு உதாரணங் காட்டுக.

13. விபாவனை அணி, அதிசயவணி, நுட்பவணி, சுவையணி—இவற்றுள் இரண்டினை விளக்குக.

14. ஐவகைச் சீர்வகைகளை விளக்குக.

15. சிந்தடி, நெடிலடி — இவைபற்றிக் குறிப்பு எழுதுக.

16. செந்தொடை, கூழை, மேற்கதுவாய் என்றால் என்ன? இவற்றுள் ஒன்றினுக்கு உதாரணந் தருக.

17. நேரிசைச் சிந்தியல் வெண்பா, ஆசிரியத்துறை, கலி விருத்தம்—இவற்றுள் இரண்டினுக்கு இலக்கணந் தருக.

18. "ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை"

இஃது எப்பாவில் எவ்வினத்தைச் சார்ந்ததாகும்? காரணம் காட்டுக.

19. மருட்பாவைப் பற்றி நீவிர் அறிந்த இலக்கணங்களைத் தொகுத்தெழுதுக.

20. ஒப்பு, ஆனந்தம் என்றால் என்ன? அவற்றுள் ஒன்றினை உதாரணத்தோடு விளக்குக.

இலக்கியம்

நேரம் : 3 மணி] [மதிப்பெண் : 100

I கீழ்வருவனவற்றுள் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக :—

1. திருமுருகாற்றுப்படையில் குறவர் முருகப்பெருமானை வழிபடும் முறை எங்ஙனம் விளக்கப்பட்டுள்ளது?

2. திருக்குறளில் துறவு என்ற அதிகாரத்தில் கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து வரைக.

3. வாழ்க்கைத் துணைக்கு இருக்கவேண்டிய சிறப்பியல்புகளைச் சுருக்கி வரைக.

4. சுந்தரர் தேவாரத்திலிருந்து நகைச் சுவைக்கு மூன்று சான்றுகள் தந்து விளக்குக.

5. கந்தர் கலிவெண்பாவில் காணக்கிடக்கும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக் காட்டுக.

6. கந்தரனுபூதியில் அருணகிரியார் தமது நெஞ்சிற்கும் உலக மக்களுக்கும் கூறியுள்ள அறவுரைகள் யாவை?

7. சுந்தரர் தேவாரத்தின் துணைகொண்டு சிவபெருமானின் பண்புகளைப் புலப்படுத்துக.

II கீழ்வருவனவற்றுள் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1. திருமுருகாற்றுப்படையில் வந்துள்ள பழமுதிர் சோலையின் இயற்கை வளத்தினை விளக்கி வரைக.

2. ஒப்புரவு அறிதல் என்ற அதிகாரம் அமைத்த வள்ளுவர் ஈகை என்று மற்றொரு அதிகாரம் பகுத்துக் கூறக் காரணம் யாது? இந்த இரண்டு அதிகாரங்களில் காணப்பெறும் ஒப்புமைகளைக் குறிப்பிடுக.

3. சுந்தரர் வரலாற்றினை அறிதற்கு அவரது தேவாரம் அகச்சான்றாக அமைந்துள்ள முறையினை விளக்குக.

4. சுந்தரருடைய புலமை நலத்தினை ஆராய்க.

5. கந்தர் கலிவெண்பாவில் கூறப்படும் முருகப் பெருமானின் திருவிளையாடல்களைப் புலப்படுத்துக.

6. "கந்தரனுபூதி" திருமூலரின் திருமந்திரத்தோடு ஒப்பிட்டுக் காணும் தகுதி பெற்றுள்ளது என்பர். (திரு. வ. சு. செ.) இக்கூற்றிற்குச் சான்றுகள் தந்து விளக்குக அல்லது கந்தரனுபூதியில் காணக்கிடக்கும் பக்திச் சுவையினைப் புலப்படுத்துக.

III கீழ்க்காணும் திருக்குறட்பாக்களில் யாதானும் ஒன்றிற்குப் பரிமேலழகர் கூறியுள்ள விளக்கவுரையினைக் குறிப்பிடுக.

1. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யின
ஏமப் புணையைச் சுடும். [மென்னும்

2. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

IV கீழ்க்காணும் உவமைகளுள் எவையேனும் மூன்று எவைகளை விளக்க வந்தன? உவமப் பொருத்தத்தினையும் ஆராய்க.

1. வளியிடைத் தீ எழுதல்.

2. பலவு மெழுந்து சுடர் பாலித்தல்.

4. கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி.

5. வேட்டுவன் புள்சிமிழ்த்தல்.

6. சமன் செய்து சீர்தூக்கும் கோல்.

V கீழ்க்காணும் பகுதிகளுள் மூன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் நயங்களையும் புலப்படுத்துக.

1. மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றொன்றும்
துங்கமடவார் துயர்தீர்ந்து.

2. நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனன்.

3. பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர் நடவீர் இனியே.

4. இருந்து நீர் தமிழோடிசை கேட்கும்
இச்சையாற் காசு நித்தல் நல்கினீர்.

5. மூவராயும் இருவராயும் முதல்வன் அவனேயாம்.

—

சாத்திரம்

நேரம்: 3 மணி] [மதிப்பெண்: 100

குறிப்பு:—எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. *திருவுந்தியாரைப் பின்பற்றியே திருக்களிற்றுப் படியார் இயற்றப்பெற்றது என்பதற்குத் தக்க சான்று ஏதேனும் ஒன்று தந்து விளக்குக.*

2. *திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் திருவாசகத்தில் மிக்க ஈடுபாடு உடையவர் என்பதனை நிறுவுக.*

3. *வித்தினைத் தேடி முளையைக் கைவிடுதல், கூட்டில் வாள் சாத்தி நிற்றல் என்னும் தொடர்களின் பொருளைத் தெளிவுறுத்துக.*

4. *திருக்களிற்றுப்படியாரில் தாபதர்களின் இயல்பு எங்ஙனம் விளக்கப்பெற்றுள்ளது அல்லது சிவன்பால் மன்னுயிர்கள் ஆவதற்கும் அழிவதற்கும் கூறப்பெற்ற உவமை யாது?*

5. *வித்தியா தத்துவங்கள் என்பன யாவை? அவற்றின் செயல்களை விவரிக்க அல்லது குரு லிங்க சங்கம வழிபாடு பற்றி மனவாசகங் கடந்தார் கூறுவன யாவை?*

6. *சிவஞான சுவாமிகள் எடுத்தாண்டுள்ள திருவருட் பயன் செய்யுட்கள் இரண்டினைக் குறிப்பிடுக.*

7. *குருவின் இன்றியமையாமையினைத் திருவருட் பயன் எங்ஙனம் வற்புறுத்துகின்றது?*

8. *'அணைந்தோர் தன்மை' பற்றி உமாபதிசிவம் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.*

9. வினா வெண்பாவில் வரும் வினாக்களுள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு விடை தருக.

10. கொடிக்கவியில் நீர் சுவைத்த ஏதேனும் ஒரு செய்யுளை எழுதிப் பொருள் விளக்குக.

உரைநடை

நேரம்: 3 மணி] [மதிப்பெண்: 100

குறிப்பு:—எல்லா வினாக்களுக்கும் மதிப்பெண் சமம்.

1. சைவம் எத்தன்மையது? அது எவ்வாறு சமரசத்தைத் தழுவியுள்ளது என்பதை மூன்று சான்றுகள் தந்து நிறுவுக.

2. வாகீசர் உண்மை மெய்யுணர் ஞானி என்னும் கருத்தை அகச்சான்றுகள் மூன்று காட்டி வலியுறுத்தி விளக்குக.

3. பட்டினத்தார் தாயுமானவர் பாடல்களின் ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி வரைக.

4. ஏனாதிநாத நாயனார் வரலாற்றினையாவது கடல் சுவற வேல் விட்ட படலத்தினையாவது விளக்கி வரைக.

ச மா ஜ வெ வ ளி யீ டு க ள்

	ரூ.	பைசா
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் முந்நூல் 0 40 அறுபத்து மூவர்	0	06
வைர விழா மலர் 2 00 அறப்பயிற்சிமாலை	0	50
குகார்ச்சனைத் திருமந்திரம்	0	06
சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழிபெயர்ப்பல்ல—120 காரணங்கள்	0	50
சிவஞான சித்தியார் - சிவாக்கிரக யோகிகள் உரையுடன்	0	50
சிவலிங்க வழிபாடு 0 50 பிரதோஷ வழிபாடு	0	20
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
முருக வழிபாடு அல்லது முருக தத்துவ அருள் விரத வழிபாடு	0	75
சிவஞான போதம்-எளிய உரையுடன் (சிறியது)	0	12
திருவெம்பாவை-உரையுடன் (சிறியது)	0	06
நான் நம்புவன சில 0 10 விநாயகர் வழிபாடு	0	20
கூட்டு வழிபாட்டுப் பாமாலை	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞானபோதம்—தெளிவுரையுடன்	0	50

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

சிறு நூற்றிரட்டு 1 25 சிவஞான தீபம்	0	50
சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் 1 50 செவியறிவுறூஉ	0	20

ரூ.பைசா

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம் 1 50

தபால்—ரயில் செலவு தனி.

" சித்தாந்தம் "—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 3. ஆயுள் சந்தா ரூ. 50.

" சைவ சித்தாந்தம் "—ஆங்கில முத்திங்கள் வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூ. 5.

கிடைக்குமிடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

SAIVA SIDDHANTA

A HIGH CLASS ENGLISH QUARTERLY JOURNAL

DEVOTED TO

Philosophy, Religion & Culture

Run by

The Saiva Siddhantha Maha Samajam,

12, East Mada Street, Mylapore, Madras-4.

Annual Subscription Rs. 5/- only.

PLEASE SUBSCRIBE AND ENCOURAGE.

முருகன் அச்சகம், சென்னை - 14

செங்குந்தமித்திரன் அச்சக மேலாளர் திரு. வீ. சம்பந்தன் அவர்கள் இளவல் திரு. வீ. குஞ்சு பி.ஏ. அவர்களுக்கும் சுந்தரப்பெருமாள்கோயில் திரு. T. சம்பூரய்யா அவர்கள் திருமகளார் செல்வி பானுமதி அவர்களுக்கும் 1–12–66 அன்று திருவேரகத்தில் திருமணம் சிறப்புடன் நிகழ்ந்தது. புதுமணத்தம்பதிகள் எல்லா நலன்களும் பெற்று நீடிய நல்வாழ்வு வாழ ஏரகத்துறை எம்மான் அருள்புரிய அவன் திருவடியிணைகளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

பிற செய்திகள்

கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் பக்தஜன சபையின் ஆதரவில் வித்துவான் M. S. துரைசாமி பிள்ளையவர்கள் 28–10–66ல் "வரகுணனுக்குச் சிவலோகம் காட்டிய படலம்" என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

சென்னை, இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபை, திருப்போரூர் கந்தசாமி திருக்கோயில் முதலிய பலவிடங்களில் 13–11–66 முதல் 20–11–66 முடிய கந்தர் சஷ்டி விழா மிக சிறப்புற நிகழ்ந்தது. முருகன் பெருமை பற்றியும், கந்த புராணம் பற்றியும் விரிவுரைகள் சிறப்புற நிகழ்ந்தன.

புரசைத் திருநெறிக்கழக 69ஆம் திங்கள் வழிபாடு 20–11–66 மாலை திருமயிலை விருபாட்சீஸ்வரர் திருக்கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது.

காஞ்சி குமரகோட்டத்தில் 19–11–66 அன்று கந்த புராணச் சொற்பொழிவு நிறைவு விழா நிகழ்ந்தது. பலர் கலந்து சொற்பொழிவாளர் வித்வான் ஜயசெந்தில்நாத முதலியாரைப் பாராட்டினர்.

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபைச் சார்பில், கரூர் வித்துவான் திரு. ச. நடேசனார் அவர்களால் நிகழ்த்தப் பெற்றுவரும் கந்தபுராண விரிவுரைத் தொடரில் 'பார்வதி தேவியார்' திருமண விரிவுரை 20–11–66ல் சபைக் கட்டிடத்தில் திருச்சி வக்கீல் திரு. S. சிவப்ரகாசம் அவர்கள் தலைமையில் நிகழ்த்தப் பெற்று விரிவுரையாளருக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது. சபைச் செயலாளர் திரு. சிவப்ரகாசம் நன்றி கூறினார்.

மதிப்புரை

அகில இந்திய நாட்டு மருத்துவ மன்றத்தின் பதினோராவது மாநாட்டு நினைவு மலரும் அம்மாநாட்டின் நிகழ்ச்சிக் குறிப்பு நூலும் வரப் பெற்றோம். இம்மாநாடு சென்னை அரசாங்கத்தின் ஆதரவில் ஜூன் மாதம் சென்னையில் கூடிற்று. மாநாட்டுக் குழுத்தலைவரும், சென்னை அரசாங்கத் துணைச் செயலாளருமான திரு K. சிதம்பரம் அவர்களின் பெருமுயற்சி காரணமாக இம் மாநாடு சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. இம்மாநாட்டில் சித்த வைத்தியம் முக்கிய இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. "சித்தவைத்தியத்திற்கும் சைவசிந்தாந்த சாத்திரத்திற்கும் மிக்க தொடர்புண்டு, இது சம்பந்தமான ஆராய்ச்சி நல்ல பயன் தரும்" என்பது, திரு K. சிதம்பரம் அவர்களின் உறுதியான கருத்து. சித்தர் சித்தாந்த சம்பந்தமுடையோர் என்பது பெயரிலிருந்தே புலப்படும். ஆகவே அவர்கள் நூல் நம் சமய சம்பந்தமுடையது என்பது கூறாமலே அமையும். திருமூலர் போன்ற பல நாயன்மார்களைச் சைவ சித்தாந்திகள் சித்தர் வரிசையிலும் எண்ணுவதுண்டு. இந்நினைவு மலரில் திருக்குறளின் 'மருந்து' என்னும் அதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு இடம் பெற்றுள்ளது பாராட்டற்குரியது.

கொ நீ. சி.

வருந்துகிறோம்

நமது சமாஜ உறுப்பினரும் புரசைத் திருநெறிக் கழகத்தின் செயலாளருமாகிய திரு. செ. சுந்தரனார் அவர்களின் அருமைத் தந்தையார் திரு. கி. செங்கல்வராய முதலியார் அவர்கள் 14-11-66ல் இறையடி எய்தினார்கள். 29-11-66 அன்று இறுதிச் சடங்கு நிகழ்ந்தது. சைதை தேவாரம் நடராஜனார் அவர்கள் திருமுறையரங்கும் நிகழ்ந்தது. நம்மை விட்டுப் பிரிந்த அப்பெரியாரின் ஆன்மா எல்லாம் வல்ல இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க அவனருளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.